Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 30.00

ஒக்டோபர் 23 –29, 2014

# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1089



## ஐ.நா.வில் விதைத்தது வடக்கில் விளைந்தது



## புதிய வரவுகளால் கதிலங்கும் மனிதகுலம்





## மோடியும் ஊடகங்களும்

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

## குத்துவிளக்கின் மகிமை

இந்துமதம் பல தத்துவக் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டதாகும். அந்தவகையில் அது குத்துவிளக்கின் ஊடாகவும் பல தத்துவ உண்மைகளைப் போதிக்கின்றது.

குத்துவிளக்கின் அடிப்பாகமானது பிரம்மதேவியையும், துண்டுப்பாகம் மகாவிஷ்ணுவையும், அகல் விளக்கானது உருத்திரனையும், திரியின் கண்கள் மகேஸ்வரனின் பஞ்சமுகத்தையும் மேல்தண்டு ரூபத் திருமேனியையுடைய சதாசிவனையும் குறிக்கிறது.

விளக்கிற்கு ஊற்றும் எண்ணெய் அல்லது நெய்யானது உருவமின்றி எங்கும் பரவி நிற்கும் நாதத்துவத்தைக் குறிக்கின்றது. திரி வெண்மைநிற ஒளியையும், சுடர் (தீப்பிழம்பு) இலக்குமிதேவியின் சொருபமாகவும், ஒளிபிரகாசமாய் இருப்பதால் இது ஞானமயமான சரஸ்வதியின் சொருபத்தையும், சூடு எரிக்கும் சக்தியானது அழிக்கும் சக்தியாகிய உருத்திராணியின் சொருபமாகக் கருதப்படுகின்றது.

**அனந்த நாராயணன், கைவேலி**

## ஆன்மீகம்: வாலிபனே எழுந்திரு!

இன்றைய உலக நடப்பில் ஒவ்வொரு இனத்துக்குமான கலாசாரம் மாசுபடுத்தப்படுகிறது என்பதை நாம் வெளிப்படையாகவே பார்க்க முடிகிறது. நாகரிகம் எனும் உச்சமோகத்துள் இளம்வயதினர் குறிப்பாக வாலிபர்கள் சிக்கி அல்லலுறுவதை அவதானிக்க முடிகிறது.

இப்படியாக பாதை மாறிப் பயணிக்கும் வாலிபர்களைப் பார்த்து "வாலிபனே! எழுந்திரு (லூக்கா - 7:14)" என வேதம் விளிக்கிறது. வேதம் கூறும் வார்த்தையை ஏற்றுக்கொண்டு, பாவத்திற்குள் மரித்துப்போயிருந்தவர்கள், புதியதொரு பிறப்பாக (இரட்சிப்பு) பிறந்து புதிய வாழ்க்கை வாழும் அதேவேளை, இன்னமும் எழுந்திராத அநேக வாலிபர்களையும் பார்த்துக் கவலை கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆயினும், மரித்துப்போன வாலிபனை "வாலிபனே எழுந்திரு..." என்றுகூறிய இயேசு, இன்றும் எழுந்திருக்கும்படி கூறிக்கொண்டிருப்பதால், அவரின் சத்திய வார்த்தைக்கு செவிமடுத்து எழுந்துகொண்டிருப்பவர்கள், சகலவித இடர்களுக்கும் விலக்கப்படுவார்கள்" என்பது யதார்த்தமாகிறது.

**சாமுவேல், புதுக்குடியிருப்பு**

## அல்லாஹ்வின் பதில்

அபூபக்கர் ஷிப்லீ(ரஹ்) என்னும் ஓர் பெரியார் இருந்தார். இவர் இவ்வுலக வாழ்வு நீத்து மறுவுலகிற்கு சுவர்க்கவாதியாக சென்றவர். அல்லாஹ்வோடு அவர் உரையாடியதாக இப்னு அஸாகீரின் தாரீகு என்னும் நூல் குறிப்பிடுகிறது. 'அவரிடம் அல்லாஹ் கேட்டான், உம் பிழைகள் யாவும் மன்னிக்கப்பட்டு உம்மை எப்படி சுவர்க்கத்திற்கு உரிமையுடைவராக்கினேன் தெரியுமா?' என்று.

அதற்கு அபூபக்கர் என்னுடைய நேரிய செயல்களின் காரணமாக இருக்கலாம். அல்லது உள்ளொன்று நினைத்து புறமொன்று செய்யாது தூய நோக்கோடு உனக்குத் தொண்டு செய்தேன். அதற்காக வேண்டியிருக்கலாம். இல்லையேல் என்னுடைய தொழுகையாக இருக்கலாம். இதுவுமில்லை என்றால் எனது உற்றார், உறவினர்மீது பாசம் வைக்காது உன்மீது பற்றுக்கொண்டேன். இதுவாக இருக்குமோ என்றார் அபூபக்கர்.

இவைகள் ஒன்றுமில்லை அபூபக்கரே! ஓரிரவு நீர் பக்தாத் நகர வீதி வழியாக சென்றுகொண்டிருந்தீர். அப்போது அவ்வீதியில் பனியின் குளிர் தாங்க முடியாது ஓர் பூனைக்குட்டி நடுங்கிப் போய் ஒரு சுவர் ஓரமாக ஒதுங்கிக் கிடந்தது. அப்போது நீர் அப்பூனைக் குட்டியின் மீது இரக்கம் கொண்டு அதற்கு சூடு ஏற்றுவதற்காக தனது மேலங்கிக்குள் வைத்து அதனை காப்பாற்றினீர். அன்றே நான் உன்மீது கருணைகொண்டு உமது பிழைகள் யாவற்றையும் மன்னித்துவிட்டேன். இப்போது நீர் இவ் நல்லமலுக்காக சுவர்க்கம் நுழைந்திருக்கிறீர். இதுவே அபூபக்கருக்கு கிடைத்த அல்லாஹ்வின் பதில்.

**எம்.சீ.கலீல், கல்முனை - 05**

## கவிதைப்போட்டி 1086



### பாராட்டுக்குரியது

### வெள்ளம்

புரண்டோடும் நதியின் மேல்
மிதந்தோடும் டயர் மீது - நன்றி
கலந்தோடும் ஜீவனோடு - வெள்ளம்
உயிரோடு விளையாடு முன்
கரையோடு போய்ச் சேர்ந்திடவே
நீரோடு போராடுகிறானே
இந்தச் சிறுவன் இங்கே.

இளம்பிறை யோகன்
புத்தளம்.

### ஆறுதல்...

ஆறறிவு தோற்றது ஐயறிவின் முன்னே...
எனப் பதிவு செய்திருந்தேன்...
ஈரைந்து நாட்களுக்கு முன்பே
ஆனாலிங்கு 'ரயரை'ப் படகாக்கி
இளம் ஆறறிவு
ஐயறிவைக் காக்கிறதே...!
இங்கு தோற்றது
எல்லா ஆறுகளுமல்ல
என்றொரு ஆறுதல்...

ஏ.எம்.கமால், புத்தளம்.

## கவிதைப் போட்டி இல 1089



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 03.11.2014

கவிதைப் போட்டி இல. 1089 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### காத்திடுவார் உன்னையே!

காக்கும் வல்ல மீட்பர்...
உண்டு உனக்கு, உண்டு உனக்கு
பெரு வெள்ளத்திலும்
காத்திடுவார் உன்னையே!
அவர் துணை உண்டு எனக்கு என்றுமே
காத்திடுவார் உன்னையே!

யே.ஒகஸ்ரா, கண்டி.

### இறைவன் கைகொடுப்பார்

சின்ன சிறுவனே!
பெரும் வெள்ளமோ! பேரிழப்போ!
உயிர்தப்பிப் பிழைக்க...
விடாமுயற்சியோ?
உன் உறுதுணை நாயகன்...
உன்னிடம் தஞ்சமோ?...
திடமனதாய் நீந்திச் செல்...
இறைவன் கை கொடுப்பார்.

ஜே.ஜேசுமணி, கண்டி.

### ஜீவகாருண்யம்

தான் மூழ்கி மரித்தாலும்
தன் செல்லப் பிராணி மூழ்கிவிடக் கூடாது
என்ற வைராக்கியத்துடன் - வெள்ளத்தோடு
போராடும் இச்சிறுவனின் துணிச்சல்
ஜீவகாருண்யத்திற்கோர்
சிறப்பான எடுத்துக்காட்டு.

அ.சந்தியாகோ, கண்டி.

### தெய்வம் துணையிருப்பார்

கங்கை பெருக்கெடுத்தோட
உயிரோடு போராட்டமோ மகனே!
உன் செல்லப்பிராணிக்கும்...
உயிர்ப்பிச்சை கொடுக்க
உத்தேசிக்கிறாயே!
ஆபத்திலும் உன் புத்தி.
பெரும் புத்தி கலங்காதே மகனே!
உன் கருணையுள்ளத்துக்கு...
தெய்வம் துணையிருப்பார்.

A.செல்வராணி, வத்துகாமம்.

### நன்றியுள்ள நாய்

சிறுவனின் முயற்சி
சிலவேளை இங்கு
ஆழி அலையில் ஆபத்தில்
முடிந்தால் பயிற்சி எடுக்கும்
பையனுக்கு பாதுகாப்பு
பக்கத்தில் நிற்கும்
நன்றியுள்ள நாய்.

எம்.சி. கலீல், கல்முனை -05

### நன்றியுள்ள நாயகனே!

நாயகனே! நன்றியுள்ள நாயகனே...!
பிரியாத பாசமே உனக்கு
ஆபத்திலும், என் துணையே நீ
என்னோடு வருகிறாயே!
இந்த ரியூப் மேல் நின்றுகொள்
உன்னைக் கரைகொண்டு சேர்க்கிறேன்.

ஐலின். கண்டி

## உங்கள் பக்கம்

### மின் இணைப்பு அவசியம் தேவை

கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள குஞ்சுப் பரந்தன், பெரிய பரந்தன் கிராமத்திற்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லையென அக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எமது கிராமத்திற்கு மின் இணைப்பை மேற்கொள்ளுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டபோதும் அதற்குரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி எமது கிராமத்தில் சுமார் 50 குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

அதாவது கிராமமாக இருப்பதால் எவராலும் தாங்கள் கண்டு கொள்ளப்படவில்லையெனவும், இரவுநேரங்களில் திருடர்களின் தொல்லைகள் மற்றும் மாணவர்கள் படிப்பதற்கு வெளிச்சம் இல்லாமையாலும் பாதிப்படைதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே, இருண்டு கிடக்கும் எமது கிராமத்திற்கு விரைவில் மின் இணைப்பை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென உரிய அதிகாரிகளிடம் தினமுரசின் உங்கள் பக்கமூடாக கேட்டுக்கொள்கின்றோம்.

குஞ்சுப் பரந்தன்.
பெரிய பரந்தன் மக்கள்

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com

### அமைதியின் சொற்கள்

சாந்தியடைய எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டுமென மக்கள் எண்ணுகின்றார்கள். அது உண்மை அல்ல. நீங்கள் இந்த உலகில் வாழ்ந்துகொண்டு, சமுதாயத்தில் இருந்துகொண்டு சாந்தியை அனுபவிக்கலாம்.

இணையத்தளம்: www.wopg.org

- பிரேம் ராவத்




## வாசகர்சாலை

### விறுவிறுப்பு

முரசுக்கு எனது தீபாவளி வாழ்த்துக்கள். விறுவிறுப்புடன் தினமுரசு வீறுநடை போடுகின்றது. அரசியல் கடலில் குதித்து முத்தும் எடுக்கிறாய். அரசியலில் பின்னி எடுக்கிறாய்.

பக்கங்கள் அனைத்தும் சிறப்பான வடிவமைப்புடன் ஜொலிக்கிறது. ராசி பலன்கள் எனக்கு உண்மையாக இருக்கின்றது. இன்னும் பல அம்சங்களை உள்ளடக்கி முரசு தனது கனத்தைக் கூட்டவேண்டும்.

**கே.துவாரகன், யாழ்ப்பாணம்.**

### பாராட்டுக்கள்

சென்ற வாரம் வெளியான வந்தாள் யாழ்தேவி ஆக்கம், யாழ்ப்பாணத்திற்கு 24 வருடங்களுக்குப் பிறகுவந்த யாழ்தேவி பற்றி எடுத்துக்கூறப்பட்டது. யாழ்தேவியின் வருகையால் ஒவ்வொருவரின் முகத்திலும் பூரிப்பைக் காணக்கூடியதாக இருந்தது. இக்கட்டுரையும் எமது சந்தோசத்திற்கு இன்னும் வலுச் சேர்த்தது. நேர அட்டவணையையும் முரசு வெளியிட்டிருந்தது. பாராட்டுக்கள்.

**ஆர்.மதுஷா, வவுனியா.**

### வாசகர் விருப்பம்

முரசில் பல தொடர்கள் வெளிவந்தமுள்ளன. ஆனாலும் என்னை கவர்ந்த தொடர் முதலாவது ரயில் கொள்ளை. சுவாரசியமாகவும், விறுவிறுப்பாகவும் இருக்கிறது. ஒவ்வொரு வாரமும் இத்தொடரின் மிகுதியை வாசிப்பதற்காக காத்திருப்பேன். இவ்வாறான தொடர்களே வாசகர் மனிதில் இடம்பிடிக்கும் என்பதே எனது கருத்து.

**செ.பிரியா, மன்னார்.**

# வாக்களித்த கூட்டமைப்பு எம்மை ஏமாற்றுகிறது!



## முல்லை மக்கள் சீற்றம்!

எமக்கான அபிவிருத்திக்காகவே நாம் கூட்டமைப்பிற்கு வாக்களித்திருந்தபோதிலும் அவர்கள் எமக்கான அபிவிருத்தியில் எவ்விதமான அக்கறையையும் கொண்டிருக்கவில்லையென முல்லைத்தீவு பாண்டியன்குளம் மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் பிரதேச செயலகத்தில் அப்பகுதி மக்களின் தேவைப்பாடுகள் பிரச்சினைகள் தொடர்பில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர்கள் இவ்விடயத்தை சுட்டிக்காட்டி உள்ளனர்.



அந்த மக்கள் மேலும் தெரிவிக்கும்போது, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது பகுதிகளை அபிவிருத்தியால் கட்டியெழுப்ப வேண்டுமென்பதுடன் எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தவேண்டும் என்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு வாக்களித்து பாராளுமன்ற தேர்தலிலும் வடக்கு மாகாண சபைத் தேர்தலிலும் வெற்றிபெறச் செய்திருந்தோம். அவ்வாறு தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் இற்றைவரை எமக்கான அபிவிருத்திகளையோ வாழ்வாதார மேம்பாடுகளையோ முன்னெடுக்க முடியாதவர்களாகவும் விரும்பாதவர்களாகவும் இருப்பதைக் கண்டு நாம் மிகவும் மனவேதனையடைகின்றோம்.

மக்களது பிரச்சினைகளில் அவர்கள் அக்கறையற்று இருப்பது எமக்கு மிகுந்த வேதனையை தருகின்றது. அவர்கள் எமக்கான அபிவிருத்திகளை விடுத்து தமக்கான சொகுசு வாகனங்களையும் உல்லாச வாழ்க்கையையும் அனுபவித்துவரும் நிலையில் நாம் அன்றாடம் அவல வாழ்வையே வாழ்ந்து வருகின்றோம் என்றும் தெரிவித்தனர்.

இதன்போது மக்களது பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் அவர்கள் பாண்டியன்குளம் பிரதேச செயலர் பிரிவில் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் பிரகாரம் 974 வீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இதனடிப்படையில் முதலாம், இரண்டாம், மூன்றாம் கட்டங்களுக்கான வீடமைப்பு கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், நான்காம் கட்டத்துக்காக மேலும் 250 பேருக்கு வீடுகள் கிடைக்கப் பெறவுள்ளதாகவும் தெரிவித்ததுடன், வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக இதுவரை மின்சாரம் கிடைக்கப் பெறாத கிராமங்களுக்கு காலக்கிரமத்தில் மின்சாரம் கிடைப்பதற்கான நடவடிக்கைகள் துறைசார்ந்தோர் ஊடாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

அதேவேளை, முல்லைத்தீவு பிரதான வீதியில் உள்ள கடைத்தொகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் மூன்று கடைகள் எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நகைக்கடையொன்றில் ஏற்பட்ட தீ, ஏனைய இரு கடைகளுக்கும் பரவியுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது. இதனால் அருகிலிருந்த புடைவைக்கடைகள் இரண்டும் எரிந்து நாசமாகியுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக தெரிவித்த முல்லைத்தீவு பொலிஸார், மின்னொழுக்குக்காரணமாகவே இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என்றும் தெரிவித்தனர்.

# அம்மா நிபந்தனைகளைக் காப்பாற்றுவாரா?

அ.தி.மு.க.-வினர் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தபடி, அம்மாவுக்கு பிணை கிடைத்துவிட்டது. பிணை விசாரணை நடந்தபோது சுப்பிரமணியன் சுவாமி நீதிமன்றுக்கு வந்திருந்தும், அவரால் பிணை வழங்குவதை தாமதப்படுத்த முடியவில்லை. ஜெயலலிதா, சசிகலா, இளவரசி மற்றும் சுதாகரன் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட தண்டனையும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த பிணை சில நிபந்தனைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளது. நிபந்தனைகள் மீறப்பட்டால், அம்மாவுக்கு வழங்கப்பட்ட பிணை ரத்தாகலாம் என்பது போன்ற வார்த்தைகளும் நீதிபதியின் தீர்ப்பில் இடம் பெற்றுள்ளது.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தத்து மற்றும் நீதிபதிகள் மதன் பி லேஷகூர், பி.கே.சிக்ரி ஆகியோரைக் கொண்ட முதலாவது அமர்வு விசாரணை நடைபெற்றபோது, ஜெயலலிதா தரப்பில் ஆஜராகி வாதிட்ட மூத்த வழக்கறிஞர் பாலி நரிமன், மிக ஜாக்கிரதையாகவே வாதாடினார். "உயர்நீதிமன்றத்தில் தண்டனையை நிறுத்திவைக்க சொல்லித்தான் வாதம் செய்தோம். தண்டனைக்கு தடைவிதிக்கக் கோரி வாதாடவில்லை'' என்றார்.

அத்துடன், மருத்துவ காரணங்களுக்காகவே பிணை கோரப்படுகிறது என்பதை கவனமாக முன்னிலைப் படுத்தி வாதிட்டார்.

தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள், ஜெயலலிதா உட்பட 4 பேருக்கு டிசம்பர் 18-ம் திகதிவரை இடைக்கால பிணை வழங்கி உத்தரவிட்டதுடன், தண்டனையையும் நிறுத்திவைப்பதாக அறிவித்தனர்.

அதுவரைக்கும் சிக்கல் இல்லை. சிக்கல் எங்கே வருகிறது என்றால், பிணைக்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில்!

உடல்நிலையை முன்னிலைப் படுத்தியதால், பிணை வழங்கப்படுகிறது என்று குறிப்பிட்ட நீதிபதிகள், ஜெயலலிதா வீட்டை விட்டு வெளியே செல்லக்கூடாது என ஒரு நிபந்தனை விதித்துள்ளார். அதில் சிக்கல் கிடையாது. அம்மா கொடநாட்டில் இருந்தபடி சென்னையில் ஆட்சி நடத்தியதுபோல, வீட்டுக்குள் இருந்துகொண்டே என்ன செய்யவேண்டுமோ, அதை செய்து கொள்ளலாம்.



அடுத்த நிபந்தனை கொஞ்சம் சிக்கலானது. ''மேல்முறையீட்டு விசாரணையை தாமதப்படுத்தக்கூடாது. தாமதப்படுத்தினால், இந்த பிணை தொடர்பில் உச்ச நீதிமன்றம் மீண்டும் கவனம் செலுத்த வேண்டியிருக்கும்'' என்பதே சிக்கலான அந்த நிபந்தனை.

சொத்துக் குவிப்பு வழக்கில் அம்மாவின் பிரதான அஸ்திரமே, 'தாமதப்படுத்தல்'தான் என்பது நீதிமன்றம் அறிந்த இரகசியம். அம்மாவின் வக்கீல் வாயைத் திறந்தாலே, "வழக்கை தாமதப்படுத்த இப்போது என்ன சொல்லப் போகிறாரோ" என்று நீதிமன்றம் யோசிப்பதே, இதுவரை இருந்த நடைமுறை.

இப்போது, அம்மாவை வெளியே விடுவதற்கான நிபந்தனைகளில் ஒன்று, தாமதப்படுத்தக் கூடாது என்பது.

இதனால், மேல்முறையீட்டு விசாரணையில் இவர்கள் ஒரு ஆவ்வணத்தை கோரினாலும், அது வழக்கை தாமதப்படுத்தும் செயல் என்ற எண்ணம் நீதிபதிக்கு ஏற்பட்டால் சிக்கல் ஆகிவிடும்.

எப்படியென்றால், இதுவரை நடந்த விசாரணைகளில், "நீங்கள் வழக்கை தாமதப்படுத்துகிறீர்கள்'' என நீதிபதிகள் பல தடவைகள் அம்மா தரப்பை பார்த்து கூறி இருந்தனர். அப்போதெல்லாம், அம்மா தரப்பு வக்கீல் ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்துவிட்டு, ஜாலியாக கிளம்பி விடலாம்.

இனி, நீதிபதியின் வாயில் இருந்து அப்படி ஒரு வார்த்தை வராதா எனப் பலர் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். "நீங்கள் வழக்கை தாமதப்படுத்துகிறீர்கள்'' என நீதிபதி ஒரு தடவை கூறி, அது ஆவணங்களில் பதிவாகிவிட்டால், அதை வைத்து நீதிமன்றுக்கு சுவாமி உட்பட யாராவது போய்விடுவார்கள்.

அதை உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டால், அம்மாவுக்கு ஏற்கனவே கிடைத்துள்ள பிணைக்கு சிக்கல் ஏற்படும். அதேபோல மற்றொரு சிக்கலான நிபந்தனை, "கட்சிக் காரர்களை கட்டுப்படுத்தி வைத்திருக்க வேண்டும்'' என்பது.

அம்மாவுக்கு தண்டனை விதிக்கப்பட்டபோது, நீதிபதி முதல், பலரையும் விமர்சித்து (திட்டி) கட்சிக்காரர்கள் போஸ்டர் ஒட்டினர். தமிழகம் எங்கும் கட்சிக்காரர்கள் ஆனந்த தாண்டவம் (முன்பு பிணை கிடைத்தது என்ற த்வறான தகவலால்), ருத்ர தாண்டவம் (பிணை கிடைக்கவில்லை என்று தெரிந்ததும்) எல்லாம் ஆடினர்.

அவர்களை கட்டுப்படுத்த வேண்டும் என்று சொல்கிறது நிபந்தனை!

அமைதியாக இருக்கும்படி அம்மா உத்தரவு போடலாம். ஆனால், அதன்பின்னரும் தாண்டவம ஆடினால், ஆடுவது அ.தி.மு.க. வினர்தான் என்பது என்ன நிச்சயம்? எதிர்க்கட்சிகளில் இருந்துகூட அம்மாவுக்கு 'திடீர் அபிமானிகள்' தோன்றலாமே!

வாரமலர்
தினமுரசு
த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## வியாக்கியான அரசியல்?

ஜனாதிபதி தலைமையில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களினதும் விசேட அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டத்தில் வரவேற்புரை நிகழ்த்தியதோடு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழ் மக்கள் சார்பாக பல முக்கிய கோரிக்கைகளை முன் வைத்தார்.

அதில் பாதுகாப்பு வளங்களாக உள்ள காணிகளில் பாதுகாப்புத் தேவைக்கு தேவையான சொற்பநிலங்கள் தவிர்ந்த ஏனைய நிலங்கள் உரியவர்களிடம் மீள ஒப்படைக்கப்படவேண்டும் என்றும் பன்னிரெண்டாயிரத்துக்கும் அதிகமான புலிகள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்தோடு இணைக்கப்பட்டதை வரவேற்கும் அதேவேளை யுத்த காலத்தில் சந்தேகத்தின்பெயரிலும், தொடர்புபட்டவர்கள் என்றவகையிலும் குற்றங்கள் நிரூபிக்கப்படாமலும், நீண்டகாலமாக சிறைகளில் துன்பத்தை அனுபவித்து வருகின்றவர்கள் என்ற வகையிலும் விடுதலைக்காக ஏங்கிக் கொண்டிருப்போரையும் மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்க ஜனாதிபதி கருணை காட்டவேண்டும் என்றும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைக் கோரிக்கைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வின் காலத்திலேயே கௌரவமான தீர்வு காணப்படவேண்டும் என்பதையும் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், தமிழ் ஊடகங்கள் கூலிக்கு மாரடிப்பதுபோல் ஆங்காங்கே சிலர் நடத்தும் காணாமல் போனோர் தொடர்பான செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த அளவுக்குக்கூட நேரடியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையை கண்டுகொள்ளவில்லை. இதுதான் ஊடக (அ)தர்மம்.

வடக்கு மாகாண சபையை தாமும் சீராக நடத்தாமல், நடத்தக் கூடியவர்களிடம் விடாமல் கூட்டமைப்பினர் முடக்கிப் போட்டிருப்பதை சிங்களப் பழமொழி ஒன்றை உதாரணம் காட்டி ஜனாதிபதி கூறியதையும் அதற்கு முதலமைச்சரும் வேறு சிலரும் கூறிய வியாக்கியானங்களையும் செய்தி களாக்கிய தமிழ் ஊடகங்கள் மாகாண சபையைப் பொறுப்பெடுத்தவர்களை "வைக்கோல் பட்டடை நாய்கள்" என்று ஒரு தடவை கூறியதை பல தடவைகள் கூறியதோடு, தம்மை நாய்கள்தான் தமிழ் மக்கள்தான் வைக்கோல் பட்டடை என்று தமிழ் மக்களையும் அதற்குள் இழுத்துவிட்டு சூப்பர் செய்தி வெளியிட்டு பெருமைப்பட்டுக் கொண்டார்கள்.

சிறையில் இருக்கும் தமிழ் கைதிகள் தமது விடுதலையை துரிதப்படுத்துமாறு கூட்டமைப்பிடம் கோரிக்கை விடுத்திருப் பதான ஒரு செய்தியும் அண்மையில் வெளி யாகி இருந்தது. ஒருவகையில் அது நியாய மான கோரிக்கைதான். அதாவது கைதிகள் விடுதலை என்பதை கூட்டமைப்பு அவ்வப்போது ஊறுகாயைப்போல் தொட்டுக் கொண்டு பரபரப்புக் காட்டுகின்றதே தவிர ஆக்கபூர்வமாக எதையும் செய்ததில்லை.

ஆகவே அவர்களை பயன்படுத்திக் கொள்ள கைதிகள் எண்ணுவது சரிதான். துரதிர்ஷ்டவசமாக கூட்டமைப்பால் எதை யும் சாதிக்கமுடியாது. அது தன்னையே பொய்மைக்குள்ளிருந்து விடுவித்துக்கொள்ள வழிதெரியாமல் கூட்டமைப்பு திணறிக் கொண்டிருக்கின்றது. யார்?. யாரை விடுதலை செய்வது? தெளிவு பிறக்கட்டும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



# ஐ.நா.வில் விதைத்தது வடக்கில் விளைந்தது!

வடக்கில் மாகாண சபை மலசலகூடத்தில் தண்ணீர வராதுவிட்டாலும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு முறைப்பாடு செய்கின்ற தரத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் வலிமை செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அதேபோலவே பான் கீ மூனும் இலங்கை விவகாரம் தொடர்பில் ஏதேனும் ஒரு வார்த்தையை கூறுவதற்கு முன்னர். சம்மந்தரையோ அல்லது மாவை சேனாதிராஜாவையோ அல்லது முதலமைச்சர் விக்கினேஸ்வரனையோ இவர்கள் எவருமே தொடர்பில் கிடைக்காவிட்டால் சுமந்தி ரனையோ, சிறீதரனையோ தொடர்புகொண்டு கேட்டு விட்டுத்தான் பான் கீ மூன் வெளியில் பேசுகின்ற அளவில் தான் சர்வதேச அங்கீகாரம் கூட்டமைப்புக்கு உள்ளது.

ஒருவேளை கூட்டமைப் புடன் சீரான உறவைப் பேணாமலோ, அனுமதியைப் பெறாமலோ பான் கீ மூன் இருப்பாரானால் அங்குள்ள புலித் தம்பிமார்களை தூண்டி விட்டு பான் கீ மூனை வழமைபோல் ஐ.நா 'சபைக்கு முன்வாசலால் போகவிடாமல் ஆர்ப்பாட்டம் நடத்தி பின்வாசலால் திருடன்போல் போகவேண்டிய கட்டாயத்தை செய்யவேண்டியதாகிவிடும்.

கூட்டமைப்பின் அழுத்தங்கள் மற்றும் அரசியல் தந்திரோபாயங்கள் காரணமா-கவே ஐரோப்பிய ஒன்றியங் களின் நீதிமன்றத்திலிருந்த புலிகள் இயக்கத்தின் தடை தற்போது விலக்கப் படுவதற்கான காலக்கெடுவை எதிர்கொண்டு தளர்த்தப்பட உள்ளது.

புலிகள் இயக்கத்தின் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் முற்றாக நீக்கும்போது புலிகள் இயக்கப் பினாமிகள் மீண்டும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பட்டியலில் உள்ள 28 நாடு களில் தமது செயற்பாடுகளை தொடரலாம். அதாவது புலி களின் பெயரால் நிதி வசூலிப்புக்களைச் செய்யலாம்.

அவ்வாறானதொரு சூழலில் புலிப்பினாமிகளால் இலங்கையில் அரச எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் குழுக்கள் மற்றும் நபர்களுக்கு தற்போதையதைவிடவும் கூடுதலான நிதி கிடைக்கும்.

குறிப்பாக, அரசை எதிர்த்து விடப்படும் ஒரு அறிக்கைக்கு இவ்வளவு, ஆர்ப்பாட்டத்துக்கு இவ்வளவு, இராணுவத்தால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டால் இவ்வளவு, பொலிசார் விசாரித்தால் இவ்வளவு, பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கம், கட்டுரை, பேட்டி என ஒவ்வொன்றுக்கும் இவ்வளவு என புலம்பெயர் புலிகளால் ஒரு தொகைப்பணம் சன்மானம் வழங்கப்படுவது அதிகரிக்கும்.

கட்சி அரசியல் செய்வோருக்கு மாதாந்த செலவுப்பணம் என்று தற்போதும் புலிப்பினாமிகளால் பணம் வழங்கப்பட்டுக் கொண்டிருப்பது ஒன்றும் இரகசியமல்ல.

ஆகவேதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புலம்பெயர் நாடுகளுக்குச் சென்று தனிநாடே தமிழ் மக்களின் ஒரே தீர்வு என்றும், அதற்காகவே தாம் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் இலங்கையில் போராடுவதாகவும் கூறுகின்றனர். இலங்கைக்கு திரும்பியதும் "நாங்கள் தனிநாடு கேட்கவில்லை என்பதை நீதிமன்றத்திலேயே நிரூபித்து விட்டோம்" என்று கூறுகின்றனர்.

கூட்டமைப்பினர் மூன்று வகை யான அரசியல் நடத்துகின்றனர். புலம்பெயர் புலிப்பினாமிகளுக்கு, தெற்கு சிங்கள அரசியல் சக்திகளுக்கு, தமிழ் மக்களுக்கு என்று மூன்று வகைப்படும். ஆனால் இந்த மூன்றிலுமே உண்மைத் தன்மை இல்லை. ஆனால் கூட்டமைப்பு தென் இலங்கை சிங்கள அரசியல் தலைமைகளுக்கு காட்டும் அரசியலில் இலாபம் உண்டு.

கூட்டமைப்பு படையினருக்கு எதிராகவும், அரசுக்கு எதிராகவும் என்ன கூறினாலும் அதை சிங்கள மக்களிடம் நல்ல விலைக்கு விற்க முடிகின்றது. கூட்டமைப்பு படை யினர் இல்லாத பூமி ஒன்றில் மீண்டும் புலிகளை வளர்க்க விரும்புகின்றது. அரசாங்கத்தின் கேள்விக்கு இடமில்லாத தனி நாட்டுக்கு ஒப்பான அரசொன்றை நடத்தவே முயற்சிக்கின்றது என்று தென்னிலங்கையில் கூறப்படுவதை தெளிவுபடுத்த கூட்டமைப்பு முயற்சிப்பதில்லை.

அரசாங்கமோ, பேரினவாதிகளோ கூட்டமைப்பை புலிகளின் வாரிசு கள் என்று கூறுவதையும், தனி நாடுகேட்கின்றார்கள் என்று கூறுவதையும் கூட்ட மைப்பிலுள்ளோர் உள்ளூர இரசித்துக் கொண்டிருக் கின்றனர். சிங்களவர்கள் அப்படிக் கூறினால்தான் தமிழ் மக்கள் தம்மை நம்புவார்கள் என்பது கூட்டமைப்பின் அரசியல் கணக்காக இருக்கின்றது.

கூட்டமைப்பின் கணக்குகள் எப்போதும் தவறானவை. தமிழ் மக்களிடம் விலைபோகும் கூட்டமைப்பின் அரசியல் தெற்கில் தமிழ் மக்களுக்கு பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தி வந்துள்ளது. புலிகளும் இவ்வாறானதொரு முட்டாள்தனத்தையே வீரமென்று கருதிச் செய்தார்கள்.

தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமை கோரிக்கைகள் என்பது இந்த நாட்டில் வாழும் முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுக்கு நியாயமானது என்பதையே எமது செயற்பாடுகள் உணர்த்த வேண்டும். மாறாக அச்சமூட்டுவதாக வும், சந்தேகத்தைக் கொடுப்பதாகவும் இருக்கக்கூடாது. எதிர்மறையான தாக இருக்குமானால் அது தமிழ் மக்களிடம் வீரப்பிரதாபமாக இருக்குமே தவிர ஏனைய இனமக்களிடம் பாதகமான விளைவையே ஏற்படுத்தும்.

முப்பது வருடங்களுக்கு மேலாக புலிகளுக்கும், இராணுவத்துக்கு இடையேயான யுத்தமாக, சிங்கள மக்கள் கருதிய நிலையை புலிகளின் முட்டாள் தனம் மாற்றியமைத்து இறுதிக் காலப்பகுதியில் ஒட்டுமொத்த சிங்கள மக்களையும் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் அணிதிரளச் செய்ததும், புலிகள் அழிந்துபோகச் செய்தது என்பதை உணர்ச்சி யூட்டலுக்கு இடமளிக்காமல் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அதுபோலவே தற்போது புலம் பெயர்ந்துள்ள் புலிப்பினாமிகளும், புலன்பெயர்ந்த கூட்டமைப்பினரும் நடத்தும் முட்டாள்தனங்கள் தமிழ் மக்களை மீண்டுமொரு இருண்ட யுகத்துக்குள் த்ள்ளிவிடுமோ என்ற அச்சத்தைக் கொடுத்துள்ளது.

இதற்கு அண்மைய உதார ணமாக இதுவரை ஓமந்தை சோதனைச் சாவடியில் தளர்த்தப் பட்டிருந்த சோதனைக் கெடுபிடி கள் மீண்டும் வெளிநாட்டில் வாழும் எமது உறவுகள்மீது ஒரு இறுக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வெளிநாடுகளில் வாழும் எமது உறவுகள் வடக்குநோக்கிய பயணத்துக்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறவேண்டுமென அறிவிக்கப் பட்டுள்ளது. இந்த அறிவிப்பும் நெருக்கடியும் கூட்டமைப்புக்கும், புலம் புலிப்பினாமிகளுக்கு பிரசாரத்துக்கு உதவக்கூடும்.

ஆனால் யாழ்ப்பாணத்துக்கு பயணிக்கப்போகும் வெளிநாடு களில் வாழும் தமிழ் மக்கள் சோதனைச் சாவடிகளை கடப்பதற்கு அலைந்து திரியப் போகின்றார்கள். புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்துகொண்டு யாழ்ப்பாணத்தில் முதலீடுகளைச் செய்திருப்பவர்கள் நெருக்கடி களை எதிர்கொள்ளப்போகின்றார்கள்.

ஐக்கிய நாடுகள் சபைக்கு முன்னால் புலிக்கொடி பிடித்து இலங்கை ஜனாதிபதிக்கு எதிர்ப்புக்காட்டி பெருமிதப்பட்டுக் கொண்டவர்களும், வெளிநாடு களுக்குச் சென்று தனி நாட்டுக்காக போராடிக் கொண்டிருப்பதாகக் கூறுவோம். அங்கே விதைத்தது, இங்கே அவ்வாறு விளைந்திருக்கின்றது. அந்த குற்ற உணர்ச்சியே இல்லாமல் யாழ்ப்பாணம் என்ன தனிநாடா?, ஏன் எடுக்கவேண்டும் பாதுகாப்பு அனுமதி?, அரசாங்கமே ஏற்றுக்கொள்கின்றதா? யாழ்ப்பாணம் தனிநாடு என்றெல்லாம் வீரம் பேசுகின்றார்கள்.

கூட்டமைப்பின் முக்கலையும், முனகலையும் முன்பக்கச் செய்தியாக தமிழ் பத்திரிகைகள் பிரசுரித்து வர்த்தகம் செய்து கொள்வதைத்தவிர தமிழ் மக்களுக்கு கிடைத்த பலன் எதுவும் இல்லை. அரசாங்கமும் கூட்டமைப்பின் கூச்சல் குழப்பங்களை கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. கூட்டமைப்பின் அரச எதிர்ப்பு நிலைப்பாட்டை பிரதான எதிர்க்கட்சிகள் தமது அரசியல் தேவைக்காக தேடலாம். ஆனால் இலங்கை அரசியல் தளத்தில் கூட்டமைப்பின் அவசியம் தேவையற்றதாகவே தற்போது மாறியிருக்கின்றது.

கூட்டமைப்பு கேட்டுப் பெறுவதற்கும் எதுவும் கிடைக்கப் போவதில்லை. எதிர்த்து நின்று தடுப்பதற்கும் எதுவும் நடைபெறப் போவதில்லை. கூட்டமைப்பின் வெறுமை அரசியலானது தனது முக்கியத்துவத்தை குறைத்துக் கொண்டுள்ளது. தேவை ஏற்படும் போது கூட்டமைப்பை எதிராகவும், ஆதரவாகவும் பயன்படுத்திக் கொள்ளமுடியுமென்ற நிலையே தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது.




> தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமை கோரிக்கைகள் என்பது இந்த நாட்டில் வாழும் முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுக்கு நியாயமானது என்பதையே எமது செயற்பாடுகள் உணர்த்த வேண்டும். மாறாக அச்சமூட்டுவதாகவும், சந்தேகத்தைக் கொடுப்பதாகவும் இருக்கக்கூடாது. எதிர்மறையானதாக இருக்குமானால் அது தமிழ் மக்களிடம் வீரப்பிரதாபமாக இருக்குமே தவிர ஏனைய இனமக்களிடம் பாதகமான விளைவையே ஏற்படுத்தும்.



# முதலாவது பிரமாண்ட ரயில் கொள்ளை



**ஜனவரி** மாதம் 9ஆம் திகதி. இந்த மாதம், லண்டன் நகரம் பனிப்புகார்களுக்குப் பிரபலமானது. அன்று மாலை 6 மணிக்கே நகரத்தின் பெரும்பகுதி பனிப்புகாருக்குள் அடங்கியிருந்தது. வீதிகளில் ஜனநடமாட்டமும் பெரிதாக இல்லை.

லண்டன் பிரிட்ஜ் ரெயில்வே ஸ்டேஷனை சுற்றியிருந்த வீதிகளில் நடந்து கொண்டிருந்த கிளீன் வில்லியை யாருமே பெரிதாகக் கவனித்ததாக தெரியவில்லை.

கிளீன் வில்லியின் யோசனையெல்லாம் எப்படி ரெயில்வே ஸ்டேஷனின் கூரையில் மற்றையவர்களது கவனத்தைக் கவராமல் ஏறுவது என்பதே.

ரெயில்வே ஸ்டேஷன் தனிக் கட்டடமாக இருந்தாலும் அதற்கு அருகே நெருக்கமாக வேறு பெரிதும் சிறிதுமான கட்டடங்கள் இருந்தன. அவற்றைக் கவனமாகப் பார்த்துக் கொண்டு சென்ற கிளீன் வில்லியின் கண்களில் ஒரு கட்டடம் தட்டுப்பட்டது. அது ஒரு இரண்டுமாடி அப்பார்ட்மெண்ட்.

இதுதான் சரியான இடம்.

அப்பார்ட்மென்டின் கூரை கட்டடத்துக்கு வெளியே தள்ளிக் கொண்டிருந்தது. அதிலிருந்து ரெயில்வே ஸ்டேஷனின் கூரை சுமார் 5 அடி இருக்கும்.

இப்படியான காரியங்களில் அனுபவசாலியான கிளீன் வில்லியால் இந்த கூரையின் முனையில் இருந்து அந்தக் கூரையின் முன்னக்கு சுலபமாகப் பாய முடியும். சப்தம் கேட்காது. ஆனால் ஓடு உடையாமல் இருந்தால் சரி.

அப்பார்ட்மென்ட் கட்டடத்தை இரண்டு தடவைகள் சுற்றி வந்து பார்த்ததில் யாருடைய நடமாட்டமும் இல்லை. அதன் பின்புறமாக கழிவுநீர் செல்வதற்கான பைப் ஒன்று மேலேயிருந்து கீழே இருந்தது.

அந்தப் பைப்பைப் பிடித்துக் கொண்டு சரசரவென்று மேலேற கிளீன் வில்லிக்கு மூன்று நிமிடங்கள் போதுமானதாக இருந்தது. கூரையில் இருந்து கீழே பார்த்தபோது ஓரிருவர் வீதியில் நடமாடுவது தெரிந்தது.

ஆனால் யாரும் சந்தேகப்பட்டு மேலே பார்க்கப் போவதில்லை. ஒரு வேளை தற்செயலாகப் பார்த்தாலும் மேலே கிளீன் வில்லி நிற்பதை பனிப்புகார் மறைத்துவிடும்.

அப்பார்ட்மெண்ட் கூரையின் முனையில் கால்களை ஊன்றி நின்றபடி ரெயில்வே ஸ்டேஷனின் கூரையைப் பார்த்த கிளீன் வில்லி, நிதானமாகத் தாவினார்.

ஒரு கைதேர்ந்த தாவல் அது. தாவும் போது காற்றில் எழுந்து எதிர்ப்பக்கத்தில் கூரையில் இறங்கும்போது, கால்களை மாத்திரம் ஊன்றாமல் கால்கள், கைகள், உடலின் பெரும்பகுதி ஆகிய எல்லாமே கூரையில் பதியும்படியான தாவல்.

இப்படித்தாவும்போது பெரிதாகச் சத்தமும் கேட்காது. உடலின் எடை கூரையில் படர்ந்து படிவதால் ஓடுகள் உடையவும் மாட்டாது. வில்லி தாவிய போது கேட்ட 'டப்' என்ற சிறிய சத்தத்தை வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த யாரும் கவனித்திருக்க மாட்டார்கள்.

கூரையில் ஊர்ந்தபடியே ரெயில்வே அலுவலகத்தின் மேல் பக்கமாகச் சென்று பார்த்தபோது, எட்வேர்ட் கூறிய சிறிய கண்ணாடி ஜன்னல் தெரிந்தது. அனுபவம் வாய்ந்த வில்லியின் கண்கள், அந்த ஜன்னல் 9 அங்குலத்துக்கு 16 அங்குலம் என்று கணித்துவிட்டது.

கூரையில் இருந்து உடலை இறப்பர்போல வளைத்து, முதலில் கால்களை கண்ணாடி ஜன்னலில் திறந்திருந்த பகுதியூடாக விட்டு அதன்பின்னர் சிறிது சிறிதாக உடலை உள்ளே நுழைத்தபோது, ஜன்னலுக்கு கீழேயிருந்த மேசையில் வில்லியின் கால்கள் பட்டது.

இறங்குவதற்கு சுலபமான இடம்!

ரயில்வே அலுவலக அறைக்குள் வில்லி இறங்கியபோது அலுவலகத்துக்கு வெளியே கதவுக்கு அருகே படியில் காவலாளி இருப்பது நன்றாகத் தெரிந்தது. காவலாளி அலுவலகத்தை நோக்கித் திரும்பி, கதவுக்கு அருகே இருந்த கண்ணாடிச் சுவரினூடாகப் பார்த்திருந்தால் வில்லியைப் பார்த்து இருக்கமுடியும். வில்லி அலுவலகத்திற்குள் நுழைந்தாரா என்பதை அடுத்த வாரம் பார்ப்போம்.

(தொடரும்...)



# புலிகளின் வதை முகாமில்

வதை 136

மணியம்

இலங்கையிலும் இரண்டு முறை அரங்கேற்றப்பட்ட ஜே.வி.பியின் ஆயுதக் கிளர்ச்சியின்போது. இலங்கை அரச படைகள் நடாத்திய அட்டூழியங்கள் குறித்து பல நூல்கள் வந்திருந்தும் அவற்றை இலங்கை அரசு தடை செய்யப்படவில்லை.

ஆனால் ஜனநாயக சுதந்திரங்கள் எதையும் மதிக்காத புலிகள் நடாத்திய 'விடுதலைப் போராட்டம்' குறித்து யாராவது கேள்வி எழுப்பினால். புலிகள் என்ன காரணம் கொண்டும் அதைப் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். அதுவும் தம்முடன் இருந்த ராஜினி திராணகம போன்றவர்கள் அவ்வாறு நடந்து கொண்டால். அவர்களுக்கு மீட்சியே இல்லை.

அதற்காகவே 'மேதகு தலைவர்' பிரபாகரன் சில தத்துவ முத்துக்களையும் உதிர்த்து வைத்திருக்கிறார். அதாவது பிரபாகரனின் தத்துவப்படி "எதிரிகளைவிடத் துரோகிகளே மிக ஆபத்தானவர்கள். எனவே முதலில் துரோகிகள் ஒழித்துக் கட்டப்படவேண்டும்." எனவேதான் புலிகள் துரோகியான ராஜினியை முதலில் ஒழித்துக்கட்டிவிட்டு. அடுத்ததாக எதிரியான சிறீதரனைத் தேடத் தொடங்கினர்.

உலகில் தோன்றிய உண்மையான விடுதலை இயக்கங்கள் எல்லாமே. தமக்குள் இருந்த சிறிய சிறிய வேறுபாடுகளை மறந்து. பொது எதிரியை குறிவைத்துத் தாக்கி அழித்து. வெற்றி வாகை சூடியிருக்கையில். புலிகள் என்ற தமிழர்களின் விடுதலை இயக்கம் மட்டும். தனது மக்களையே துரோகிகளாகவும் எதிரிகளாகவும் ஆக்கி தனது நரபலி வேட்டையை நடாத்தியது. தலைமை அழிந்தாலும். வால்கள் தொடர்ந்தும் அதையே செய்ய விரும்புகின்றனர்.

புலிகள் ராஜினியைக்கொலை செய்வதற்கு மிகவும் கீழ்த்தரமான. கோழைத்தனமான வழிமுறையைக் கைக்கொண்டனர். அவரது நடமாட்டங்களை அவதானிப்பதற்காக சில மருத்துவ பீட மாணவர்களையும். அங்கு பணிபுரிந்த பாதுகாப்பு ஊழியர் ஒருவரையும் உளவு வேலைகளில் ஈடுபடுத்தினர். தன்னையொத்த மற்றவர்களைப் போல். ஒரு சுகபோக வாழ்வைத் தேடாமல். கொடுமையான யுத்தம் நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில். தான் படித்த படிப்பு தனது மக்களுக்குப் பயன்படவேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக. இலண்டன் வாழ்வைத் துறந்து தாயகம் மீண்டு. சேவை புரிந்த ஒருவருக்கு புலிகள் கொடுத்த பரிசு இறுதியில் துப்பாக்கி ரவைகளும் மரணமும்தான்.

அவரிடம் கற்று. அவரது உயிருக்கே உலை வைக்க உதவிய அந்த மாணவர்களில் (உண்மையில் இவர்கள்தான் துரோகிகள் என அழைக்கப்பட வேண்டியவர்கள்) சிலர் இலண்டனிலும். வேறு இடங்களிலும் சொகுசாக வாழ்ந்தாலும். அவர்களது ஆன்மா அவர்களைச் சர்வசதா கொன்று கொண்டேயிருக்கும் என்பது நிச்சயம்.

அவர்களில் வல்வெட்டித் துறையைச் சேர்ந்த ஒருவர். சில காலம் வெளிநாடுகளில் தங்கியிருந்துவிட்டு. நான் யாழ்ப்பாணத்தை விட்டு 1999ஆம் ஆண்டு வெளியேறுவதற்கு சில நாட்கள் முன்னர். என்னிடம் வந்துதான் கஸ்டத்தில் இருப்பதாகக் கூறி. பண உதவி செய்யும்படி கோரி. என்னிடம் உளவறியவும் முயன்றார். ராஜினியைக் கொல்வதற்கு உளவு பார்ப்பதில் உதவிய அந்த மருத்துவ பீட பாதுகாப்பு ஊழியர் மனநலம் பாதிக்கப்பட்டு. பல்கலைக்கழகத் தொழிலையும் இழந்து நிற்பதாகச் சமீபத்தில் கேள்வியுற்றேன்.

தன்னந்தனியனாக சைக்கிளில் திருநெல்வேலிச் சந்திக்கு அருகாமையில் இருந்த தனது வீட்டை நோக்கி வந்து கொண்டிருக்கையில். தெருவில் வைத்து ராஜினியை புலிகள் கோழைத்தனமாகச் சுட்டுக் கொன்றனர். இப்படுகொலையை செய்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளர்களில் ஒருவனான பொஸ்கோ மற்றும் செங்கதிர் என்பவர்களும் இன்று உயிருடன் இல்லை. பொஸ்கோ நான் புலிகளின் சிறையில் இருக்கையில் அடிக்கடி வந்து என்னை விசாரித்தவன்.

செங்கதிர் தாண்டிக்குளத்தில் இருந்த புலிகளின் முன்னரங்க நிலைகளைப் பார்வையிடச் சென்றபோது பின்னாலிருந்து சுடப்பட்டு இறந்தான். அதைப் புலிகளே திட்டமிட்டுச் செய்ததாக தகவல்கள் கசிந்தன. அதற்கான காரணம். ராஜினியை செங்கதிர் மூலமாக புலிகள் கொலை செய்ததால். பின்னொரு காலத்தில் அவன்மூலமாக அந்த படுபாதகச் செயல் அம்பலமாகலாம் என்பதினாலேயே என. புலிகளில் சிலரே பேசிக்கொண்டனர்.

புலிகள் எதிர்பார்த்தது போலவே செங்கதிருக்கும் புலிகளின் தலைமைக்கும் சில முரண்பாடுகள் எழுந்ததாகவும். அம்முரண்பாடு அவர் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர் என்பதனால் ஏற்பட்ட புறக்கணிப்புக் காரணமாகவே எழுந்ததாகவும் கூட கூறப்பட்டது. அதன் காரணமாகவே அவரது மரணத்துக்கு துக்கம் விசாரிக்க அவரது வீட்டுக்குச் சென்ற அப்போதைய புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையாவை நோக்கி "அவனை நீங்களே கொலை செய்துபோட்டு. துக்கம் விசாரிக்க வாறீங்களோடா?" என அவரது சகோதரி கூச்சலிட்ட சம்பவமும் நிகழ்ந்தது. அதை ஊர்ஜிதப்படுத்துவது போல. பின்னர் நெல்லியடிச் சந்தியில் வைக்கப்பட்டிருந்த புலிகளின் மாவீரர் படங்களின் வரிசையில் இருந்த செங்கதிரின் படத்தைத் திடீரென புலிகள் ஒருநாள் அகற்றிவிட்டனர்.

'சுட்டவனைச் சுட்டு' என்பதற்கிணங்க. தடயங்களை அழிப்பதில் புலிகள் கைதேர்ந்தவர்கள். இதற்கு இன்னொரு உதாரணமும் உண்டு. ராதா என்பவன் புலிகளின் மன்னார் மாவட்டத் தளபதியாக இருந்தவன். பின்னர் யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டான். இவன் புலிகளின் பிரதித் தலைவராக இருந்த மாத்தையாவின் ஆள். மாத்தையாவுக்கும். புலிகளின் யாழ். மாவட்டத் தளபதியாக இருந்த கிட்டுவுக்கும் மோதல் ஏற்பட்ட பின்னர். கிட்டு வழமையாகச் சென்றுவரும் யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்குத் தெருவிலிருந்த தனது காதலியின் வீட்டிலிருந்து ஒரு இரவு திரும்பிக் கொண்டிருக்கும்போது. அவனது வாகனம்மீது கைக்குண்டு வீசப்பட்டு. அவன் ஒரு காலை இழக்கவேண்டி ஏற்பட்டது.

அன்றைய தினம் அந்தப் பகுதியில் ராதாவின் குழுவினரே பாதுகாப்பு கடமையில் இருந்ததாகவும். மாத்தையாவின் ஏற்பாட்டில் அக்குழுவே கிட்டு மீது அந்தத் தாக்குதலை நடாத்தியதாகவும். புலிகளுக்குள் இருந்து சில தகவல்கள் கசிந்தன. இது நடந்து சில நாட்களின் பின்னர். ராதா பலாலி இராணுவ முகாமுக்கு அருகிலிருந்த புலிகளின் முன்னரங்க நிலைகளைப் பார்வையிடச் சென்ற போது. பின்னால் இருந்து சுடப்பட்டு 'வீரச்சாவை'த் தழுவினான். (அவன் எனது நண்பனொருவனின் நெருங்கிய உறவினன் என்பதால். அவனது உடல் வைக்கப் பட்டிருந்த யாழ்.பல்கலைக் கழகத்துக்கு முன்னாலிருந்த புலிகளின் தலைமைக் காரியாலயத்துக்கு நான் சென்றபோது. அங்கு பிரபாகரனையும் காண முடிந்தது). புலிகளின் முன்னரங்க நிலைகளுக்குப் பின்னால். மாற்று இயக்கத்தவர்களோ அல்லது பொதுமக்களோ இருந்திருக்க வாய்ப்பில்லை.

எனவே இந்தக் கொலையும் புலிகளின் உள்வீட்டு வேலைதான் என. அதாவது தடயங்களை அழிக்க நடாத்தப்பட்டது என. பின்னர் புலிகளின் ஒரு முக்கியஸ்தரின் வாயாலேயே அறிந்துகொண்டேன்.

ராஜினியின் மரண ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டமை புலிகளுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையாக இருந்தது. அவரது மரணச் சடங்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டது எனது வாழ்வில் மறக்கமுடியாத சம்பவம். ராஜினி சுடப்பட்ட சம்பவம் கேள்விப்பட்டதும் உடனடியாகவே அவரது வீட்டுக்கு விரைந்தேன். அதற்கு முன்னர் பல தடவைகள் அங்கு சென்றிருந்தாலும். அன்று சென்றபோது அங்கு கண்ட காட்சி எனது இதயத்தை வெடித்துச் சிதறவைத்தது.


(தொடரும்...)




உண்மையில் இங்கிலாந்தும் பிரான்சும் கொண்டுவந்து குவித்த விமானங்களுக்கும் ஆயுதத் தளபாடங்களுக்கும் அந்த இரு இடங்களில் இருந்த விமானத்தளங்கள் சுத்தமாகப் போதவே இல்லை.

மிகவும் பாழடைந்திருந்த தளங்களில் இருந்துதான் அந்த இருதேசங்களும் தம்முடைய தாக்குதலைத் தொடங்கின.

ஒக்ரோபர் 31ஆம் திகதி பிரான்ஸ் தனது நேரடித் தாக்குதலை ஆரம்பித்தது. விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்களிலிருந்து எகிப்தின் அத்தனை மாகாணங்களின்மீதும் குண்டுவீசத் தொடங்கினார்கள். இங்கிலாந்தும் மறுநாளிலிருந்து தன்னுடைய



தாக்குதலை ஆரம்பித்துவிட்டது.

சுயஸ் கால்வாயை மீட்பதற்காகத் தொடங்கப்பட்ட இந்த மும்முனைத் தாக்குதலுக்கு Operation Musketeer என்று பெயரிட்டார்கள். Musketeer என்கிற சொல்லில் விசேஷம் ஏதுமில்லை. ஆயுதமேந்திய போர் வீரன். அவ்வளவுதான்.

ஆனால் இந்த 'ஒப்பிரேசன் மஸ்கடீர்' என்று பெயரிட்டு ஒரு போரைத் தொடங்கினால் அந்தப் போருக்குக் குறைந்தது மூன்று நோக்கங்களாவது இருக்கும் என்பது சரித்திரம். இரண்டாம் உலகப்போர் சமயம் பிலிப்பைன்ஸைக் கைப்பற்றுவதற்காக அமெரிக்கத் தளபதி டக்ளஸ் மெக் ஆர்த்தர் மேற்கொண்ட யுத்தத்துக்கு இதே பெயர்தான் வைக்கப்பட்டது. இன்னும் ஒரு சில யுத்தங்களுக்கும் இதற்கு முன்னால் இப்பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. ஆனால் ஒவ்வொரு யுத்தத்துக்கும் மூன்று நோக்கங்கள் அவசியம் உண்டு.

எகிப்தின் மீதான இந்த மூன்று தேசங்களின் தாக்குதலுக்கு அந்த மூன்று காரணங்கள் என்னென்ன?

1. சுயஸ் கால்வாயை மீட்பது.

2. எகிப்து அதிபர் நாசரைக் கொஞ்சம் பயமுறுத்தி வைப்பது, முடிந்தால் பணியவைப்பது.

3. மத்திய கிழக்கில் உள்ள அத்தனை அரபு தேசங்களுக்கும் ஐரோப்பாவின்மீது எப்போதும் கொஞ்சம் நிரந்தரமான பயம் இருக்கும்படி பார்த்துக்கொள்வது.

வெளியே பேசப்பட்ட காரணங்கள் இவைதான் என்றாலும் உண்மைக் காரணங்கள் அனைத்துமே பொருளாதாரம் மற்றும் வர்த்தகம் சம்பந்தப்பட்டவை. அனைத்து ஐரோப்பிய தேசங்களுமே (அப்போது சற்றும்) வளராத ஆசிய, கிழக்காசிய தேசங்களில் தங்கள் வர்த்தக சாத்தியங்களை விரிவாக்கி, பெரிய, நிரந்தமான மார்க்கெட்டைப் பிடிப்பதில் குறியாக இருந்தன. இந்தியா, இலங்கை, மலேசியா, தாய்லாந்து போன்ற தேசங்களில் ஐரோப்பியக் கடைகள் விரிக்கப்படும் பணி மிக மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. சுயஸ் கால்வாய்தான் இது எல்லாவற்றுக்குமே ஆதார வழி.

ஆகவே சுயஸை எகிப்திடமிருந்து மீட்பதுடன் மட்டுமல்லாமல் இனி எக்காலத்திலும் எந்தப் பிரச்சினையும் வராத அளவுக்கு சர்வதேசச் சட்டங்களில் திருத்தம்செய்து சுயஸை ஒரு பொதுவுடைமைச் சொத்தாக்குவதில் மேற்சொன்ன தேசங்கள் மிகத் தீவிரமாக இருந்தன. இஸ்ரேலுக்கு இதனைக் காட்டிலும் முக்கிய நோக்கம், இடம் பிடிப்பது. அதாவது இழந்த காஸா பகுதி மேலும் தானாகக் கையில் விழுந்த சினாயை நிரந்தரமாக வைத்துக் கொள்வது. நிலப்பரப்பை விஸ்தரித்துக் கொள்வதன்மூலமே மத்திய ஆசிய அரபு தேசங்களிடையே தன்னைப் பற்றிய தொரு அச்சத்தைத் தோற்றுவிக்க முடியும் என்று இஸ்ரேல் நம்பியது.

தாக்குதல் மிகவும் சூடுபிடித்தது. இங்கிலாந்தும் பிரான்சும் நிகழ்த்திய வான் வழித்தாக்குதலுக்கு நாசர், நீர் வழியே பதில் சொன்னார்.

கட்டுப்பாட்டை மீறி சுயஸ் கால் வாய்க்குள் அப்போது இந்த மூன்று தேசங்களின் போர்க் கப்பல்கள் (சுமார் நாற்பது) அணிவகுத்து வந்து கொண்டிருந்தன. நாசர் ஒரு விநாடிகூட யோசிக்காமல் அந்த நாற்பது கப்பல்களையும் பீரங்கிகளைக் கொண்டு சுட்டுவீழ்த்த உத்தரவிட்டார்.

அவற்றுள் சுமார் இருபது கப்பல்கள் பிரான்சினுடையவை. பதினைந்து கப்பல்கள் இங்கிலாந்துடையவை. மிச்சமெல்லாம் இஸ்ரேலுக்குச் சொந்தமானவை.

சுயஸ் கால்வாய்க்குள் வந்து கொண்டிருந்த இந்தக் கப்பல்களை எகிப்து இராணுவம் மூன்று முனைகளிலிருந்து தாக்கின. விமானத் தாக்குதல் ஒரு பக்கம். நீர்மூழ்கிக் கப்பல் தாக்குதல் இன்னொரு பக்கம். நிலத்தில் இருந்தபடியே பீரங்கிகள் மூலம் தாக்குதல் நடத்துவது மூன்றாவது.

சற்றும் குறி த்வறாமல் நிகழ்த்தப்பட்ட இத்தாக்குதலில் அந்த நாற்பது கப்பல்களும் மூழ்கிப்போயின. இது இங்கிலாந்து, பிரான்ஸ் மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த ஐரோப்பாவுக்குமே அதிர்ச்சியளிக்கும் விஷயமாக இருந்தது. நாசரைக் குறைத்து மதிப்பிட வேண்டாம் என்று ஐரோப்பா முதன்முதலில் முதலில் முடிவு செய்தது அப்போதுதான்.

நவம்பர் ஐந்தாம் திகதி பரசூட் மூலம் எகிப்தின் பாலைவனப் பகுதிகளில் இராணுவ வீரர்களை இறக்கிவிட்டு ஊருக்குள் ஊடுருவ கூட்டணிப் படைகள் உத்தரவிட்டன. விமானத் தாக்குதலுக்குச் சாதகமாக நகர்ப்புறங்களிலும், புறநகர்ப் பகுதிகளிலும் ஆயத்தங்கள் செய்து வைக்கவேண்டும் என்பது இந்த இறக்கிவிடப்பட்ட வீரர்களுக்கு அளிக்கப்பட்ட உத்தரவு.

இந்த வீரர்களுள் இரண்டு பேர், மறுநாள் காலையே தமது பணியின் அதிகபட்ச சாத்தியத்தைத் தொட்டார்கள். எகிப்தின் கிழக்கு மற்றும் தெற்குக் கடற்கரையோரம் இறக்கி விடப்பட்ட இந்த இரண்டுபேரும் (பெயர்கள் தெரியவில்லை, இருவரும் கொமாண்டோக்கள்) ஆளுக்கு ஒரு சக்திமிக்க வெடிகுண்டை இயக்கி, பிராந்தியத்தையே நிலைகுலையச் செய்தார்கள். மக்கள் அலையலையாக அலறிக்கொண்டு ஓடத்தொடங்கினார்கள்.

மறுபுறம் போர்ட் சயீத் துறை முகத்தின்மீது பிரெஞ்சுப் படைகள் நிகழ்த்திய கெரில்லாத் தாக்குதலில் துறைமுகம் முற்றிலுமாகச் சீர்குலைந்து போனது.

(தொடரும்...)




அங்கு சாக்குக் கட்டிலில் மாரிமுத்து நிரந்தரமாக தூங்கி விட்டார். அந்த விடயம் தெரியாத அபிராமி கணவன் அருகில் சென்று "என்னாங்க நித்திரையா?" கைகளால் தட்டி அசைத்தவாறு ஒலி எழுப்பினாள்.

ஒரு ஐந்து நிமிடங்கள் மாரிமுத்துவை எழுப்புவதற்காக போராடினாள் அபிராமி. அதன் பிறகுதான் மரணம் அவரை இரை கொண்டதை ஊர்ஜீதப்படுத்திக்கொண்டாள்.

இப்பொழுது வீடு அலறுவதற்கும் ஊர் மக்களை அழைப்பதற்குமான அவள் கதறல் துவங்கியது! ஊராரின் காதுகளில் சென்றதும் ஓடி வந்தனர். இறந்துவிட்டார் என்பதை ஊராரும் உறுதிப்படுத்தினர்.

மாரிமுத்துக்கு இடையிடையே வந்துபோவதுதான் இருதயநோய். அன்று வந்தது இறைவனிடமே அவரை அழைத்து சென்றுவிட்டது.

இவரின் இறப்பானது பலரை துயரத்தில் தள்ளியது! ஒரு இறப்பால் பலர் வாழ்வர், பலர் இறப்பால் ஒருவன் வாழ்வான். இவை சரித்திரத்தில் கண்டவை! ஆனாலும் இவர் இறப்பால் எவரும் வாழவில்லை. மரணச்சடங்கும் முடிந்தது. நாட்களும் மிகமிக வேகமாக நகர்ந்தாலும் அவரின் நினைவலைகளில் இருந்து பலர் மீளவில்லை. மாரிமுத்துவின் இழப்பால் அருளானந்தத்தின் குடும்பம் மிகவும் மனதால் பாதிக்கப்பட்டனர். புஸ்பாவின் ஏக்கப்படலம் அவர்களுக்குள் அடிக்கடி அடுப்புமூட்டியது!

காலம் நகர நகர புஸ்பாவின் மனதில் தாயின் பாசம் விலகிக் கொண்டிருந்தது.

புஸ்பாவின் தாய்ப்பாசத்தை அபிராமி கல்லாக மாற்றியமைத்தாள். வருடங்கள் சில விரைந்தும் புஸ்பாவை மரகதத்தால் மீட்கமுடியாமல் போனது. ஆனாலும் தாயின் பாசம் மாறவில்லை. அதற்கிடையில் மரகதத்திற்கு மூன்று குழந்தைகள் இருக்கிறார்கள். சிலவேளைகளில் புஸ்பாவின் நினைவலைகள் மரகதத்தின் மனதில் மழுங்கடிக்கப்பட்டதும் உண்மைதான். ஆனால் ஒரு தாயின் பாசம் என்பது முற்று முழுதாக ஒருநாளும் மாறாது. அதனடிப்படையில் மகளின் நலன்களை ஏதோவொரு வகையில் விசாரித்து அவதானித்துக்கொள்வாள் மரகதம்.


மாரிமுத்துவின் மரணத்துக்குமுன் அபிராமியிடம் ஒரு வாக்கு மூலத்தை வாங்கிக்கொண்டார். அதுதான் இன்றும் புஸ்பாவை உயிருடன் வாழவைக்கிறது என்பதில் கருத்து வேறுபாடு கிடையவே கிடையாது.

ஆமாம்! ஒரு நாள் மாரிமுத்து அபிராமியை அழைத்தார். அன்று தான் இதை உரைத்தார். "அபிராமி எந்த நேரமும் எனக்கு எதுவும் நடக்கலாம். ஆனால் புஸ்பாவை எப்படியாவது நீ படிக்க வைக்கணும். எனக்கு சத்தியம் செய்து தா" அவரின் வேண்டுகோளுக்கு இணங்கினாள் அபிராமி. அதன்படி செய்தாள்.

அபிராமி மிகவும் சிக்கலான நிலையில்தான் வாக்குறுதியை நடைமுறைப்படுத்தினாள். அவளுக்கு அண்ணாமார் கொடுக்கும் பணத்தில் சேவைசெய்து புஸ்பாவை தெருவில் விடாமல் வாழ்வின் உருவம் கொடுத்தாள்.

ஏதோ கஸ்டப்பட்டு புஸ்பாவும் உயர்தரம் வரை படித்தாள். அது வரை கிடைத்த அபிராமியின் உதவியும் பக்குவமும் காலப்போக்கில் காலமானது.

அதன்பின் புஸ்பாவின் உணர்வுகள் எதையோ தேடியது. அடைய நினைத்தாலும் அபிராமியின் வார்த்தைகள் தடுத்தது. ஆனாலும் தனது தாய் வாழும் இடத்தை மட்டும் கண்டறிந்து வைத்திருந்தாள் புஸ்பா.



அதேபோல் இன்னொரு நாள் அவளின் உணர்வு அவளுடன் சண்டையிட்டது. தனது எதிர்காலம் மனதில் மண்டியிட்டது. தாய்ப் பாசம்வந்து மனதைத் தொட்டது. உலகை விட்டுச்செல்ல உணர்வு உத்தரவிட்டது! என்றாலும் உணர்வை கட்டுப் படுத்தினாள் புஸ்பா. மீண்டும் செய்தித்தாளை மளமளவென்று விரித்தாள். விளம்பரப்பக்கத்தை விழிகள் நோக்க வரிகளை உதடு படபடக்க மனசு நாட்களை கணித்தது.

"இன்னும் ஒரு கிழமை இருக்கிறது" என்று மனதில் நினைத்துக் கொண்டு மறுபடியும் சற்று தன் சிந்தனையை சிதறவிடாமல் எதிர்காலம் நோக்கி நகர்த்தினாள் புஸ்பா!


அதில் அறுதிப்பெரும்பான்மையை பெற்றுக் கொண்டாள். இறுதி முடிவெடுத்தாள். விண்ணப்பப் படிவத்தை நிரப்பினாள். தைரியமாகவே இருந்தாள் தேர்வுக்கடிதம் கிடைக்கும் வரை.

(ஊழல் தொடரும்....)



வே. அர்ச்சுனன்



# யாழில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை 12

அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரியான ரிச்சர்ட் ஆர்மிரேச் தொடுத்த கேள்வி யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவரை திக்குமுக்காட வைத்தது. அதாவது இலங்கையின் நிலவரங்கள் தொடர்பில் தாங்கள் கூறுகின்ற கருத்துக்கள் அனைத்தையும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் முழுமையாக நம்பிவிடுவார்கள். என்றொரு மாயதோற்றம் இவர்களிடம் வலுவாக வளர்ந்திருந்தது.

ஆனால் வெளிநாட்டு இராஜதந்திரிகள் உள்நாட்டு விவகாரங்களை அக்குவேறு ஆணிவேறாக அறிந்து வைத்திருந்தனர். எந்த மூலையில் என்ன நடக்கின்றது என்பது அவர்கள் அறிந்த விடயமாகவே இருந்தது. இவர்களுக்கு அரசியல் வகுப்பு எடுப்பதற்கு கஜேந்திரனிற்கோ அல்லது பேராசிரியர்களான சிதம்பரநாதனிற்கோ அல்லது சிற்றம்பலத்திற்கோ தகுதி இருக்கவில்லை அல்லது இவர்கள் குறிப்பிடுகின்ற விடயங்கள் அனைத்தையும் உள்வாங்கிக் கொள்வதற்கு அமெரிக்கத் தூதுவர் ஒன்றும் விளங்காத குழந்தைப் பிள்ளையாக இங்கு வரவில்லை.

கஜேந்திரன் உள்ளிட்ட மாணவ ஒன்றியப் பிரதிநிதிகள் அமெரிக்கத் தூதுவரை சந்தித்தபோது அவர் இவர்களுக்கு சொன்ன ஆலோசனை நீங்கள் பொங்குதமிழ் நிகழ்வையெல்லாம் இங்கு சுதந்திரமாக நடத்துகின்றீர்கள். எனவே உங்களுக்கு சுதந்திரம் இல்லையென்று எங்களுக்கு முறையிடவேண்டாம். இலங்கை ஒரு இறைமை உள்ள நாடு. எங்களது அமெரிக்க அரசாங்கம் இலங்கையின் இறைமையை மதிப்பதுடன் நாங்கள் பயங்கரவாதத்திற்கு ஒருபோதுமே ஒத்துழைப்பு வழங்கமாட்டோம். நாங்கள் இலங்கை அரசாங்கத்துடன் பேசி உங்களது கற்றல் நடவடிக்கைகளுக்கு முழுமையான உத்தரவாதம் வாங்கித்தர முடிவதுடன், நீங்கள் மேலதிக உயர்கல்வியை அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளில் தொடர்வதற்கு நாங்கள் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருவோம். நீங்கள் வன்முறை வழிகளுக்கு ஒருபோதுமே செல்லக்கூடாது. புலிகளைச் சந்திக்கின்ற வாய்ப்புக் கிடைத்தால் அவர்களிடம் ஆயுதங்களை முழுமையாகக் கையளிக்குமாறு கூறுவதுடன் அவர்களை பேச்சுவார்த்தை மேசைக்குவந்து முழுமையான அரசியல் நீரோட்டத்தில் இணையுமாறு வலியுறுத்தக்கூடிய தார்மீகப்பொறுப்பு உங்களிடம் உள்ளதால் உங்களால் இப்பணியை இலகுவாகச் செய்யமுடியும்.

இவ்வாறு இதை நீங்கள் செய்தால் நாங்கள் இராணுவப் பிரசன்னத்தை முழுமையாகக்குறைக்குமாறு மட்டும் நிற்காமல் உங்களது கற்றல் செயற்பாடுகளுக்கும் முழுமையான உத்தரவாதத்தை பெற்றுத்தருவோம். அத்துடன் உங்களது குழுவில் எங்களுடன் பேசவந்த ஒரு பேராசிரியர் எங்களது வெளிநாட்டு தொண்டு நிறுவனப் பெண் பிரமுகர் ஒருவருடன் வேண்டத்தகாத அல்லது விரும்பத்தகாத முறையில் நடந்து கொண்டார்.

எனவே, இத்தகைய செயற்பாடுகள் உங்களது ஒட்டுமொத்தக் கலாசாரத்திற்கே ஏற்புடையதாக இருக்காது என்று கூறியதுடன் மட்டும் நிற்காமல் பல்வேறு ஆலோசனைகளையும் இவர் இந்தக் குழுவினரிற்குக்கூறி இவர்களை வழியனுப்பி வைத்தார். இதனால் கடுமையாக அமெரிக்க இராஜதந்திரி மீது ஆத்திரம்கொண்ட கஜேந்திரன் குழுவினர் ஊடகங்களுக்கு கடுமையான தொனியில் அறிக்கையை வெளியிடுவதாக தங்களுக்குள் எண்ணிக்கொண்டிருந்தபொழுது இந்த இராஜதந்திரி இவர்கள்முன் இன்னுமொரு நிபந்தனையையும் முன்வைத்தார்.

அதாவது எங்களுக்கும் உங்களுக்கும் இடையில் இடம்பெறும் சந்திப்புத் தொடர்பாக எந்தவொரு ஊடகத்திலும் செய்திகள் வெளிவரக்கூடாது. எங்களது சந்திப்பு ஒரு சிநேகபூர்வமான ஒரு உத்தியோக பற்றற்ற ஒரு சந்திப்பாகவே இருக்கின்றது. எனவே ஊடகங்களுக்கு எந்தவொரு அறிக்கையையும் வெளியிடாதீர்கள். நாங்கள் இடைக்கிடை உங்களைச் சந்திக்கவேண்டுமாக இருந்தால் இதில் உறுதியாக இருங்கள் என்று எச்சரிக்கை கலந்த ஆலோசனை மொழியில் இக்கருத்தைக் கூறியதுடன் நாங்கள் அடுத்தமுறை உங்களைச் சந்திக்கின்றபொழுது பல்வேறு மாற்றங்களும் முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கவேண்டும். இதனைச் செய்யக்கூடிய சக்தி மாணவர்களாகிய உங்களிடத்திலேயே இருக்கின்றது. நீங்கள் நூறு வீதம் இதைச்செய்வீர்கள் என்ற அசையாத நம்பிக்கை எனக்குள்ளது என்று கஜேந்திரன் குழுவினருக்கு ஆலோசனைகூறி அவர்களை அந்த இராஜாங்கத் திணைக்கள அதிகாரி வழியனுப்பி வைத்தார்.

ஏற்கனவே, அமெரிக்க உயர் மட்டக் குழுவினரை சந்திக்கப் போவதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளும் ஒரு சில பேராசிரியர்களும் ஊடகங்களுக்கு அறிக்கை விட்டுவிட்டு சென்ற காரணத்தினால் இவர்களது சந்திப்பையும் அது தொடர்பான தகவல்களையும் திரட்டுவதற்காக ஊடகவியலாளர்கள் ஆவலோடு காத்திருந்தபொழுது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அதிகாரி நோ கொமன்ட்ஸ் என்ற வார்த்தையை மட்டும் பயன்படுத்திவிட்டு தனது வாகனத்தில் ஏறி அந்த அதிகாரி சென்றுவிட்டார்.

ஆனால், மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளையும் பேராசிரியர்களையும் ஊடகவியலாளர்கள் துளைத்துத் துளைத்து கேள்விகேட்கத் தொடங்கினர். இதன்போது இது வழமையான சந்திப்பு சினேகபூர்வமான சந்திப்பு திருப்தியாக இருந்தது என்ற சாரப்பட நழுவல் பாணியில் இவர்களால் பதில் கூறப்பட்டபோதிலும் ஊடகவியலாளர்கள் இவர்களிடமிருந்து உண்மையில் உள்ளே என்ன நடந்தது என்பது தொடர்பாக ஆராய்வதில் குறியாக இருந்தபோதும் இவர்கள் ஊடகவியலாளரின் கேள்விகளுக்குச் சரியான பதிலை அளிக்கவில்லை. உள்ளே தாங்கள் வாங்கிக் கட்டிய வார்த்தைஜாலங்களையும் தங்களுக்குக்கூறப்பட்ட ஆலோசனைகளையும் வெளியில் கூறினால் வெட்கக்கேடு என்பதற்காக இவற்றை முழுமையாக மூடிமறைத்ததுடன் நாங்கள் விரைவில் மீண்டும் அமெரிக்கக் குழுவினர் உட்பட வெளிநாட்டு இராஜதந்திரிகளை சந்திக்க இருக்கின்றோம். அதன்பின் நல்ல த்தகவல்கள் பலவற்றைத் தருவோம் என்றுகூறிய இவர்கள் என்ன தகவல்களைத் தந்தார்கள். இவர்களது தகவல்கள் முள்ளிவாய்க்கால்வரை எம்மை எவ்வாறு இழுத்துச்சென்றது என்பது தொடர்பில் தொடர்ந்து பார்ப்போம்.







(தொடரும்)

# மோடியும் ஊடகங்களும்

■ தொகுப்பு: வேணு கிருஸ்ணா

"புதிதாகப் பதவியேற்கும் ஒவ்வொரு அரசுக்கும், அதனை விமர்சனம் செய்வதற்கு நூறு நாள் அவகாசம் கொடுப்பார்கள். ஆனால், தனது அரசுக்கு அப்படிப்பட்ட தேனிலவுக் காலம் தரப்பட வில்லை" என்றவாறு புலம்பி வந்தார், பிரதமர் நரேந்திர மோடி. இந்நிலையில் அவர் பதவியேற்று நூறு நாட்கள் கழித்து நடந்த உ.பி., இராசஸ்தான், குஜராத் சட்டமன்ற இடைத்தேர்தல்களில் பா.ஜ.க. சந்தித்துள்ள பின்னடைவு, மோடியின் புலம்பலுக்கு மட்டுமல்ல, அவரது வெட்டி ஜம்பத்திற்கும் பதிலடி கொடுப்பதாக அமைந்துவிட்டது.

"இச்சட்டமன்ற இடைத்தேர்தல் முடிவுகள் மோடி அரசாங்கத்தின் மீதான தீர்ப்பு அல்ல" என பா.ஜ.க. வலிந்து நின்று தன்னிலை விளக்கம் அளித்தாலும், உண்மை அவ்வாறு இல்லை. மகாராஷ்டிரா மாநிலத்தில் பா.ஜ.க., சிவசேனா கட்சி களிடையே தொகுதிப் பங்கீடு தொடர்பாக இழுபறி நடந்துவரும் நிலையில், அக்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற மேலவை உறுப்பினர் ராம்தாஸ் கதம், "பா.ஜ.க. தலைவர்கள் தேர்தல் முடிவுகளிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளவேண்டும். உண்மை நிலவரத்தைப் புரிந்து கொள்ளவேண்டும்" எனத் தன்னகங்காரம் கொண்ட பா.ஜ.க. தலைவர்களின் மண்டையில் உறைக்கும் படி பேசியிருக்கிறார். அவரது பேச்சு இத்தேர்தல் முடிவுகள் மோடியின் இமேஜில் ஓட்டை போட்டுவிட்டதைத்தான் எடுத்துக்காட்டுகிறது.

இத்தேர்தல் முடிவுகள் பா.ஜ.க.வை விட, மோடியின் துதிபாடி வரும் ஊடகங்களைத்தான் வெகுவாகக் கலங்கடித்துவிட்டன. "மக்கள் எதை எதிர்பார்த்து வாக்களித்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து மோடியின் சகாக் கள் செயற்படவேண்டும்" என புத்திமதி வழங்கியிருக்கிறது, தமிழ் இந்து நாளிதழ். "இது பெரிய தோல்வி அல்ல என்று பா.ஜ.க.வினர் பேசுவது, தோல்வியைவிடப் பெரும் பிரச்சினை" என இடித்துரைக்கிறது துக்ளக் இதழ். கடந்த நூறு நாட்களில் மோடியின் ஒவ்வொரு வெற்றுச் சவடாலை யும் அறிவார்ந்த கருத்தாகவும், பாசிச கோமாளித்தனங்களைச் செயலூக்கமிக்க நடவடிக்கைகளாகவும் சித்தரித்துப் பொழிப்புரை எழுதிய ஊடகங்களிடம் இதற்கு அப்பால் நாணயமான பரிசீலனையை எதிர்பார்க்கமுடியாது.

"தான் பதவிக்குவந்த மறுநிமிடமே விலைவாசியைக் கட்டுப்படுத்திவிடுவேன், ஊழலை ஒழித்துக்கட்டிவிடுவேன், கறுப்புப் பணத்தை மீட்டுவிடுவேன் மக்களுக்கு நல்ல காலத்தைக் கொண்டு வந்து விடுவேன்" எனத் தனது தேர்தல் பிரசாரம் நெடுகிலும் சவடால் அடித்தவர் மோடி. ஆனால், எந்தவொரு ஊடகமும் அவரது நூறு நாள் ஆட்சியைக் குறைந்தபட்சம் இந்த நான்கு அம்சங்களைக் கொண்டு கூட மதிப்பிட்டு எழுதவில்லை. இவற்றின் அடிப்படையில் மோடியின் ஆட்சியை மதிப்பிடுபவர்களை, கேள்வியெழுப்புவர் களை, 'அவசரக் குடுக்கைகள்' என்றும், "மோடியின் வெற்றியை ஜீரணிக்க முடியாதவர்கள்" என்றும் அவதூறு செய்கிறது, துக்ளக் இதழ் (01.10.2014). ஒருவரது ஆட்சியை மதிப்பிட நூறு நாட்கள் குறைவானது என நடுநிலையாளர் களைப் போலப் பேசும் இவ்வூடகங்கள், இதே நூறு நாட்களில் நடந்த மோடியின் வெளிநாட்டுப் பயணங்கள், குறிப்பாக அவரது ஜப்பான் பயணம், அவரது சுதந்திர தின உரை, அவரது ஆசிரியர் தின உரை, அவர் அறிவித்துள்ள ஜன் தன் திட்டம், பாகிஸ்தானுடன் நடைபெற இருந்த பேச்சுவார்த்தையை ரத்து செய்தது, திட்ட கமிசனைக் கலைத்தது என்பவற்றைக் காட்டியே அவரது அரசிற்கு ஒளிவட்டம் கட்டிவருகின்றன.



பள்ளிகளில் கக்கூசு கட்டுவது தொடங்கி திட்டக் கமிசனைக் கலைப்பது வரையில்; இந்தியாவை உலகின் தொழிற்துறை கேந்திரமாக உருவாக்குவது தொடங்கி ஏழை இந்தியர்களுக்கு வங்கிக் கணக்கு திறப்பதுவரையில்; பெண்கள் மீதான பாலியல் வன்முறை தொடங்கி பெற்றோர்கள் ஆண் குழந்தைகளைக் கட்டுப்பாட்டோடு வளர்க்கவேண்டிய அவசியம்வரையில் - சுதந்திர தினத்தன்று செங்கோட்டையில் பேசப்பட்ட அனைத்தும் மோடியின் ஆழ்மனதிலிருந்து வெளிவந்தவை எனப் புகழ்ந்துள்ள ஊடகங்கள், மற்ற பிரதமர்களைப் போல மோடி எழுதி வைத்துக்கொண்டு படிக்கவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளன. நடிகர்கள் யாரும் கையில் பேப்பரை வைத்துக்கொண்டு டயலாக் பேசுவதில்லைதானே!

**ஜப்பானில் டி.சி.எஸ். நிறுவனத்தை தொடங்கி வைக்கும் விழாவில் ஜப்பானின் பாரம்பரிய மேள வாத்தியமான டாய்கோவைத் தட்டி வித்தை காட்டும் மோடி**

அரசுமுறைப் பயணமாக வெளிநாடு களுக்குச் செல்லும் பிரதமருக்கு, அரசுத் தலைவருக்கு உள்நாட்டு மக்கள் சாலை யோரத்தில் நிற்கவைக்கப்பட்டு, வரவேற்பு அளிப்பது சர்வசாதாரணமாக நடக்கக் கூடிய ஒன்றுதான். இதற்கும் அ.தி.மு.க. அமைச்சர்களை வரவேற்க பள்ளிக்கூட மாணவர்கள் கால்கடுக்க நிற்க வைக்கப் படுவதற்கும் பெருத்த வேறுபாடு கிடையாது. ஆனால், மோடி விசயத்திலோ இது உலக அதிசயமாகக் காட்டப்படுகிறது.

"ஆயிரக்கணக்கான நேபாள மக்கள் சாலையின் இருபுறங்களிலும் நின்று ஒரு தலைவரை வரவேற்றார்கள் என்றால், எந்த அளவுக்கு மோடியின் நேபாளப் பயணம் அவர்கள் மத்தியில் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளமுடிகிறது" எனப் புல்லரித்துப்போய் எழுதுகிறது, தினமணி.

வெளிநாடு செல்லும் தலைவர்கள் அந்நாட்டின் பாரம்பரிய ஆடைகளை அணிந்து கொண்டு போஸ் கொடுப்பது, நடனம் ஆடுவதெல்லாம் பார்த்துப்பார்த்துப் புளித்துப் போன ஒன்றுதான். ஆனால், தினகரன் நாளிதழ் இந்த ஊசிப் போன விசயத்தை, "பள்ளிக் குழந்தைகளோடு குழந்தையாக, ஆசிரியராக, மேள வாத்தியக்காரரோடு வாத்தியக்காரராக" என்று சென்ற இடமெல்லாம் மோடி ஜப்பானிய மக்களோடு ஒருவராக மாறிவிட்டார் என மாய்ந்துபோய் எழுதியிருக்கிறது.

மோடி, பூட்டான் நாடாளுமன்றத்தில் தப்பும் தவறுமாக ஆற்றிய உரையை, அபாரமானதென்று ஒரு அதிகாரி பாராட்டியவுடனேயே, அப்பாராட்டைத் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிடுமாறு உத்தரவிட்டிருக்கிறார், அவர் (இந்தியா டுடே, செப்.17). இந்தளவிற்கு சுயதம்பட்ட மும் விளம்பர மோகமும் கொண்ட பிரதமரை இந்தியா சந்தித்தது இல்லை. ஊடகங்களோ இந்த விசயத்தில் மோடியின் பி.ஆர்.ஓ. போலவே செயற்படுகின்றன. அவரது சுதந்திர தின உரையை இந்திய சமூகத்தையே புரட்டிப் போடக்கூடிய புரட்சிகரமான சிந்தனையாக ஊடகங்கள் கொண்டாடித் தீர்த்திருப்பதை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

**ஜன் தன் திட்டத்தைத் தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு வங்கிக் கடன் அட்டைகளை வழங்கும் பிரதமர் நரேந்திர மோடி.**

பள்ளிகளில் கக்கூசு கட்டுவது தொடங்கி திட்ட கமிசனைக் கலைப்பது வரையில்; இந்தியாவை உலகின் தொழிற்துறை கேந்திரமாக உருவாக்குவது தொடங்கி ஏழை இந்தியர்களுக்கு வங்கிக் கணக்கு திறப்பதுவரையில்; பெண்கள் மீதான பாலியல் வன்முறை தொடங்கி பெற்றோர்கள் ஆண் குழந்தைகளைக் கட்டுப்பாட்டோடு வளர்க்கவேண்டிய அவசியம்வரையில் - சுதந்திர தினத்தன்று செங்கோட்டையில் பேசப்பட்ட அனைத்தும் மோடியின் ஆழ்மனதிலிருந்து வெளிவந்தவை எனப் புகழ்ந்துள்ள ஊடகங்கள், மற்ற பிரதமர்களைப் போல மோடி எழுதி வைத்துக்கொண்டு படிக்கவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளன. நடிகர்கள் யாரும் கையில் பேப்பரை வைத்துக்கொண்டு டயலாக் பேசுவதில்லைதானே!

சுதந்திர தின உரையில் அறிவிக்கப் பட்ட கையோடு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ள ஜன் தன் திட்டத்தை ரொம்ப ரொம்பப் புதிய, புதுமையான திட்டம் போல மோடியும் ஊடகங்களும் காட்டுகின்றன. பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேண்டும் என்பார்கள். நமது காலத்தின் அசகாயப் புளுகன் மோடியும், அவரது கைத்தடிகளான ஊடகங்களும் இந்தப் பழமொழியை அறிந்திருக்கவில்லை போலும். ஏனென்றால், மோடியின் இந்தத் திட்டம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட "நிதிசார் உள்ளடக்கத்திற்கான தேசியக் குறிக்கோள்" என்ற திட்டத்தின் அப்பட்டமான நகலாகும்.

இதற்கான ஆரம்பக்கட்ட பணிகளை ரிசர்வ் வங்கி 2005-ம் ஆண்டில் தொடங்கியது. 2008-ல் இக்குறிக்கோள் தொடர்பாக அமைக்கப்பட்ட ரங்கராஜன் கமிட்டி, அடித்தட்டு மக்கள் எளிதான வகையில் வங்கிக் கணக்கு தொடங்குவது தொடர்பாக நான்கு அம்ச திட்டத்தை அறிவித்தது. அதில் வங்கிக் கணக்கு தொடங்கும் அடித்தட்டு மக்களுக்கு வங்கிகள்மூலம் குறுங்கடன்கள் வழங்கவும், காப்பீடு வழங்குவதற்குமான பரிந்துரைகள் செய்யப்பட்டிருந்தன.

இத்திட்டம் 2012-ல் சுவாபிமான் என்ற பெயரில் நடைமுறைக்கும் கொண்டு வரப்பட்டது. இந்தத் திட்டத்தை சந்தை பொருளாதாரத்திற்கு ஏற்றபடி சீர்திருத்து வதற்காக அமைக்கப்பட்ட நாச்சிகேத் மோர் கமிட்டி தனது அறிக்கையை கடந்த ஜனவரி 2014இல் ரிசர்வ் வங்கியிடம் அளித்தது. ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் அந்த சுவாபிமான் திட்டம்தான் ஜன் தன் என்ற பெயரில் டப்பிங் செய்யப்பட்டு, இப்பொழுது ஓடிக் கொண்டிருக்கிறது.

பொருளாதார வளர்ச்சியின் பலன் களைப் பெறமுடியாமல் அடித்தட்டு மக்களை விலக்கிவைக்கும் நிதி தீண்டாமையை ஒழிக்கும் நோக்கில்தான் ஜன் தன் திட்டத்தை (மக்கள் வளம்) அறிமுகப்படுத்தியிருப்பதாகத் தம்பட்டம் அடித்துவருகிறார், மோடி. ஆனால், இத்திட்டம் அரிசிக்கும், மண்ணெண்ணெய்க்கும், சமையல் எரிவாயுவுக்கும் வழங்கப்படும் மானியத்தை நுகர்வோருக்கு நேரடியாகப் பணமாக வழங்கவேண்டும் என்ற உலகவங்கியின் கட்டளையை நிறைவேற்றும் நோக்கத்தைக் கொண்டது. மானியத்தைப் பணமாக வழங்குவதற்கு ரேசன் கார்டு வைத்திருக்கும் ஒவ்வொரு குடும்பமும் வங்கிக் கணக்கு வைத்திருப்பது அவசியமாகும். இன்று வங்கிக் கணக்கு, நாளை நேரடி மானிய பட்டுவாடா, அதன் பிறகு மானியக் குறைப்பு, ஒழிப்பு என்பதுதான் ஆளும் கும்பலின் நோக்கம். மன்மோகன் சிங் அரசு, உங்கள் பணம் உங்கள் கையில் என்ற கவர்ச்சிகரமான பெயரில் இதனை நடைமுறைப்படுத்த முயன்றது. அதைத் தான் நிதி தீண்டாமை ஒழிப்பு என்ற பெயர் மாற்றி ரிலீஸ் செய்திருக்கிறார், மோடி.

திட்ட கமிசனை ஒழிப்பது என்ற மோடியின் அறிவிப்பும்கூட அவரது சொந்த சரக்கல்ல. அது பன்னாட்டு ஏகபோக முதலாளிகள் மற்றும் உள்நாட்டு தரகு முதலாளிகளின் விருப்பம். இதற்கான ஆரம்பக்கட்ட பணிகள் ஐக்கிய முற்போக்கு ஆட்சியில் தொடங்கப்பட்ட தென்றால், முடிவை மோடி அறிவித்து இருக்கிறார். திட்ட கமிசனை நேரு உருவாக்கினார் என்பதைத் தாண்டி அதன்மேல் காங்கிரசுக்கு எந்தவிதமான மதிப்பும் இருந்தது கிடையாது.

நேருவின் பேரனும் முன்னாள் பிரதம ருமான ராஜீவ் காந்தி திட்ட கமிசனை கோமாளிகளின் கூடாரம் என்று நையாண்டி செய்ததும், ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் உலக வங்கியின் கையாள் மாண்டேக் சிங் அலுவாலியா திட்ட கமிசனின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டதுமே இதற்கு சான்று. தனியார்மய - தாராளமயக் கட்டத்தில் திட்ட கமிசனின் பொருத்தப்பாடு பற்றி ஆராய்வதற்காக அஜய் சிபர் தலைமை யில் சுதந்திர மதிப்பீட்டு அலுவலகத்தை யும் திட்ட கமிசனைச் சீர்திருத்தும் பரிந்துரைகளை உருவாக்குவதற்காகத் திட்ட கமிசனின் முன்னாள் உறுப்பினராக அருண் மைரா என்பவர் தலைமையில் கமிட்டி ஒன்றையும் அமைத்திருந்தது, ஐக்கிய முற்போக்கு கூட்டணி.

காங்கிரசு ஆட்சியில் நியமிக்கப்பட்ட அஜய் சிபர், "திட்ட கமிசனைக் கலைக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டு மோடி அரசிடம் அறிக்கை அளித்திருக்கிறார். மேலும், மோடி பிரதமராகப் பதவியேற்ற சமயத்தில் திட்ட கமிசனைக் கலைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டு, ஐ.நா. மன்றம் மோடி அரசுக்கு அறிவிக்கை யொன்றை அளித்திருந்தது. இந்தப் பின்னணியெல்லாம் மறைக்கப்பட்டு, மோடி தனது சொந்த அனுபவத்தின் அடிப்படையில் திட்ட கமிசனைக் கலைக்கும் புரட்சிகரமான முடிவை எடுத்ததுபோல பில்ட்-அப் கொடுக்கப்படுகிறது.

இந்தியாவிலேயே, தொழிற்சாலை களால் மாசுபடுத்தப்பட்ட நகரங்களுள் கிட்டத்தட்ட முதலிடத்தை வகிப்பது குஜராத்திலுள்ள வாபி தொழிற்பேட்டையாகும்.

**(17 ஆம் பக்கம் பார்க்க)**

அளவெட்டி, ப. உதயகுமார்




# புதிய வரவுகளால் கதிகலங்கும் மனிதகுலம்

இன்றைய மனித உலகம் வளர்ச்சி பெற்றுவரும் விஞ்ஞான யுகமொன்றிலே பயணித்துக்கொண்டிருக்கின்றன. இந்த வளர்ச்சியின் பயனாக தினம்தோறும் புதிய, புதிய கண்டுபிடிப்புக்களும். இலத்திரனியல் சாதனங்களும் வெளிவந்த வண்ணமேயுள்ளன. இச்சாதனங்களின் வாயிலாக பெருமளவிலான நன்மைகளை மனிதகுலம் அனுபவித்துவரும் நிலையில் சில சாதனங்கள் மனிதகுலத்தின் மாண்பினை, அதன் வளர்ச்சியினை கெடுக்கும் ஒன்றாக இருப்பதும் வேதனைக்குரிய விடயமாகும்.

இவற்றிலே ரீ.வி. என்று அழைக்கப்படும் தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் கணினி, மெமறிக்காட், கைத்தொலைபேசி என்பனவற்றினால் நன்மை கலந்த தீமைகளை சமூகம் எதிர்கொண்டு வருகின்றது. இதனால் நாளைய சமூகத்தின் தூண்களாக, நாளைய தலைவர்களாக வளரவேண்டிய இளம் சந்ததி சீரழிவுப்பாதையிலே பயணிப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

ஒரு காலத்திலே திரைப்படம் ஒன்றினைப் பார்க்கவேண்டுமானால் திரையரங்குகளுக்கே செல்லவேண்டும். திரையரங்குகள் பெரும்பாலும் நகர்ப் புறங்களை அண்டியே அமைக்கப்பட்டு இருக்கும். கிராமப்புறங்களில் அத்தகைய வசதிகள் இருப்பதில்லை. படம் ஒன்றினைப் பார்ப்பதனால், அதுவும் குடும்ப உறுப்பினர்கள் எல்லோரும் போகவேண்டுமானால் வாகன செலவு படத்துக்கான டிக்கெட் செலவு மற்றும் சிற்றுண்டி, சோடா, ஐஸ்கிறீம் என்றெல்லாம் ஒரு தொகைப் பணம் செலவாகும் என்பதுடன் ஒரு நாள் பொழுதினையும், செலவிட வேண்டியிருந்தது.

ஆனால், கால மாற்றம் தந்த பரிசாக, தொலைக்காட்சிப் பெட்டி அறிமுகமாகியது! ஆரம்ப கால கட்டங்களில் படக்கொப்பிகளே அறிமுகமாகியது! ஒரு கொப்பியிலே ஒரு படம் மட்டுமே பதிவுசெய்யப்பட்டு கடைகள்மூலம் வாடகைக்குவிடப்பட்ட காலம் இருந்தது. இவற்றிலே ஆபாசப்படங்களும் இந்தக் கொப்பிகள்மூலமே பதிவேற்றம் செய்யப்பட்டு, இரகசியமாக இளைஞர்கள் கூடிப் பார்த்துவந்தனர். சில மினி சினிமாக்களும் இத்தகைய ஆபாசப் படங்களை காண்பித்து வருமான ஈட்டிவந்தது.

மீண்டும் வந்துசேர்ந்த காலமாற்றம் மூலம் கொப்பிகள் மறைந்து சி.டி. ஆகியது! எல்லாம் சுருங்கி மெமறிக் காட்டுக்குள் உலமே சுருங்கிவிட்டது. ஒரு காலத்திலே கொப்பிகள்மூலம் ஒரு குழுவாக சேர்ந்து ஆபாசப் படங்களினைப் பார்த்தவர்களுக்கு இன்றைய விஞ்ஞான யுகம் கான்போன், மெமறிக் காட் மூலம் தனியாக பார்க்கும் அளவுக்கு வளர்ச்சிப் பாதையை காட்டி வருகின்றது. இத்தகைய வளர்ச்சி என்பது இளம் சமூகத்தினை பிழையான பாதைகளுக்கு கூட்டிச் செல்கின்றது! இது அழிவுகளுக்கும், நாளைய சந்ததியினை எதிர்காலமில்லாத ஒரு வக்கிர உணர்வுள்ள சமூகமாகவும் மாற்றும் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

இன்னொரு வரவான கணினி, மனித வாழ்விலே அதிமுக்கிய பங்காற்றி வருகின்றது. அலுவலகங்களெல்லாம் கணினிமூலமே அன்றாட அலுவல்களை நடைமுறைப்படுத்திவருகின்றது. எழுத்து மூலமாகவும், கோவைகள் வாயிலாகவும் ஆவணப்படுத்தி வைக்கப்பட்டிருந்த அலுவலக வேலைகள் யாவும் கணினி மூலமாக ஒரு சில நிமிடங்களுக்குள் செய்துமுடிக்கப்படுகின்றன.

பலர் சேர்ந்துசெய்யும் வேலைகளை ஒருவரே செய்யக்கூடிய அளவுக்கு மனித வளங்களும். நேரமும் மிச்சமாக்கப்பட்டு வருவதிலே கணினி முக்கிய பங்காற்றி வருகின்றது. அதேவேளை கூகுள் எனும் இணையத்தள வலையமைப்பு ஒன்றுக்குள் போய் தேடினால் உலகத்தையே பார்த்து விடலாம். ஆனாலும் அதே தேடலில் ஆபாசங்களை இலவசமாகக் காணவும் வழிவந்துள்ளது. இது இன்றைய இளம் சமூகத்தை, குறிப்பாக மாணவ சமூகத்தை சீரழிவுப் பாதைக்கு கூட்டிச்செல்கின்றது. இத்தகைய வளர்ச்சியினால் மனித சமூகத்தின் இளைய சந்ததியினில் ஒரு பகுதி கெட்டு குட்டிச்சுவராகிவிட்வும் வாய்ப்புக்கள் உள்ளன.

இத்தகைய காலமாற்றத்தின் வளர்ச்சியில் பல நன்மைகளும் - தீமைகளும் கலந்து இருக்கின்றபோதிலும் நன்மையை மட்டும் எடுத்துக்கொண்டு தீமையை புறக்கணித்துவிட்டால் இலக்குநோக்கி நகரலாம் - இதை எல்லோரும் புரிந்து கொள்ளவேண்டும்.

இது இவ்வாறிருக்கும்போது, இந்தச் சமூக மட்டத்திலே வயது வேறுபாடின்றி, சீரழித்துவரும் முக்கிய பணியினை சின்னத்திரையும் பெரிய திரையும் செய்துவருகின்றன.

வக்கிர உணர்வுகளை எளிதாக தூண்டும்வகையிலும், பெண்களை சிறுமைப் படுத்தும் நோக்குடன், அரைகுறை ஆடைகளுடன், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கடத்துதல், வெட்டுதல், சுடுதல், கொல்லுதல் என்று சமூகத்துக்கு ஒவ்வாத, ஏற்றுக் கொள்ளவேமுடியாத கதையம்சங்களைத் தாங்கியே இன்றைய சினிமாக்கள் வெளிவருகின்றது! வெளிவந்து கொண்டிருக்கின்றது!!

இதேநேரம் சின்னத்திரை என்ற பெயர் பெற்ற தொலைக்காட்சி நிகழ்வுகளில் பெண்களை, அவர்களின் கௌரவத்தை, வாழ்வின் அடையாளத்தை, தொலைத்து விடக்கூடிய தொடர்களினால் பெண்களின் வாழ்வின் எதிர்காலம் எப்படி அமையப்போகின்றது என்கின்ற கேள்விக்கும் விடை தேடவேண்டியவர்களாக உள்ளோம்.

இன்றைய இளைஞர்கள் சினிமாப் பாணியிலே நடாத்தி வரும் சமூக சீரழிவான விடயங்களைப் பார்க்கும் போது, அவை பெரிய திரை என்று சொல்லப் படுகின்ற சினிமா கற்றுக்கொடுத்த பாடங்களாகவே உள்ளன. உதாரணமாகச் சொன்னால் அண்மைக் காலங்களாக குடாநாட்டின் பல பகுதிகளிலும் நடைபெற்றுவரும் வாள்வீச்சு சம்பவங்கள், திட்டமிட்டு பெண்களைக் கடத்துதல், கற்பழித்தல், கொள்ளைகள் மற்றும் கடத்திவைத்து கப்பம் கேட்டல், குழு மோதல்கள் போன்ற சம்பவங்களைக் குறிப்பிடமுடியும்.

மேலே சொல்லப்பட்ட விடயங்களில் எல்லாம் சினிமாவிலே தாராளமாக காட்டப்படுகின்ற விடயங்கள், இவைகளை எவ்வாறு திட்டமிடுவது, வழிநடாத்தும் விபரங்களையும் தெளிவாகப் பார்த்து உணரக்கூடியதாக உள்ளது. இப்படிப் பார்த்து புரிந்துகொள்ளும் இளைஞர் கூட்டங்கள் குழுக்களாக இணைந்தால் அட்டகாசமான சினிமா நடிப்பு நிகழ்வுகளை நிஜமாகவே நடாத்திக்காட்டுகின்றனர்.

இதேவேளை பெரிய திரையிலே இடம்பிடித்துவரும் மற்றொரு விடயமாக சின்னஞ்சிறுசுகளை சபலமடைய வைக்கும் காட்சிகளாக வருகின்றன. உதாரணத்துக்குச் சொன்னால் ஒரு பத்து, பன்னிரண்டு வயதுடைய சிறுவர்கள் ஒரு அழகான இளம் பெண்ணைப் பார்த்து, அவளது அரைகுறை ஆடை ஊடாக அப்பட்டமாக தெரியக் கூடிய அங்கங்களைப் பார்த்து ரசிப்பதும், அவை பற்றி பேசிக்கொள்வதும், உள்ளாடைகளைப் பார்த்து சலனப்படுவதும், ஒளித்திருந்து பீடி, சிகரெட் குடிப்பது போன்ற காட்சிகளுடன் சினிமாக்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அத்துடன் சிறுவர்களை வைத்து கொள்ளை நடாத்துதல் போன்ற காட்சிகளும் பஞ்சமின்றிவருகின்றன. இவைகளைப் பார்க்கும் சிறுவர்களில் சிலராவது அத்தகைய செயல்களில் ஈடுபட்டுவருவது. நாளை எத்தகைய பாதிப்புக்களைக் கொண்டுவரும் என்பதனை கதாசிரியர்களும், தயாரிப்பாளர்களும் புரிந்து கொள்வதில்லை.

இது இவ்வாறிருக்கும்நிலையிலே மற்றொரு மோசமான விடயமும் இப்பத்தியிலே சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாகும். சில படங்களில் பதினைந்து முதல் பதினெட்டு, பத்தொன்பது வயதுக்குட்பட்ட இளைஞர்கள் குழுவாக சேர்ந்து பெண்கள் குளிப்பதை மறைந்து இருந்து பார்த்தல், பெண்களது உள்ளாடைகளை எடுதது வைத்துப் பார்ப்பது, குடும்பக் கட்டுப்பாட்டு சாதனமொன்றை பலூன்போல ஊதி அதை ரசித்தல், அதைவிட கிராமப்புறத்துப் பாடசாலைகளுக்கு ஆசிரியராக வரும் பெண்களை தவறாக வர்ணிப்பது, அவ் ஆசிரியரின் அங்கங்களை இவர்கள் சேர்ந்து வர்ணிப்பது! குருமீதே மோகம் கொள்வது போன்ற வக்கிர உணர்வுகளை சிறுவர் மனங்களில் விதைப்பது போன்ற கதையம்சங்கள் கொண்ட திரைப்படங்கள் உண்மையாம். இளைஞர்களையும் சிறுவர்களையும் கீழ்த்தரமான நிலைக்குக் கொண்டுபோகும் என்பது நிச்சயம்.

இதேவேளை இப்போது வெளியாகும் திரைப்படங்களைக் குடும்பத்தவர்களுடன் கூடியிருந்து பார்க்கமுடியாத அளவுக்கு பெண்களின் ஆடைக்குறைப்பும் இரட்டை அர்த்தமுள்ள வசனங்களும் மிக மோசமான கட்டத்திலே உள்ளன. பெண்களைப் பொறுத்தவரையில் குளியல் அறைக்காட்சிகள் எல்லாம் அப்பட்டமாக வருகின்றது! பெண்களின் மறைக்கப்பட வேண்டிய பகுதிகளை வேண்டுமென்றே ஆடைக்குறைப்புப் பகுதியாக்கி மோசமாக சித்தரிப்பது! இதனைப் பார்க்கும் வக்கிர உணர்வுள்ளோர் பெண்களை இழிவாகப் பார்ப்பது சர்வசாதாரணமாகி வருகின்றது.

ஆகவே கூட்டிக்களித்துப் பார்ப்போமானால், இப்போது வடபகுதியிலே நடைபெறும் கலாசார சீரழிவுகளுக்கும் திரைப்படங்கள் முக்கிய பங்காற்றிவருகின்றது. திரைப்படங்களில் வருவதை இங்குள்ளவர்கள் பின்பற்றுகின்றார்கள் என்பதற்கு நிறைய ஆதாரங்களும் இல்லாமல் இல்லை.

ஒரு தசாப்த காலங்களுக்கு முன்பு வந்த திரைப்படமொன்றிலே இருவீட்டார் சார்பிலும் கிளப்பும் காதல் எதிர்ப்பினை முறியடிக்க அக்காதல் சோடி அலரிவிதை அரைத்துச் சாப்பிட்டு உயிரைப் போக்கியது, அதனைப் பார்த்து ஆயிரக்கணக்கானோர் அலரிவிதையிடம் தஞ்சம்புகுந்து உயிரை விட்டுள்ளனர். அது இன்றும் தொடர்கின்றது! தூக்குப்போட்டு தற்கொலை புரிதல், நஞ்சருந்தி சாதல், நீர்நிலைகள்மீது இருவரும் குதித்து சாதல் போன்ற சம்பவங்கள் படங்கள்மூலம் எளிதாக கற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது! ஒரு சாவுக்குரிய முன் ஆயத்தங்களை திரைப்படங்கள் நுணுக்கமாக காட்டுவதால் பின்பற்றுதல் என்பது எளிதாக உள்ளது!

இப்போது எந்த தொலைக்காட்சி தொடர்களை பார்த்தாலும் அது இந்தியத் தொடர் நிகழ்ச்சிகளே கூடுதலாக உள்ளன. உண்மையை உரைத்தால் தொலைக்காட்சி நிகழ்வுகளில் ஆக்கபூர்வமான, அறிவாற்றல் மிகுந்த, நிகழ்ச்சிகளே கூடுதலாக ஒளிபரப்பாகி வருகின்றன.

ஆனால் இங்கே பிரச்சினைகளை உண்டு பண்ணிவிடுவது தொடர் நாடகங்கள் தான். இந்த நாடகங்களில் பெண்களே, பெண்களுக்கு`வில்லியாகி கதாநாயக பெண்ணை (அப்பாத்திரத்தை) எவ்வளவு கொடுமைப்படுத்தலாமோ அவ்வளவுக்கு கொடுமைப்படுத்துவது, அக்கொடுமைப் படுத்தலுக்குப் பலர்சேர்ந்து திட்டமிடுவது எல்லாவிதமான கொடுமைகளையும் அப்பெண் தாங்கி, தரித்து அந்த வீட்டிலேயே வாழுதல் அல்லது பிறந்த வீட்டுக்கு திரும்பிப் போவது, சீதனம் கொண்டுவராத ஒருத்தியை கட்டிய கணவன் தாயுடன்சேர்ந்து துன்புறுத்துவது போன்ற கதைகள் கொண்ட தொலைக் காட்சித் தொடர்களே அதிகம் வெளிவருகின்றது.

இக்கதையம்சம் கொண்ட தொலைக் காட்சித் தொடர்களும் சமூகங்களில் பாரிய பின்னடைவுகளை உண்டாக்கி வருகின்றன. இதன்விளைவாக பெண்களின் மத்தியிலே உண்டாகிவரும் தாக்கங்களை உணராமல் தொலைக் காட்சியே உலகம் என்று இருக்கும் பெண்களே அதிகம் பேர் உள்ளனர்.

எனக்கு தெரிந்தளவில் பல பெண் சகோதரிகள் கணவன், பிள்ளைகளை நேசிப்பதைவிட தொலைக்காட்சி தொடரை நேசிப்பதே அதிகம்.

புதுப்புது வரவுகளாக விஞ்ஞான உலகம் எதைக் காட்டினாலும் அதைக் கையாள்வது மனிதன்தான். எனவே அவற்றிலே உள்ள நல்லவைகளை மட்டும் எடுத்துக்கொண்டு தீமைகளை கைவிட்டால், எம்மை நாமே ஆளலாம். இல்லையேல் புதிய வரவுகள் எம்மை அடிமையாக்கி எம்மை ஆளநினைக்கும்.

ஆனாலும் தொலைபேசி, மெமறிக் காட், சி.டி கணினி, சினிமா, தொலைக் காட்சி என்பன காலமாற்றம் காரணமாக மனிதகுலத்துக்கு வந்துசேர்ந்தவை. எனினும் இன்னும் பற்பல புதிய கண்டுபிடிப்புக்களும் மனிதத்தேவைகளுக்காக, பயன்பாட்டுக்காக வரலாம்.

எது, எந்த உருவில் வந்தாலும் இவற்றினை கையாளப்போவது மனித இனம்தான். நல்லதை எடுத்துக்கொண்டு தீயதை கைவிட்டால் மனித இனம் அஞ்சாமல் தலைநிமிர்ந்து நிற்கும் சூழ்நிலை உருவாகும். இல்லையென்றால் மனித இனம் இந்த புதிய வரவுகளால் கதிகலங்கி வாழக்கூடிய காலம் உருவாகியே தீரும்.




பாப்பா முரசு சிறுகதை

# புத்திசாலித் தந்தை



கந்தசாமி படிக்காதவராக இருந்தாலும் புத்திசாலி. தன் சிறிய நிலத்தில் காலத்திற்கு ஏற்ப பயிர்செய்து வறுமையின்றி வாழ்ந்துவந்தார். அவருக்கு மனைவியும், ரமேஷ், சண்முகம் என்ற இரு மகன்களும் இருந்தனர். மகன்கள் வளர்ந்து வாலிபர்களாயினர்.

ஒரு நாள் இருவரும் தந்தையிடம் வந்தனர்.

"அப்பா, உங்களுக்கோ வயதாகிவிட்டது. நாங்களும் பெரியவர் களாகிவிட்டோம். எனவே நாங்கள் இருவரும் சேர்ந்து பக்கத்து பட்டணத்தில் ஒரு கடை வைக்க உதவுங்கள்" என்றனர்.

கந்தசாமி யோசித்தார்.

"நீங்கள் சொல்வதும் சரிதான். ஆனால் இருவரும் சேர்ந்து வைக்கவேண்டாம். தனித்தனியாக வையுங்கள்." என்று கூறினார்.

அண்ணன் ரமேஷுக்கு டீக் கடையும் தம்பி சண்முகத்திற்கு குளிர்பானக் கடையும் வைத்துக் கொடுத்தார்.

அது குளிர்காலமாதலால் ரமேஷ் கடையில் வியாபாரமே இல்லை.

இதனால் வெறுப்படைந்த தம்பி, அப்பாவிடம் வந்து, "அப்பா, என் கடையில் வியாபாரமே இல்லை. எனக்கும் அண்ணனைப் போல டீக்கடையே வைத்துக் கொடுங்கள்." என்று கேட்டான்.

"அவசரப்படாதே.... கொஞ்சம் பொறு"! என்றுகூறி அனுப்பினார்.

குளிர்காலம் சென்று கோடைக்காலம் வந்தது. வெயில் மக்களைச் சுட்டெரித்தது. தாகம் மக்களை வாட்ட மெல்ல சண்முகத்தின் குளிர்பானக் கடையில் வியாபாரம் பெருகி அமோகமாக நடந்தது.

அப்போதுதான் காலத்திற்கு ஏற்றாற்போல் கடை வைத்துக்கொடுத்த தன் தந்தையின் புத்திசாலித்தனத்தைப் புரிந்துகொண்டான். மகன்கள் இருவரும் தந்தையின் புத்திசாலித்தனத்தை மனதாரப் பாராட்டினர்.

# வாரம் ஒரு திருக்குறள்




**அடக்கம் உடைமை**

**126**

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப் புடைத்து.**

ஒரு பிறவியில் ஒருவன் தன் ஐம்புலன்களையும் அடக்கினால் அது அவனுக்கு ஏழு பிறப்புக்கும் பாதுகாப்பளிக்கும்.

# வாகனம் செலுத்தும் வழிமுறைகள்!



வண்டி வாகனம் வாங்கிக்கோ - தம்பி
வாகாய் ஓட்டிடக் கத்துக்கோ
வண்டி ஓட்டிடும் வழிமுறையை - அண்ணன்
பாங்காய்ச் சொல்கிறேன் கேட்டுக்கோ!

பள்ளிக்கூடம் அருகே பையப் போக வேணும்
பக்கம் திரும்ப நேர்ந்தால் கையைக் காட்ட வேணும்
தள்ளுவண்டி பின்னே தள்ளி ஒதுங்க வேணும்!
தலையைத் திருப்பி பேசும் தன்மை மாற வேணும்!

சிக்னலிலே விளக்கெரியும் கூர்ந்து நோக்க வேணும்
சிவப்பு மஞ்சள் பச்சைக்கேற்ப நிறுத்தி ஓட்ட வேணும்
எக்கணமும் சாலையில் கவனம் பதிக்க வேணும்
செல்போனை பயணத்தில் அமர்த்தி வைக்க வேணும்!


உரிமம் மற்றும் ஆவணங்கள் எடுத்துச் செல்ல வேணும்
உரியவர்கள் கேட்கும்போது எடுத்துத் தர வேணும்
இரவினிலே தலைவிளக்கை எரிய விட வேணும்
எதிரிலொரு வண்டி வரின் ஒளி குறைக்க வேணும்!

வளைவுகளில் முந்துகிற ஆசை துறக்க வேணும்
வண்டிகளை முந்த வேண்டின் ஒலியெழுப்ப வேணும்
தலைக்கவசம் அணிவதற்கு சுயவிருப்பம் வேணும்
காரை ஓட்டிச் செல்லும்போது வாரை மாட்ட வேணும்!

விபத்தின்றி செல்வதற்கு விழிப்புணர்வு வேணும்
விவேகமான பயணமெனில் மிதவேகம் போதும்
ஆபத்தின்றி வாகனத்தை அமைதியாக ஓட்டி
ஆனந்தமாய் வாழ்ந்திடுவாய் ஆயுளை நீ கூட்டி!

# தெரியுமா?

- உலகில் அதிகளவு சிலை வடிக்கப்பட்டவர் ரஷ்யாவின் முன்னாள் அதிபர் லெனின்.
- இந்தியாவை ஆண்ட முதல் முஸ்லிம் பெண் அரசி ரஸியா பேகம்.
- 'ஜெய் ஜவான் ஜெய் கிஸான்' என்று முழக்கமிட்டவர் லால் பகதூர் சாஸ்திரி.
- ரஷ்யாவை 'இரும்புத்திரை நாடு' என்று அடைமொழி சேர்த்து அழைத்தவர் வின்ஸ்டன் சர்ச்சில்.
- இந்தியாவின் மிகப் பழமையான புத்தகக் கடை சென்னையிலுள்ள 'ஹிக்கின்பாதம்ஸ்' (1844இல் தொடங்கப்பட்டது)
- பாறைப் பஞ்சு என அழைக்கப்படும் கனிமப் பொருள் அஸ்பெஸ்டாஸ்.
- ஜெர்மனி வெள்ளி என்பது துத்தநாகம், தாமிரம், நிக்கல் ஆகிய உலோகங்களின் கலவை ஆகும்.
- கிரீஸ் நாட்டை, 'அரசியல் அமைப்பு ஆய்வுக்கூடம்' என்று அழைப்பார்கள்.
- உயில் எழுதும் வழக்கத்தை முதன்முதலாக ஆரம்பித்தவர்கள் உரோமானியர்கள்.
- துப்பறியும் மோப்ப நாய்களை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்கள் பிரெஞ்சுக்காரர்கள்.
- ஸ்பெயின் நாட்டு மக்கள் காலை உணவில் சொக்லேட்டை அதிகம் சேர்த்துக் கொள்கிறார்கள்.
- 'கால்வாய்களின் நகரம்' என்று அழைக்கப்படும் நகரம் வெனிஸ். இங்கு 177 கால்வாய்கள் உள்ளன.
- நீர்மூழ்கிக் கப்பலுக்குள் இருந்து, நீர்மட்டத்துக்கு மேலுள்ள பொருட்களைப் பார்க்கப் பயன்படும் கருவிக்குப் பெயர் பெரிஸ்கோப்.




# காற்று மாளிகை

ஆடிக்காற்று, ஆளை அசத்துகிறது. இந்தியாவின் பாலைவன மாநிலமான ராஜஸ்தானில், காற்று வாங்குவதற்கென ஒரு மாளிகையையே கட்டிவைத்துள்ளனர். 5 அடுக்கு மாளிகையான இதனை, காற்று மாளிகை எனப் பொருள்படும் வகையில் 'ஹவா மகால' என அழைக்கின்றனர்.

திரைப்படங்களில் ஜெய்ப்பூரில் 'லேண்ட் மார்க்' ஆக இந்த ஹவா மகாலே உள்ளது.

சவாய் பிரதாப் சிங் மன்னரால் 1799இல் 'ஹவா மகால்' கட்டப்பட்டது. லால் சந்த் உஸ்தாத் இதனை வடிவமைத்தார். அரண்மனைப் பெண்கள் நகரை இந்த மகாலில் உள்ள துவாரங்கள் வழியேதான் கண்டனர்.



சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்

**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 03.11.2014

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 1067**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1065**

எம்.சமீர், முஸ்லிம் தெரு,
யாழ்ப்பாணம்.

பரிசுக்குரியவர்: 1065

01. யோ.சுதர்சினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
02. M.M.M.சாமில், அலாப்தீன் மாவத, மிரிஸ்வத்த.
03. ப.தினேஷ், கோப்பாய் மத்தி, கோப்பாய்.
04. வ.வர்மி, பிரதான வீதி, பதுளை.
05. க.அங்கஜன், ரெட்பானா, விசுவமடு.
07. எம்.ஒவியா, தபால் கந்தோர் வீதி, மன்னார்.
08. இ.மாளவிகா, ஜின்னாநகர், திருகோணமலை.

அதிர் இடி 61

# அற்புதன் எழுதிய இடி அமீன்



இடி அமீனுடன் தொடர்பு கொள்ள முயற்சி செய்தார் மைக்கேல். முடியவில்லை. வீட்டை காலி பண்ணி விட்டு பழைய வீட்டுக்கே சென்றார். திருமதி மைக்கேல் இரகசியமாக கண்ணீர்விட்டாள். தன் ஆசையால் தன் கணவர் படும் கஸ்டத்தைக்காண அவள் மனம் திருந்தியது.

இனி...

**அன்று** மாலையே சோவியத் யூனியனில் இருந்த மைக்கேல் ஒண்டோகாவுக்கு தகவல் போனது.

``வெளிநாட்டமைச்சராக பதவியேற்க நீங்கள் அழைக்கப்படுகிறீர்கள். உடன் புறப்படவும்''

மைக்கேல் ஒண்டோகாவுக்கு ஆச்சரியம் என்றால் ஆச்சரியம். அவருக்கு அமைச்சர் பதவியில் பெரிய ஆசையொன்றும் கிடையாது.

அமீனின் அமைச்சரவையில் பணிபுரிவதையிட்டும் அவருக்கு அத்தனை ஆர்வமில்லை. அப்படியிருந்தும் புறப்பட்டுவந்தார்.

``சோவியத் யூனியனில் உங்கள் பணி என்னை கவர்ந்துவிட்டது. அதனால் நான் என் பக்கத்திலேயே உங்களை வைத்திருப்பதற்காக இந்த அமைச்சர் பதவி'' என்றான் அமீன்.

மைக்கேல் ஒண்டோகா வெளிநாட்டமைச்சராக பதவி ஏற்றுக்கொண்டதாக அறிவிப்பு வெளியானது.

அமீன் உதவி ஜனாதிபதியாக இருந்தவன் முஸ்தபா அட்றிசி.

அமீனின் உறவினர்... நம்பிக்கைக்கு பாத்திரமானவன். எத்தகைய படுபாதகச் செயலுக்கும் அஞ்சாதவன்.

முஸ்தபா ஆட்றிசிக்கு மைக்கேல் ஒண்டோகாவை வெளிநாட்டமைச்சராக நியமித்தது பிடிக்கவில்லை.

அமீனிடம் தன் அதிருப்தியை கூறினான். `ஏற்கக்கூடிய காரணமாக இருந்தால் கூறு. சீட்டைக் கிழிக்கலாம் என்றான் அமீன்.

``மைக்கேல் புத்திசாலி. பல நாடுகளுடன் தொடர்புள்ளவன் எங்களுடன் முரண்டுபிடிக்கலாம். அவன் அமைச்சரவையில் இருந்து விலகி ஓடினால். அவன் செய்யும் பிரசாரத்தால் நாங்கள் நாறிப்போவோம்!' என்றான் முஸ்தபா.

அமீனுக்கு அப்போதுதான் தனது தவறு உறைத்தது. `நீ சொல்வதும் யோசிக்க வேண்டியதுதான். நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று அவனை அனுப்பினான்.

அமீனின் அழைப்பை ஏற்று உடனடியாகப் புறப்பட்டு வந்திருந்தார் மைக்கேல். அதனால் சோவியத் யூனியனில் தன் உடைமைகள் மற்றும் சில ஆவணங்களை விட்டு விட்டு வந்திருந்தார்.

அவற்றை எடுத்துவருவதற்கு மீண்டும் சோவியத் யூனியனுக்கு சென்றிருந்தார் மைக்கேல்.

உகண்டா வானொலி வெளியிட்ட அறிவிப்பு பலரையும் யோசிக்கவைத்தது.

``இந்த நாட்டில் என்னதான் நடக்கிறது? எல்லாமே மர்மமாக இருக்கிறதே'' என்று ஆளாளுக்கு முணுமுணுத்தனர்.

``வெளிநாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள மைக்கேல் ஒண்டோகா இரண்டு நாட்களுக்குள் நாடு திரும்பி பதவி ஏற்கத்தவறினால். அவரது பதவியே பறிபோகும்'' என்றுதான் வானொலி அறிவித்தது.

இந்த அறிவித்தல் பற்றி மைக்கேல் ஒண்டோகா அறிந்திருந்தால் நாடு திரும்பாமலேயே இருந்திருப்பார்.

திருமதி மைக்கேல் அமீனை தொடர்பு கொள்ள முயன்றாள். அமீன் அவளைச் சந்திப்பதையும் பேசுவதையும் தவிர்த்தான்.

அறிவித்தல் பற்றி அறியாது விட்டாலும் மைக்கேல் இரண்டு நாட்களுக்குள் நாடு திரும்பி விட்டார். அதனால் பதவி பறி போகவில்லை.

தான் இல்லாதபோது விடுவிக்கப்பட்ட அறிவித்தலைப் பற்றிய விபரம் அறிந்த மைக்கேல் சினமுற்றார்.

என்ன இது நீங்கள்தானே பதவியைத் தந்தீர்கள். பின்னர் ஏன் இது மாதிரி அவமானப் படுத்தினீர்கள்? என்று அமீனிடம் நேரடியாகவே கேட்டுவிட்டார் மைக்கேல்.

அமீன் உடனடியாக பசுத் தோலைப் போர்த்திக்கொண்டான்.

என்ன நடந்தது என்று கேட்க அமைச்சர் விபரங்களைக்கூற எதுவும் அறியாதவன் போல அப்படியா?'' நான் விசாரித்துப் பார்க்கிறேன். என்னையறியாமல் தவறு நடந்துவிட்டது நடவடிக்கை எடுக்கிறேன். என்று கூறியனுப்பினான்.

கட்டாயம் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இல்லையானால் நான் இராஜினாமா செய்ய வேண்டியிருக்கும் என்று கூறிவிட்டு சரேரென்று போய்விட்டார் மைக்கேல்.

தன்னிடம் இப்படிப் பேசும் ஒருவரை தொடர்ந்து அமைச்சராக வைத்திருப்பது ஆபத்து என்பதை அமீன் அப்போதே குறித்து வைத்துக் கொண்டான்.


மைக்கேலை இராஜினாமா செய்யவைக்க முன்பாக அவரைச் சீண்டிப்பார்க்க நினைத்தான்.

ஆசிய நாட்டவர்கள் விட்டுச்சென்ற வீடுகளில்தான் ஏனைய அமைச்சர்கள் குடியிருந்தார்கள். தானும் அப்படியான வீடொன்றில் குடியேறினார் மைக்கேல்.

இராணுவப் பொலிசார் அந்த வீட்டை முற்றுகையிட்டனர். மைக்கேலுக்கு ஒரே குழப்பம்.

என்ன எங்கே வந்தீர்கள். என்று கேட்டார்.

``ஆசிய நாட்டவர்களது உடைமைகளை பாதுகாப்பது அரசின் கடமை. இந்த வீடு பொலிஸ் பாதுகாப்பில் இருக்கிறது. அதனால் நீங்கள் உடனடியாகவே காலி செய்யவேண்டும்'' என்று கூறினார்கள் இராணுவப் பொலிசார்.



இடி அமீனுடன் தொடர்பு கொள்ள முயற்சி செய்தார் மைக்கேல். முடியவில்லை.

வீட்டை காலி பண்ணி விட்டு பழைய வீட்டுக்கே சென்றார். திருமதி மைக்கேல் இரகசியமாக கண்ணீரவிட்டாள். தன் ஆசையால் தன் கணவர் படும் கஸ்டத்தைக் காண அவள் மனம் திருந்தியது.

(தொடரும்)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 596

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | | 23 | 24 |
| 25 | 26 | | 28 | 29 | 30 |
| | 32 | 33 | 34 | 35 | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 594 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பா | 2 ரா | 3 ட் | 4 டு | 5 த | 6 ல் |
| 7 ல | 8 ங் | 9 கை | | 11 மி | 12 கா |
| 13 ன் | 14 கி | 15 த | 16 வ | | |
| 19 சூ | | 21 ல் | 22 ட | 23 ட் | 24 மீ |
| 25 ய | 26 தா | 27 க | 28 ம் | | 30 ஓ |
| 31 ரி | | 33 டு | | 35 கி | 36 லி |

**இடமிருந்து வலம்**

01. மார்கழி மாதத்தில் வைகறைப் பொழுதில் பக்தி சுவையுடன் பாடப்படுவது.
09. இந்தியாவில் ஒரு மாநிலம் . (குழம்பியுள்ளது)
16. அக்கிராகாரம். (குழம்பியுள்ளது)
19. மனித இனத்துக்கு ஒரு வரப்பிரசாதமானவரை இப்படி அழைக்கலாம்.
23. உயர்வானது ; குலம். (திரும்பியுள்ளது)
25. வெப்புகொப்பளம். கடைசி எழுத்து விடுபட்டுள்ளது.
28. தள்ளுபடி. (திரும்பியுள்ளது)
32. கிறுக்கு; மூடத்தனம்.

**மேலிருந்து கீழ்**

01. 'தல' அஜித் தமிழில் அறிமுகமான திரைப்படம். (திரும்பியுள்ளது)
03. முதுகு ; புறம்.
04. சந்தனம்; கழுத்துவரி. (குழம்பியுள்ளது)
05. தும்பம்; வருத்தம் (குழம்பியுள்ளது)
06. வேதவொழுக்கம்.
14. சைபீரியாவில் உள்ள இந்த ஏரிதான் உலகில் ஆழமான ஏரி.
28. வணாங்கு.

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **03.11.2014** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 596
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 594 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி.**

த. அஸ்வினி, ஆலங்கேணி, கிண்ணியா.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. சி.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.
02. எஸ்.அனித்தா, கண்டி வீதி, அரியாலை.
03. ஆர்.ஜோசெப், கோவில் வீதி, மன்னார்.
04. சு.அரவிந்தன், 3ஆம் குறுக்குத்தெரு, கிளிநொச்சி.
05. ஆர்.ரெம்சி, குருநகர், யாழ்ப்பாணம்.
06. ந.தேவிமலர், எழுதுமட்டுவாள், பளை.
07. ய.சுரேஸ், தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்.
08. சி.கந்தசுவாமி, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
09. எம்.சலீம், பிரதான வீதி, திருகோணமலை.







## தள்ளிப் போகிறது கத்தி?

இளைய தளபதி ரசிகர்கள் கத்தியை தீபாவளி சரவெடியை கொண்டாட காத்திருக்கின்றனர். இப்படத்திற்கு தெலுங்கிலும் நல்ல வரவேற்பு உள்ளதால் தீபாவளி அன்றே அங்கும் ரிலிஸாக இருந்தது. தற்போது என்ன நடந்தது என்று தெரியவில்லை. படம் ஒரு வாரம் கழித்துத்தான் தெலுங்கில் ரிலீஸாக உள்ளது என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றது. இதனால் ஒக்டோபர் 31ம் திகதி படம் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. கத்தி தெலுங்கு இசை வெளியீட்டு விழாவில் சிரஞ்சீவி கலந்துகொள்கிறார் என்று படக்குழு அறிவித்துள்ளது.

## நொந்தார் அனிருத்

இந்திய சினிமாவில் ரகுமானுக்குப் பிறகு முதல் படத்திலேயே ஹிட் அல்பத்தை கொடுத்தவர் அனிருத். இவரை தேடி புகழ்வந்தாலும், சர்ச்சைகளும் பின்தொடர்ந்து வரத்தொடங்கியது. ஆண்ட்ரியாவுடனான முத்தம் நெட்டில் பரவ அனைவரும் அதிர்ச்சியில் ஆழ்ந்தனர். இது குறித்து அவரே சமீபத்தில் ஒரு பேட்டியில் விளக்கம் அளித்துள்ளார். இதில் "கொலவெறி வைரல"னு இன்டர்நெட்மூலம் பிரபலமான இசையமைப்பாளர் நான். என்னை வளர்த்த அதே இன்டர்நெட் என் இமேஜை டேமேஜும் பண்ணுச்சு. எனக்கு அந்த போட்டோ பெரிய ஷாக்தான். ரொம்ப நொந்துட்டேன். எனக்கே அப்படின்னா, வீட்ல உள்ளவங்களுக்கு எப்படி இருக்கும்னு பார்த்துக்கோங்க.

ஆனா, கடவுள் புண்ணியத்துல வீட்ல எனக்கு சப்போர்ட் பண்ணிணாங்க. ரொம்ப ஆறுதலாப் பேசினாங்க. ரெண்டு நாள் உடைஞ்சுபோய் இருந்தேன். "இது இன்டர்நெட் காலம். எதுவுமே ரெண்டு நாளைக்கு மேல பழைய மேட்டர்தான். நாளைக்கே வேற ஒரு விஷயம் வைரல் ஆச்சுன்னா, மக்கள் உன்னை மறந்துருவாங்க"னு மனசைத் தேத்திக்கிட்டு அடுத்த வேலையைப் பார்க்க ஆரம்பிச்சுட்டேன்" என்று கூறியுள்ளார்.




## சிம்பு கோரிக்கை

சிம்பு தீவிர அஜித் ரசிகர் என்று அனைவருக்கும் தெரியும். ஆனால் இதை ஒரு விருது விழா மேடையில் அறிவித்தார் இவர். சமீபத்தில் நடந்து முடிந்த பிரம்மாண்டமான விருது விழா ஒன்றில் தெலுங்கில் சிறந்த பின்னணி பாடகராக சிம்பு தேர்ந்தெடுக்கப்பட்டார்.விருது வாங்கிய அவர் "நான் தல அஜித்தின் தீவிர ரசிகன், அதேபோல் தெலுங்கில் பவன்கல்யான் அவர்களின் தீவிர ரசிகன், அவர்கள் படங்களில் நான் ஒரு பாடல் பாடவேண்டும்" என்று தன் விருப்பத்தை தெரிவித்தார்.

## விலகினார் அகத்தியன்

தேசிய விருது பெற்ற இயக்குனர் மற்றும் இயக்குனர் இமயம் பாரதிராஜா ஆகியோர் சமீபத்தில் நேருக்கு நேர் மோதிக்கொண்டதாகவும், இதனால் பாரதிராஜாவின் தயாரிப்பில் அகத்தியன் இயக்கவிருந்த திரைப்படத்தில் இருந்து அகத்தியன் விலகிவிட்டதாகவும் கூறப்படுகிறது.


காதல் கோட்டை, கோகுலத்தில் சீதை, காதல் ஜோதி, விடுகதை போன்ற பல திரைப்படங்களை இயக்கியவர் அகத்தியன். இவர் சமீபத்தில் பாரதிராஜாவின் தயாரிபில் ஒரு படத்தை இயக்க ஒப்புக்கொண்டார். இந்த படத்தில் அகத்தியன் மகள் விஜயலட்சுமி முக்கிய வேடத்தில் நடிப்பதாக இருந்தது. இந்நிலையில் கோவையில் படப்பிடிப்பு நடைபெறும் நேரத்தில் திடீரென விசிட் அடித்த பாரதிராஜா, படத்தை இயக்குவதில் ஒருசில ஆலோசனைகள் கூறியதாகவும், இதனால் ஈகோ பிரச்சினை இருவருக்கும் இடையே ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதனால் படப்பிடிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே திடீரென படப்பிடிப்பில் இருந்து வெளியேறிய அகத்தியன், பின்னர் படத்தில் இருந்தே விலகுவதாகவும் தெரிவித்துவிட்டாராம். இதனால் இந்த படத்தை பாரதிராஜாவே இயக்கவுள்ளதாக கூறப்படுகிறது.











## லைக்காவின் முடிவால் விஜய் ரசிகர்கள் ஏமாற்றம்

தற்போது கத்தி படம் எவ்வித பிரச்சினையும் இன்றி வெளிவரும் சூழ்நிலை உள்ளது. இந்நிலையில் கத்தி படத்தின் தயாரிப்பாளரை எதிர்த்து விஜய் ரசிகர்களே குரல்கொடுக்க தொடங்கியுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

விஜய்யின் கத்தி திரைப்படம் திரையில் வெளியாக இன்னும் ஐந்து நாட்களே உள்ள நிலையில் இன்னும் படத்தின் டிரைலரை வெளியிடவில்லை. டிரைலர் தயாராக இருக்கின்றபோதும் அதனை வெளியிட தயாரிப்பு தரப்பு முருகதாஸுக்கு தடை விதித்துள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் வெளியான டீஸர், மிகவும் சுமாராக இருந்ததாக சமூக வலைத்தளங்களிலும், இணையத்தளங்களிலும் விமர்சிக்கப்பட்டது. விஜய்யையும், முருகதாஸையும் பலர் கலாய்த்து கமெண்ட் போட்டனர். அந்த நேரத்தில் 'ஐ' படத்தின் டீஸர் வெளிவந்ததால், 'ஐ' டீஸரையும், 'கத்தி' டீஸரையும் ஒப்பிட்டு கத்தி படத்தின் டீஸரை மிகவும் தரக்குறைவாக பலர் விமர்சித்தனர்.

படத்தின் வியாபாரம் தற்போது பிரமாண்ட அளவில் நடைபெற்றுவரும் நிலையில் டிரைலரை வெளியிட்டு, அந்த டிரைலர் நெகட்டிவ் ரிசல்ட்டை தந்தால், படத்தின் வியாபாரத்திற்கு பாதிப்புவரும் என்று கருதிய தயாரிப்பாளர், முருகதாஸிடம் கத்தி படத்தின் டீஸை ஒக்டோபர் 21ஆம் திகதி வெளியிட ஒப்புதல் கொடுத்துள்ளார் எனக் கூறப்படுகிறது. கத்தி படத்தின் டிரைலர் வெளியாகாததால் விஜய் ரசிகர்கள் படத் தயாரிப்பாளருக்கு கண்டனம் தெரிவித்துவருகின்றனர்.

## ரஜினியின் அடுத்த படம் என்ன?

கே.எஸ்.ரவிகுமார் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடித்துவரும் 'லிங்கா' திரைப்படம் மிக விரைவில் வெளிவர இருக்கின்றது. இந்நிலையில் ரஜினியின் அடுத்த படம் குறித்த தகவல்கள் வெளிவந்துள்ளது.

ரஜினியின் மிக நெருங்கிய நண்பர் ராஜ்பகதூர், கடந்த 42 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியான 'பங்காரத மனுஷ்யா' என்ற படத்தை தமிழில் ரீமேக் செய்ய உள்ளதாகவும், இந்த படத்தில் ரஜினி நடிக்கவுள்ளதாகவும் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். லிங்காவுக்கு முன்னரே இந்த படத்தில் நடிக்க ரஜினி ஒப்புக்கொண்டதாகவும், அதனால் கே.எஸ்.ரவிகுமாரின் படத்தை முடித்துவிட்டு கண்டிப்பாக இந்த படத்தில் நடித்துத் தருகிறேன் என்று ரஜினி வாக்குறுதி கொடுத்திருப்பதாகவும் ராஜ்பகதூர் கூறியுள்ளார்.

படித்த இளைஞர்களை விவசாயத்திற்குள் இழுக்கும் ஒரு புகழ்பெற்ற விவசாயி செய்யும் முயற்சியை கதையாக கொண்ட இந்த படத்தில் கன்னட சூப்பர் ஸ்டார் ராஜ்குமார் மிக அற்புதமாக நடித்திருப்பார். ராஜ்குமார் ஏற்ற வேடத்தைதான் ரஜினி தற்போது நடிக்கவுள்ளார்.


## உலக நாயகனுக்கு மூச்சு திணறல்!

கடந்த சில நாட்களுக்கு முன்னர் உடல்நலமின்றி சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று குணமடைந்த உலக நாயகன் கமல்ஹாசன், தற்போது படப்பிடிப்பில் ஏற்பட்ட சிறிய விபத்து காரணமாக மீண்டும் கேரள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனால் கமல் ரசிகர்களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மோகன்லால், மீனா நடித்த திரிஷ்யம் என்ற படத்தின் ரீமேக்கில் நடித்துவரும் கமல்ஹாசன், நேற்று ஒரு சண்டைகாட்சி படப்பிடிப்பில் கலந்து கொண்டார். பொலீஸாக நடிக்கும் கலாபவன்மணி, கமல்ஹாசனை அடிப்பது போன்றும் அப்போது அவருடைய மூக்குவீங்குவது போன்ற காட்சி படமாக்கப்பட்டது.

இந்த காட்சியில் வீங்கிய மூக்குடன் நடிக்க, கமல்ஹாசனுக்கு மூக்கின் உள்ளே இறப்பர் ஒன்று பொருத்தப்பட்டது. ஆனால் எதிர்பாராதவிதமாக அந்த இறப்பர் துண்டு கமல்ஹாசனின் மூக்கின் உள்ளே சென்றதால் அவரால் மூச்சுவிட முடியவில்லை.

இதனால் படக்குழுவினர் பெரும் பதட்டம் அடைந்தனர். உடனடியாக கமல்ஹாசன் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டார். சில நிமிட சிகிச்சைக்கு பின்னர் கமல்ஹாசனின் மூக்கின் உள்ளே இருந்த இறப்பர் துண்டு வெளியே எடுக்கப்பட்டது.



# உன் ஆயுள் எனக்கு வேண்டும்



இறைவா! அவனியிலே நான் வாழ
உன் நல்லாசி எனக்கு வேண்டும்.
அவனியிலே என் புகழ் மேலோங்க
உன் புகழ்மாலை எனக்கு வேண்டும்.

உன்னை நான் வணங்க
என்னை மற்றோர் வணங்க
மற்றோரை கற்றோர் வணங்க
கற்றோரை உலகம் வணங்க

உலகத்தை நீ வணங்க
உன்னை நான் வணங்க
உன் ஆயுள் எனக்கு வேண்டும்
பாமாலை பாடி, புகழ்மாலை சூடி

மலர் மாலை அணிந்து – உன்
பாதம் நான் தொட
உன் ஆயுள் எனக்கு வேண்டும்
தென்றலோடு தூவானமாய்
நாளும் உன்னருகில் வர
உன் ஆயுள் எனக்கு வேண்டும்
வாழ்க்கை எனும் நாடகத்தில்
என் கதாபாத்திரத்தை

உனக்குச் சொல்லி – உன்
ஆலோசனை பெற – உன்
ஆயுள் எனக்கு வேண்டும்
என் வாழ்க்கை முடிந்துவிட்டது.


என் ஆயுள் குறைந்து விட்டது
நீண்ட நாள் வாழ ஆசைப்படுகிறேன்
அதனால் – இறைவா!
உன் ஆயுள் எனக்கு வேண்டும்

கவியரசி [றெசிந்தா]
சங்கத்தார்வயல்.



# எப்போது நாம் சேர்வது?

என் இனிய உறவுகளுக்கான
சில மணித்துளிகள்...
எப்படி இருக்கிறீர்கள்?
விண்மணிகளுக்கு இடையில்
தினம் உங்கள் முகங்கள்
எப்படி மறப்பது...
பிரியப் போகும் நிமிடங்கள்
பார்க்காத மணித்துளிகள்
எப்போதாவது நினைத்ததுண்டா?
உங்கள் நினைவுகளால்
மனசு ஒரு கணம் கனக்கிறது
சந்தோசங்களும் சுகங்களும்
தொலைந்து போயின.
கண்ணீர் துளிகளுக்கு மட்டும்
இங்கு குறைவில்லை
பிறருக்காக வாழ்ந்த உங்களுக்கு
என்னால் தர முடிந்த காணிக்கை
கண்ணீர் துளிகள் மட்டுமே...
வேறு எதைத் தருவது
வெட்ட வெளியில்
மௌனமாய் வெளியேறும்
வெப்பத்தின் தனல்களையா?
அல்லது ஒவ்வொருவர் மனசின்
மூலையிலும் தொலைந்து கிடக்கும்
சோகத்தின் பாஷைகளையா?
எதைத் தருவது...?
வாழ வேண்டும் பல சாதனைகள்
புரியவேண்டும் என்ற ஆசையோடு
வாழ்ந்த உங்கள் கனவுகள்
இன்று மண்ணுக்குள்
புதைந்து போன கதைகளையா?
வாழ்க்கையில் பல அத்தியாயங்கள்
கல்வி, பருவம், காதல், திருமணம்
உறவுகள், மரணம்...
எல்லா அத்தியாயங்களையும்
புரட்டி மட்டுமே பார்த்து விட்டு
மரணத்தை மட்டுமே எப்படி?
உங்களால் அனுபவிக்க முடிகின்றது
அநீதிகள், கொடுமைகள் நிறைந்தவர்கள்
மத்தியில் நல்லவர்கள் என்ற
பெருமையோடு போய்விட்டீர்கள்
திரும்பவும் நாம் எப்போது சேர்வது?
ஓ... என்ன? சந்தேகம்...
வெகுவிரைவில் உங்களுடன்
என் பயணம் தொடரும்...




# நெஞ்சம் கனக்கிறது!




குஞ்சு நெஞ்சங்கள்
குயிலிசை பாட்டிசைத்து குதூகலித்து
மயில் தோகை விரித்தாடும்
மலரும் மொட்டுக்களின்
முயல் குட்டி துள்ளுவதெல்லாம்
விழி மேய்கையில்
மொழியொன்று பிறக்கிறது
இனிப்புப் பண்டம் சுவைக்கிறது.
ஆனாலும் சில
அரசியல் மேடை நடிகர்களின்
போர் முலாம் பூசும்
நாடகம் பார்க்கையில்தான்
நெஞ்சம் கனக்கிறது.

A.பாரிஸ், மிகிந்தலை

# எரிமலை தணிக்கும்

எழுந்திரு மனிதா!
நீ என்பது தான் நிஜம்.
வியர்வையின் விலையை
நிஜம் தான் நிர்ணயிக்கவேண்டும்.
வறுமையின் மடியில்
அறிவை உறங்க விடாதே!
உன்னை நீ திருத்திக் கொள்

வற்றிய தாய்ப்பாலின்
வறுமையை நான் எழுதினேன்
நீ தனங்களின்
வனப்பைச் சிந்திக்கிறாய்...
கற்பழிப்பின் கொடுமையை
நான் எழுதுகின்றேன்.
நீயோ நிர்வாணத்தை மட்டும்
சிந்திக்கிறாய்...
எல்லாவற்றிற்கும் மேலாக
சீர்கேடு என்னும் எரிமலையை
என் கவிதையென்னும் பனிமலரால்
அணைக்க நினைக்கிறேன்.
அவ்வளவே தான்.

R.S.ஆனந்தன்.





# அவசரம்

நிதானம் தொலைத்து
சந்தோசம்
தேடி அலைந்தவனை
பார்த்துச் சிரித்தது

சிறுதுளி தேனில்
சிங்காரமாய் சிறகடித்த
வண்ணாத்தி.

மனால், போருத்தொட்ட.




# தலைகள் சுழல்கின்றன



**ஹர்பஜன் சிங்** மிகுந்த கோபத்துடன் இருக்கிறார். காரணம் சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளிப்படுத்தும் நடுவர் டரல் ஹயர் மீண்டும் சுழல் பந்துவீச்சாளர்களுடன் முட்டிமோதிக் கொள்வதுதான். அதாவது தற்போதைய சுழல் பந்துவீச்சாளர்களின் முறை தவறிய பந்துவீச்சுக்குக் காரணம் 90 களின் பிறப்பகுதியில் விளையாடிய வீரர்களின் தவறான முறைளை இவர்கள் பின்பற்றியதுதான் என்று கருத்து வெளியிட்டுள்ளார்.

அந்த 90களின் பிற்பகுதி எனும்போது குறிப்பாக ஹர்பஜன், சக்லெய்ன் முஷ்டாக், முரளி போன்றோர் அடங்குகிறார்கள்.

டரல் ஹயர் அபத்தமான கருத்துக்களைக்கூறி என்னைச் சிறுமைப்படுத்த முயன்றால் இவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பேன். இவர் என்ன ஐ.சி.சியை விடக்கொம்பனா? என்று கொதித்துப் போய்க் கேட்கிறார். தூஸ்ரா வகைப் பந்துவீச்சை கண்டுபிடித்தவர் சக்லெய்ன் முஷ்டாக். அதனை நான் பின்பற்றினேன். சிலர் தூஸ்ராவை முறைப்படி பயன்படுத்தவில்லை என்பதற்காக எல்லாம் பந்துவீச்சாளர்களையும் குறைகூறுவது என்ன நியாயம்.

தூஸ்ராவை சிலர் சரியாகப் பயன்படுத்தவில்லை என்பதற்காக நான் என்ன செய்யமுடியும். இவருக்கு இதெல்லாம் பற்றிப் பேச அருகதை இல்லை. மேலும் தற்போது முறை தவறி பந்துவீசுபவர்கள் விரைவில் தங்கள் பாணியைத் திருத்திக்கொள்வார்கள். மேலும் நான் விளையாடிய பல போட்டிகளில் இவர் நடுவராகப் பணியாற்றியுள்ளார்.

அப்போதெல்லாம் என் தவறு இவருக்குக் கண்ணில் படவில்லையா? இப்போது ஒருசிலர் குற்றஞ்சாட்டப்படும்போது நாங்கள் இவர்களுக்குப் பிழையான முன்மாதிரியாகத் திகழ்ந்தோம் என்று ஏன் குற்றம் சாட்டுகிறார். "நாங்கள் தவறாக செயற்படுங்கள் என்றுசொல்லியா கொடுத்தோம்" என்று கேட்கிறார். டரல் ஹயர் போன்றவர்கள் இப்போதல்ல முன்பே இப்படியான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள்தான். எனவே இந்த விடயத்தில் ஹர்பஜன் ஆவேசப்படுவதில் தப்பில்லை.

மேலும் மீண்டும் இன்னொரு தடவை இந்திய அணிக்குள் நுழையும் ஆவலுடன் செயற்பட்டுக்கொண்டிருக்கும் இவருக்கு ஆத்திரம்வருவதும் நியாயமானதே. தற்போது சுழல் பந்துவீச்சு விவகாரம் மிகவும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

# ஆசை கூடாது



பாகிஸ்தான் அவுஸ்திரேலிய அணிக்கு இடையிலான ஒருநாள் போட்டித் தொடரை அவுஸ்திரேலியா இலகுவாக வெற்றிகொண்டது. முதல் இரண்டு போட்டிகளில் தலைமை தாங்கிய மிஸ்பா உல்ஹக், தனது விளையாட்டுத் திறன் அளவில் திருப்தி இல்லாமையால், தானாகவே அந்த ஆட்டத்தில் இருந்து விலகிக்கொண்டார். மேலும் திடீரென்று விலகிக்கொண்டதால் பல்வேறு அநாவசியக் கருத்துக்களுக்கு இடம் வந்துவிடுமோ என்ற அச்சத்தில் சில நிமிடங்கள் புன்னகையுடன் உதிரி வீரராகவும் களம் இறங்கிச் சென்றார்.

ஆனால் 3ஆவது ஆட்டத்தின்பின் கருத்துத் தெரிவித்த தற்காலிக அணித்தலைவர் சாஹிட் அப்ரிடி சிறிது வரம்புமீறிய வார்த்தைகளை அள்ளி வீசியிருக்கிறார். இது அடுத்த அணித்தலைவர் யார் என்ற ஊகங்களுக்கு விடயத்தை இட்டுச்சென்றுள்ளது என்றும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இது பற்றி விசாரிக்கும் என்றும், கிரிக்கெட் சபை கூறியுள்ளது. ஏனெனில், அப்ரிடியின் பேச்சு அடுத்து வரவுள்ள உலகக் கிண்ணப்போட்டிகளுக்குத் தானே தலைவர் என்றவாறு அமைந்துவிட்டது. அதேவேளை ஒருபுறம் விதிகளுக்கு மீறிய கருத்து வெளிப்படுத்துகை என்பதோடு, பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்குள் பேதங்களும், முரண்பாடுகளும் உள்ளன என்பதையும் வெளிக்காட்டிவிட்டது.

என்றாலும் அப்ரிடி தற்போது அணிக்குத் தான் எந்தளவிற்கு பங்களிப்புச் செய்துள்ளார் என்று ஆராய்ந்து பார்த்திருந்தால், அவசரப்பட்டு ஆசைகளை வெளிப்படுத்தி இருக்கமாட்டார்.





# அனைக்கும் அதிர்ஷ்டம்



**உலகக்** கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் எல்லா அணிகளுமே ஒருநாள் தொடர்களை முக்கியத்துவம் கொடுத்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சுற்றுப்போட்டிகள் வரிசையில் தற்போது தென்னாபிரிக்க அணி, நியூசிலாந்து அணியை ஒருநாள் போட்டித் தொடரென்றில் சந்திக்க இருக்கிறது. இங்கு என்ன ஆச்சரியம் என்றால், நியூசிலாந்து அணியும் உலகக் கிண்ணத்தை வெல்லும் சந்தர்ப்பம் உள்ள அணியாக தென்னாபிரிக்க ஒருநாள் அணித் தலைவர் ஏ.பி.டி வில்லியர்சால் வகைப்படுத்தப்பட்டுள்ளதுதான். நியூசிலாந்து இதுவரையில் பிரமாண்ட கிண்ணங்கள் எதனையும் வென்ற அணியல்ல. அதுவே அவர்களுக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுக்கும் என்று நம்பலாம். அவர்களின் திறமைகளையும் பட்டியலில் இட்டுக்கொண்டு போகிறார். அவரது நல்ல மனதின் வெளிப்பாட்டுக்கு இந்தக் கருத்துகளும் ஒரு சான்று. அதுபோக இம்முறை கிண்ணம் வெல்லப்போகும் அணிகளில் தென்னாபிரிக்காவின் பெயரும் உண்டென்பது எல்லோருக்கும் தெரியும். அந்தவகையில் அணியைக் கட்டியெழுப்பிக் கொண்டுவருகின்றார்கள்.

ஆனால் என்றுமே மிகப் பலமான அணியாகக் களம் இறங்கும் தென். ஆபிரிக்க அணி இதுவரை கிண்ணத்தை வெல்லவே இல்லையே. அது ஏனென்றால், அதிர்ஷ்டதேவதையின் கடைக்கண் பார்வை இவர்கள்மீது இல்லாமற் போனதுதான் என்றும் கூறலாம். ஒரு உலகக் கிண்ணப்போட்டியில் இறுதிப் போட்டிக்குச் செல்லும் என்று எதிர்பார்க்கப்பட்டவேளையில், இடையில் ஒரு ஆட்டத்தில் 22 ஓட்டங்கள் 1 பந்துவீச்சில் என்ற டக் வேர்த் லூயிஸ் கணித சூத்திரத்தால் கண்ணீருடன் வெளியேறினார்கள்.

இன்னொரு சந்தர்ப்பத்தில் இறுதிப் போட்டிக்குச் செல்ல அவுஸ்திரேலியாவை வென்றேவிட்டார்கள் என்ற நிலையில் கடைசிப் பந்தில் குளூஸ்னர் ஓட, அலன்டொனல்ட் மரம்போல நிற்க, அவுஸ்திரேலியா இவர்களை அதிர்ஷ்டத்தால் வெளியேற்றி இறுதியில் கிண்ணத்தையும் வென்றது.

எனவே இம்முறை தென்னாபிரிக்கா கிண்ணம் வெல்ல எல்லா வாய்ப்பும் உள்ளநிலையில் அதிர்ஷ்டமும் கைகொடுக்கும் என்று எதிர்பார்ப்போம்.



# நிறையவே வேண்டும்

**பாகிஸ்தான்** அணி வீரர்கள் மிஸ்பா உல்ஹக், அசார் அலி மற்றும் ஒரு சிலரின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் வருகின்றன. நிதிசார்ந்த பெரிய ஊழல்கள் என்று கற்பனை செய்யவேண்டாம். வருமானத்திற்கு உரிய வரிப்பணத்தைக் கட்டவில்லை என்பதுதான் குற்றச்சாட்டு.

அதாவது மிஸ்பா அவர்களது பணப் பெறுமதியில் 39 இலட்சம் ரூபாவும், அசார் அலி 15 இலட்சம் ரூபாவும் வரிசெலுத்தத் தவறிவிட்டார்களாம். ஆனால் இவர்கள் தரப்பில் இந்தத் தொகை தமது கணக்குப்படி வித்தியாசப்படுவதே தாங்கள் இதனை மறுக்கக் காரணமென்றும் வரிப்பணம் கட்டுதல் தொடர்பில் மறுப்பேதும் தெரிவிக்கவில்லை என்றும் கூறியுள்ளார்கள். ஆனால் மறுதரப்பு (FBR) வருமான வரி நிறுவகம் கருத்துக் கூறும்போது, வரிக்கட்டாமை என்பதுடன் இவர்கள் வரி ஏய்ப்பும் செய்துள்ளார்கள் என்று கூறியுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிதானத்துடன் நாங்கள் இதனை சட்டவல்லுனர்கள் கொண்டு எதிர்கொள்வோம் என்று கூறியுள்ளார்கள். இதேவேளை மிஸ்பா உட்பட சிலர் நிதி அமைச்சர்கள் சந்தித்துப் பேசியுள்ளதாகவும் அவரிடம் இவர்கள் தங்கள் துன்ப, துயரங்களை எடுத்துக்கூறியதாகவும் செய்திகள் வருகின்றன. எல்லாம் சுமூகமாகவே நடைபெறும் என்று இந்த விடயத்தில் ஊகிப்பதில் தவறில்லை. இருந்தாலும் பணம் என்று வரும்போது யாருக்கும், யாரும் விட்டுக்கொடுக்க விரும்புவதில்லை போலவும் தெரிகிறது.






# பெண்களுக்கு மட்டும்....

பெண்களைப் போலவே ஆண்களும் இருந்திருந்தால் உலகில் எந்த ஆண் - பெண் பிரச்சினைகளுமே வந்திருக்காதே! என்று நீங்கள் யோசிப்பது நியாயமானதுதான்.

பெண்கள் பாதுகாப்பாய் சௌக்கியமாய் இல்லை என்றால் ஒட்டுமொத்த உயிரினமே அழிந்துபோய்விடுமே என்றுதான், பெண்களைப் பாதுகாக்கவென்றே இயற்கை ஆண்களைப் படைத்தது.

ஆனால் மனிதர்கள் தோன்றிய காலத்தில், இந்த ஏற்பாடுகள் இருக்கவில்லை. பிற மிருகம் தாக்கிவிடும் அபாயம் எந்நேரமும் இருந்த அந்த ஆரண்யகாண்ட வாழ்க்கை முறையில் ஒரு பெண்ணைப் பாதுகாக்கவேண்டும் என்றால் சும்மா சாதாரண நபரால் அது முடியாதே. அதுவும் ஆயுதங்கள் எதுவும் கண்டுபிடிக்காத காலத்தில் பெண்ணைக் காப்பாற்றவேண்டும் என்றால், அதிகபட்ச வீரமும், அதைவிட அதிகமான தேகபலமும் கொண்டவனால் மட்டும்தான் முடியும். மனிதர்களிலும் ஆணின் கடமை, பெண்ணைப் பாதுகாப்பதுதான். இந்தக் காலத்தில் பெண்களைப் பாதுகாப்பது அவ்வளவொன்றும் கஷ்டமில்லை.

சமுதாயம், சட்டம், பொலிஸ் என்று பல கட்டமைப்புகள் இருப்பதால் பெண்களுக்கு நிறையவே பாதுகாப்பு உள்ளது. ஆனால் கடுமையான சட்டதிட்டங்கள் இல்லாத காரணத்தால் பெண்களை பாதுகாக்கவேண்டிய ஆண்களாலேயே வன்முறை தாக்குதல் ஏற்படுகின்றன. ஆண்களிடமிருந்து தங்களை காத்துகொள்ள பெண்கள் எப்போதும் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும்.

ஆண்களிடம் பேசும்போதும், பழகும்போதும் நிதானத்துடனும், வரைமுறையை மீறாமலும் பழகவேண்டும். ஏனெனில் பெண்கள் பழகும் முறையை வைத்தே ஆண்கள், பெண்களிடம் தவறாக நடக்க முயற்சிப்பார்கள். இன்றைய காலகட்டத்தில் கல்வி, வேலை என்று அனைத்து துறைகளிலும் ஆண்களுடன் பணியாற்றவேண்டிய கட்டத்தில் பெண்கள் உள்ளனர்.

எனவே பெண்கள் நெருங்கிய தோழனாக நினைத்து குடும்ப விஷயங்களை அவர்களிடம் பகிர்ந்து கொள்ளக் கூடாது. ஆண்கள் அனைவரும் மோசமானவர்கள் இல்லை. ஆனால் ஆண்கள் அனைவரும் நல்லவருமில்லை என்பதை பெண்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

ஒரு ஆண் தேவையில்லாமல் பெண்களிடம் அதிகமாகப் பேசுவது, கேட்காமல் அனைத்து உதவிகளையும் செய்வது என்றால் அது தப்பான எண்ணத்தில்தான் என்பதை பெண்கள் புரிந்துகொள்ளவேண்டும். அதிலும் ஆண்கள் தொட்டுப்பேசுவதை அனுமதிக்காதீர்கள். அப்படி நடக்கும்போது உங்கள் எதிர்ப்பை உடனே தெரிவியுங்கள்.

ஏதோ ஒன்றை எதிர்பார்த்துத்தான் தேவையில்லாமல் உதவிகளை செய்கிறான் என்பதை புரிந்து ஜாக்கிரதையாக பெண்கள் நடந்து கொள்ளவேண்டும்.

# தலைசுற்றல் உள்ளவர்களுக்கு ஏற்ற முத்திரை



பொதுவாக நம் உடலில் உள்ள பிரச்சினைகள் அனைத்திற்குமே மருத்துவரை நாடி செல்வதைவிட சில எளிய பயிற்சிகள் மேற்கொள்வதின்மூலம் அவற்றை சுலபமாக சரிசெய்யலாம். இக்காலத்தில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள்வரை அனைவருக்கும் தலைசுற்றல் பிரச்சினை ஏற்படுகிறது.

உடலில் ஏதேனும் குறைபாடு இருந்தால் முதலில் தலைசுற்றலில்தான் ஆரம்பிக்கும். இரத்தச்சோகை உள்ளவர்களுக்கும் இந்த பிரச்சினை ஏற்படும். இக்காலகட்டத்தில் 80 சதவீத பெண்கள் இரத்தச்சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் தலைசுற்றல், மனச்சோர்வு ஆகிய பிரச்சினைகள் ஏற்படுகிறது. சூன்ய முத்ரா பயிற்சி செய்வதன்மூலம் தலைசுற்றல் பிரச்சினையை சரிசெய்யலாம்.

**செய்யும் முறை:**

நடுவிரலை மடக்கி கட்டை விரலை அதன்மீது பதியவையுங்கள். மற்ற மூன்று விரல்களையும் நேராக நிமிர்த்திவையுங்கள். இதுவே சூன்ய முத்திரை ஆகும். இந்த பயிற்சி தினமும் 45 நிமிடம் செய்துவந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

இந்த முத்திரை பயிற்சியை செய்வதன்மூலம் காதுவலி, காதில் சீழ் வடிதல், சரியான முறையில் காது கேளாமை போன்ற குறைபாடுகளை இந்த முத்ரா சரி செய்யும். அதுமட்டுமில்லாமல் பயணநேரங்களில் வரும் களைப்பு, தலைசுற்றல் ஆகிய பிரச்சினைகளுக்கு தீர்வாக இந்த முத்ரா அமைகிறது.

# குழந்தை பிரசவித்த பெண்களுக்கு...

குழந்தை பிரசவித்த பச்சை உடம்பு பெண்களுக்கு கணவருடன் தாம்பத்தியம் தொடர்பாக நிறைய சந்தேகங்கள் இருக்கும்.

- குழந்தை பிறந்து ஒரே வாரத்துக்குள் கணவர் உங்களை அணுகுகிறாரா? தாராளமாக மறுத்துவிடுங்கள்.
- குழந்தை பிறந்து 4 வாரங்கள் ஆகிவிட்டதா? கணவருடன் இணையலாம்.
- அறுவை சிகிச்சை வாயிலாக குழந்தை பிறந்திருந்தால், இன்னும் பொறுத்திருப்பது அவசியம். டாக்டர்களின் அறிவுரைக்கேற்ப கவனமாக மெதுவாக இன்பத்தில் ஈடுபடலாம்.
- குழந்தை பிறந்த பிறகு தாம்பத்தியத்தில் உடனே பெரிதாக ஈடுபாடு இராது. ஆனாலும் மனோரீதியாக அதுக்கு தயாராகுங்கள். இது கணவரை திருப்திக்கு உள்ளாக்கும்.
- தாயானதும் உடல்நலம் - அழகில் கவனம் குறைய அனுமதிக்காதீர்கள். தவறினால் கணவரிடம் ஏமாற்றம், அதிருப்தியை உருவாக்கக்கூடும்.
- கணவருடன் போதிய நேரத்தை செலவிடுங்கள். இதமும் மனஇணக்கமுமே இருவருக்கும் இடையே தாம்பத்தியத்தை ஊக்கப்படுத்தும்.





# முகத்தில் பூனை முடியா?

சில பெண்களுக்கு முகத்தில் மெலிதாக பூனை முடி அரும்பி வளர ஆரம்பிக்கும். ஹோர்மோன் சுரப்பு கோளாறால் வரும் பிரச்சினை இது. இதற்கு சமையல் அறையிலேயே கண்கண்ட மருந்துகள் உள்ளன.

மூன்று தேக்கரண்டி சீனி, தலா ஒரு தேக்கரண்டி எலுமிச்சை சாறு, தண்ணீரை கலந்து முகத்தில் வட்டவட்டமாக தடவி 15 நிமிடம் ஊறவிட்டு கழுவுங்கள்.

இல்லையா- இரண்டு தேக்கரண்டி கடலை மா, ஒரு தேக்கரண்டி தயிர்-எலுமிச்சை சாறு, சிறிதளவு மஞ்சள் பொடி கலந்து கெட்டியாக கரைத்து முகத்தில் அப்பி, நன்றாக காய்ந்த பிறகு கழுவி வாருங்கள். பெண்களின் முகத்தில் பூனை முடிகள் நிரந்தரமாக அகன்றுவிடும்.

# கிச்சன் டிப்ஸ்

* பயத்தம் பருப்பு சுண்டல் செய்யும்போது பருப்பை வாசனை வரும்படி வறுத்துவிட்டுச் செய்தால் சுண்டல் உதிரி உதிரியாக வரும்.

* பன்னீரை வெட்டும் கத்தியை சிறிதுநேரம் கொதிக்கும் நீரில்போட்டு வைத்திருந்து பிறகு பனீரை வெட்டினால் உடையாமல் உதிராமல் துண்டங்களாக வெட்டமுடியும்.

* பருப்புடன் சிறிது எண்ணெயும், சிறிது பெருங்காயத் தூளையும் சேர்த்து வேகவிட்டால் சீக்கிரம் வெந்துவிடும்.

* கொழுக்கட்டை சொப்பு வெடிக்காமல் விரியாமல் இருக்க அரிசியுடன் உளுத்தம் பருப்பு சேர்த்து அரைக்கவேண்டும்.

* தேயிலைத்தூள் வாங்கி போத்தலில் கொட்டி வைக்கும்போதே அதில் இரண்டு ஏலக்காயையும் பொடித்துப்போட்டு கலக்கிவிட்டால் ஏலக்காய் தேநீர் கமகமக்கும்.

* இட்லிப்பொடி செய்யும்பொழுது சிறிது கறிவேப்பிலையையும் போட்டு மிக்ஸியில் பொடித்தால் பொடி ருசியாக இருக்கும்.

* வறுத்த புழுங்கல் அரிசியை மாவாக்கி வைத்துக்கொண்டால் கூட்டுக்கறிகளை இறக்கும்போது லேசாகத் தூவி இறக்கினால் மணமாக இருக்கும்.

* இட்லி மாவில் ஒரு வெற்றிலையைப் போட்டு வைத்தால் மா பொங்கி வழியாது, அதிகம் புளிக்காது.

**250/= பரிசு** **வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

**பரிசுப் போட்டி இல :-442**

**கேள்வி: லெபனான் நாட்டில் பெண்கள் வாக்குப் போடுவதற்கு தேவையான தகுதி?**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 03. 11. 2014

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 442
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

பரிசுப் போட்டி இல :- 440 இற்கான விடை :-
அபான வாயுவின் தடை
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :-
சு. சோபியா,
தொட்டிலடி மத்தி, சங்கானை.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

442

பெயர் : ....................
முகவரி : ....................
....................
தே.அ. அட்டை இல : ....................
விடை : ....................
....................
கையொப்பம் : ....................

# மட்டக்களப்பில் காணி விவகாரமும் திருத்தங்களும்

**மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வளமான அரச காணிகளை மேற்குறித்த இவ்வர்த்தமானிப் பிரகடனம்மூலம் வனப் பிரதேசமாக பிரகடனப்படுத்திய தன்மூலம் இம்மாவட்டத்தின் சில பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள மேட்டுநிலப் பயிர்ச் செய்கை, வேளாண் மைச் செய்கை, தற்காலிக நிரந்தரக் குடியிருப்புக்கள், மயானங்கள், கிணறுகள் கால்நடைகளுக்கான மேய்ச் சல்தரை போன்றவற்றை உள்ளடக்கிய பகுதிகளை வனப் பிரதேசமாக எல்லை யிட்டுள்ளதால் பல வருட காலமாக இப்பகுதிகளில் உள்ள அதிகளவான மக்கள் பெரிதும் பாதிப்படைந்து உள்ளனர்.**

கிழக்கு மாகாணத்தின் மட்டக் களப்பு மாவட்டத்தில் வளமான காணி களை வனப் பிரதேசமாகப் பிரகடனப் படுத்தியுள்ளதாகவும், அந்த வர்த்தமானி பிரகடனத்தை மீளாய்வு செய்தல் வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற்று வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வளமான அரசகாணிகளை 2013.7.26ஆம் திகதி 1820/28 இலக்கம், 2013.7.8ஆம் திகதி 1818/4, இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி பிரகடனங்கள் மூலம் 44476 ஹெக்டயர் (109855ஏக்கர்) நிலப்பரப்பு காணிகளை மேற்படி வர்த்தமானிப் பிரகடனத்தின் மூலம் வனப்பிரதேசமாகப் பிரகடனப்படுத்தி உள்ளனர்.

சுற்றாடல் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் கௌரவ சுசில் பிறேம ஜெயந்த அவர்களால் மொத்தமாகக் கோரளைப்பற்று வடக்கு (வாகரை), கோரளைபற்று தெற்கு (கிரான்), ஏறாவூர்பற்று (செங்கலடி), மண் முனைமேற்கு (வவுணதீவு). பிரதேச செயலகப்பிரிவுகளில் பொதுமக்களின் விவசாயச் செய்கை காணிகளையும், சில குடியிருப்பு பகுதிகளையும், கால்நடைகளுக்குரிய மேய்ச்சல்தரை காணிகளையும் உள்ளடக்கி இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது. இதனால் அதிகளவான பொதுமக்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்பதே முக்கியமான குற்றச்சாட்டாகும்.

2013.7.26 திகதியிடப்பட்ட 1820/28 இலக்கமுடைய வர்த்தமானிப் பிரகடனத்தில் மட்டக்களப்பு மாவட்டம் மண்முனைமேற்கு வவுணதீவு, ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவில் உள்ளடக்கப்பட்ட 6,914 ஹெக்டயர் பரப்பளவைக்கொண்ட காணிகள் முறையே, வடக்கே உன்னிச்சைக் குளத்தின் உச்ச நீர்மட்ட எல்லை நேர்கோடும், இந்த எல்லையில் இருந்து தெற்கு நோக்கிய நேர்கோடுகளும் அமைந்துள்ள பகுதிகள், கிழக்கே மேலே கூறப்பட்ட இறுதிமுனை வரையிலான நேர்கோடும், உன்னிச்சை குளக்கட்டின் ஊடாக குளத்தின் தெற்கு எல்லைவரையும் உள்ள நேர்கோட்டுப் பகுதியில் அமைந்துள்ள காணிகளும்.

தெற்கே மேலே கூறப்பட்ட இறுதி முனை தொடக்கம் நுவரகல ஒதுக்கத்தின் வடக்கு எல்லை வரையிலான நேர்கோடு களை உள்ளடக்கிய பகுதிகளும் அதிலிருந்து இந்த ஒதுக்கத்தின் எல்லை யுடன் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட பகுதிகள் வரையும்.

மேற்கே நுவரகல ஒதுக்கத்தின் வடக்கு எல்லை அமைந்துள்ள முனையில் இருந்து ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட பகுதிவரையிலான நேர்கோடுகளும், அதிலிருந்து உன்னிச்சைக் குளத்தின் அருகிலிருந்து தும்பாலன் சோலைவரை செல்லுகின்ற பாதை ஊடாகக் குறிப்பிட்ட நேர்கோடுகளை உள்ளடக்கிய பகுதிகளும் அடங்குகின்றன.

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை மேற்கு, ஏறாவூர்பற்று பிரதேசத்தில் 420 ஹெக்டயர் பரப்பளவைக் கொண்ட காணிகள் வடக்கே ஆரம்ப ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட பகுதியும், கிழக்கே மேற் குறிப்பிட்ட இறுதிமுனை வரையிலான நேர்கோட்டுப் பகுதிகளும். தெற்கே இறுதிமுனைவரையிலான நேர்கோட்டுப் பகுதிகளும், மேற்கே இறுதிமுனை தொடக்கம் ஆரம்பமுனை வரையிலான பிரதேசமும் உள்ளடங்குகின்றன.

மட்டக்களப்பு மாவட்டம் கோறளைப் பற்று வடக்குப் பிரதேசத்தில் உள்ள 1,736 ஹெக்டயர் பிரதேசத்தை உள்ளடக்கிய காணிகள். வடக்கே ஆரம்பமுனை வரை யிலான நேர்கோடும், இந்த முனையிலிருந்து ஆனைசுட்டான் குளத்தின் உச்ச நீர்மட்ட எல்லை ஊடாக இடதுகரைமீது அமைந்துள்ள நேர்கோட்டுப் பகுதிகளும், கிழக்கே மேற் குறித்த இறுதிமுனையில் இருந்து காரமுனை தொடக்கம் வாகனேரி வரை யிலான பாதை ஊடாக அமைந்துள்ள பாதை, மற்றும் மேட்டுக்குளத்தின் தென்கரைவரையும் குளத்தின் உச்ச நீர்மட்ட எல்லை ஊடாக குளக்கரை வரையிலான பகுதியும், தெற்கே மேற்குறிப்பிட்ட இறுதிமுனை வரையிலான நேர்கோட்டில் அமைந்துள்ள பகுதிகளும், மேற்கே மேற்குறித்த இறுதிமுனையான பாதைக்கு அருகாமையில் அமைந்துள்ள முனைவரை, அதிலிருந்து கோறளை ஒதுக்கத்தின் மேற்கு எல்லை ஊடாக ஆரம்ப முனைவரையிலான பகுதிகளில் அமைந்துள்ள காணிகளும் வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டம் கோறளைப் பற்று வடக்குப் பிரதேசத்தில் 25,256 ஹெக்டயர் காணிகளை உள்ளடக்கிய பிரதேசம். வடக்கே வெலிக்கந்தையில் ஆரம்பித்து மியான்குளம்வரை செல்லுகின்ற பாதை, மாதுரு ஓயாவை ஊடறுக்கின்ற பாதை, இந்தப் பாதை ஊடாக தெற்கு நோக்கியுள்ள இந்தப் பாதைமீது அமைந்துள்ள ஒருங்கிணைப்பு முனைவரையும், அதிலிருந்து பளை ஒதுக்கத்தின் மேற்கு எல்லை ஊடாக மீண்டும் இந்த எல்லை யின் கலச்சாய்குளத்தின் இடது புறத்திலிருந்து உச்ச நீர்மட்ட எல்லை, பளை ஒதுக்கத்தின் மேற்கு எல்லை வரை, வடமுனைக்குளத்தின் இடது பக்கத்தில் இருந்து உச்ச நீர்மட்ட எல்லை, ஹெரகோசலத்தின் தெற்கு, கிழக்கு வட மேல் உச்ச நீர்மட்ட எல்லை வரையான பகுதிகளும்.

கிழக்கே மேற்குறிப்பிட்ட பகுதியில் இருந்து ஒலிமடு ஆறு ஊடாக தென்கிழக்கு கங்கைமீது அமைந்துள்ள பகுதி, அதிலிருந்து அறத்திக்கடு குளம்மீது அமைந்துள்ள பகுதியும், உச்ச நீர்மட்ட எல்லையும், இம்முனையில் இருந்து மிரணகட்டாவ குளத்தின் உச்ச நீர்மட்ட எல்லையூடாக கிழக்கு நோக்கிய பகுதியும், மத்தி பனிச்சங்குளத்தின் உச்ச நீர்மட்ட எல்லை ஊடான பகுதியும். தெற்கே கிழக்குநோக்கி நுவரகல ஒதுக்கத்தின் வடக்கு எல்லையில் இருந்து மீண்டும் மாதுரு ஓயா எல்லை வரையான பகுதி களும், தெற்கே மாதுரு ஓயா, மாதுரு ஓயா எல்லைவரையான பகுதிகளும் வரும்.

அதேநேரத்தில், மட்டக்களப்பு மாவட்டம் கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் 9303 ஹெக்டயர் காணிகளை உள்ளடக்கிய பிரதேசம், வடக்கே மட்டக்களப்பு பொலநறுவை எல்லையில் திரிகோணமடு வனஜீவராசிகள் ஒதுக்கம், கிழக்கே அதன் இறுதிமுனை வரையான பகுதி, தெற்கே மேற்குறித்ததிலிருந்து மதுரங்கேணிக்குளப் பக்கமாக உள்ள பாதை, மதுரங்கேணி உச்ச நீர்மட்டம் கோறளை ஒதுக்கத்தின் வடக்கு எல்லை வரையான பகுதி. மேற்கே மேற்குறித்த இறுதிமுனை தொடக்கம் மட்டக்களப்பு பொலநறுவை மாவட்டங்களின் எல்லை ஊடான வனஜீவராசிகள் ஒதுக்கம் வரையிலான அனைத்தையும் உள்ளடக்கிய பகுதி என்பனவும் வருகின்றன.

ஆனால், 2013.7.8ம் திகதி வர்த்தமானி 1818/4 -இலக்க வர்த்தமானிப் பிரகடனம் செய்யப்பட்ட பகுதி - மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 7738 ஹெக்டயர் விஸ்தீரணத்தைக் கொண்ட அரசாங்க காணிகளை உள்ளடக்கிய பிரதேசம்.

வடக்கே வெருகல் ஆறு கங்கையை ஊடறுக்கின்ற முனையிலிருந்து வெருகல் ஆறு ஊடாக வெருகல் ஆறு அமைந்துள்ள பகுதி வரையிலான காணிகள், கிழக்கே வெருகல் ஆறு இறுதிமுனையிலிருந்து ஒருங்கிணைப்பு இணைகின்ற நேர்கோடுகள் மற்றும் பனிச்சங்கேணி களப்பின் மேற்கு எல்லை ஊடாக ஒருங்கிணைப்பு இணைகின்ற நேர்கோடுகள்வரையிலான காணிகள், தெற்கே மேற்குறிப்பிட்ட பிரதேசத்தில் இருந்து பனிச்சங்கேணிக் களப்பின் மேற்கு எல்லை ஊடாக ஒருங்கிணைப்பு இருக்கின்ற நேர்கோடுகள் வரையிலான காணிகள் ஆகும்.

மேற்கு மேலே குறிப்பிட்ட இறுதி முனையிலிருந்து இணைகின்ற நேர் கோடுகள் மற்றும் முனையின் ஒருங்கிணைப்பிலிருந்து பொலநறுவை, மட்டக்களப்பு மாவட்ட எல்லை வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களின் எல்லை வெருகல் ஆறு ஊடறுக்கின்ற வரையிலான பகுதி உள்ளடங்கலாகப் 7738 ஹெக்டயர் காணிகள் வர்த்தமானி பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வளமான அரச காணிகளை மேற் குறித்த இவ்வர்த்தமானிப் பிரகடனம் மூலம் வனப் பிரதேசமாக பிரகடனப் படுத்தியதன்மூலம் இம்மாவட்டத்தின் சில பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள மேட்டுநிலப் பயிர்ச்செய்கை, வேளாண்மைச் செய்கை, தற்காலிக நிரந்தரக் குடியிருப்புக்கள், மயானங்கள், கிணறுகள் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை போன்றவற்றை உள்ளடக்கிய பகுதிகளை வனப் பிரதேசமாக எல்லை யிட்டுள்ளதால் பல வருடகாலமாக இப்பகுதிகளிலுள்ள அதிகளவான மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இவைமட்டுமன்றி நீண்ட காலமாக கால்நடைகளுக்குரிய மேய்ச்சல்தரையாக பாவித்துவந்த பகுதிகளையும் வனப்பிரதேசமாக பிரகடனப்படுத்தி உள்ளதால் பல சிரமங்களை கால்நடைப் பண்ணையாளர்கள் எதிர்நோக்கி உள்ளனர்.

(21 ஆம் பக்கம் பார்க்க)

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## மோடியும் ஊடகங்களும்...

இனியும் தாங்காது என்ற நிலையில் தான் ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் இறுதிக் கட்டத்தில் அத்தொழிற் பேட்டையில் புதிதாகத் தொழிற்சாலைகளை அமைப்பதைத் தடைசெய்து உத்தரவு பிறப்பித்தது, சுற்றுப்புறச் சூழல் அமைச்சகம். மோடி பிரதமராகப் பதவியேற்றவுடனேயே முதல் காரியமாக இத்தடை உத்தரவைத் திரும்பப் பெறச்செய்தார்.

சுற்றுப்புறச் சூழல் என்பதைக் காட்டி எந்தவொரு பெருந்தொழில் திட்டங்களுக்கும் முட்டுக்கட்டை விழுந்துவிடக்கூடாது என்பதற்காகவே காடுகளை மதிப்பிடு வதற்கான அளவுகோல்களை மாற்றிய மைத்திருக்கிறது, மோடி அரசு. வன விலங்கு சரணாலயங்களிலிருந்து பத்து கிலோ மீற்றருக்கு அப்பால்தான் தொழிற்சாலைகள் அமையவேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை நீர்த்துப் போகச் செய்யும்வண்ணம், அந்த வரம்பை ஐந்து கிலோமீற்றர் எனச் சட்டப்படியே மாற்றி விட்டது, மோடி அரசு. இப்படிச் சுற்றுப்புறச் சூழலைப் பலியிட்டாவது பொருளாதார வளர்ச்சியைச் சாதிக்கவேண்டும் என்ற வெறிகொண்டு அலையும் மோடி, தனது சுதந்திர தின ,உரையில் சுற்றுப்புறச் சூழலில் எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தாமல் தொழில்களை நடத்துமாறு அறைகூவல் விடுத்திருப்பது கடைந்தெடுக்கப்பட்ட பித்தலாட்டத்தனம்.

மோடி குஜராத் முதல்வராக இருந்த பொழுது, தனக்கு நெருக்கமாக இருந்த ஒரு பெண்ணின் நடவடிக்கைகளை உளவுத் துறையை ஏவிக் கண்காணிக்கும் கீழ்த் தரமான வேலையைச் செய்துவந்தார். இதற்கு குஜராத்தின் உள்துறை அமைச்சகமே கேடாகப் பயன்படுத்தப்பட்டது. இந்த உளவு வேலை அம்பலமாகி நாறியவுடன், அப்பெண்ணின் தந்தைதான் தனது மகளைக் கண்காணிக்கும்படி கேட்டுக்கொண்டதாக மோசடியான ஆதாரங்கள் உருவாக்கப்பட்டன. இப்படிபட்ட கடந்த காலத்தைக் கொண்டிருக்கும் மோடி, பெண்கள்மீதான வன்முறைகளைத் தடுக்கப் பெற்றோர்கள் தங்களது ஆண் மகன்களையும் கண்காணிக்க வேண்டும் எனக் கூசாமல் அறிவுரை சொல்கிறார்.

உ.பி.யில் நடந்த சட்டமன்ற இடைத் தேர்தல்களில் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக, லவ்-ஜிகாத் என்ற இந்து மதவெறி பூதத்தை மீண்டும் ஜாடிக்குள் இருந்து வெளியே எடுத்துவிட்டது, ஆர்.எஸ்.எஸ். கும்பல். பொய்யும் புனை சுருட்டும் நிறைந்த இந்த மதவெறி பிரசாரத்திற்கு பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினரான ஆதித்யநாத் தலைமை தாங்கினார். இதையெல்லாம் கண்டும் காணாது நடந்துகொண்ட மோடி, சாதி-மத மோதல்களுக்குப் பத்தாண்டு காலம் தடை போடவேண்டும் என யோக்கிய சிகாமணிபோல ஊருக்குப் உபதேசிக்கிறார்.

கார்ப்பரேட் முதலாளித்துவ வர்க்கத்தின் விருப்பத்திற்கிணங்க புதிய நிலம் கையகப் படுத்தும் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளும் மோடி, விவசாயிகளின் துயரங்கள் பற்றி முதலைக் கண்ணீர் வடிக்கிறார். இப்படிப்பட்ட மோசடிகளையும் உள்முரண்பாடுகளையும் கொண்டதுதான் மோடியின் சுதந்திர தின உரை. அவரது ஆழ்மனது சூதும் கபடத்தனமும் நிறைந்தது என்பதற்கு இந்த சுதந்திர தின உரை இன்னொரு சான்று.

விலைவாசி உயர்வு, ஊழல், கறுப்புப் பணம், தொழில் நசிவு, வேலையில்லாத் திண்டாட்டம் என்பதையெல்லாம் காட்டித்தான் காங்கிரசு ஆட்சியை மக்கள்விரோத ஆட்சி யாக முத்திரை குத்தியது, பா.ஜ.க. இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண மோடி யிடம் என்ன பொருளாதாரத் திட்டம், கொள்கை இருக்கிறது? எந்த மேடையிலாவது மாற்றுக்களைப் பற்றி பேசியிருக்கிறாரா.. அவர்? இப்பிரச்சினைகளுக்கெல்லாம் மூல காரணமான தனியார்மயம் - தாராளமயத்தை இன்னும் தீவிரமாகவும், தடையின்றியும் நடைமுறைப்படுத்துவதன்மூலம் நல்ல நாட்களை உருவாக்கிவிடலாம் என நம்பச் சொல்கிறார்.

கொள்கையில் மட்டுமல்ல, நடைமுறை யிலும் மோடி அரசை ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் மறுஅவதாரம் என்றுதான் சொல்லமுடியும். ரயில் கட்டண உயர்வு தொடங்கி காப்பீடு துறையில் அந்நிய முதலீட்டுக்கான வரம்பை அதிகரித்தது வரையில், சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீட்டை அனுமதிப்பது தொடங்கி ஆதார் அட்டை திட்டம் வரையில் இலங்கை மற்றும் தமிழக மீனவர் பிரச்சினை தொடங்கி தமிழகத்திற்கு வழங்கப்படும் மண்ணெண்ணெயைக் குறைத்ததுவரையில் முந்தைய காங்கிரசு கூட்டணி அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும்தான் மோடி அரசு நடைமுறைப்படுத்திவருகிறது. அப்படியென்றால் முந்தைய காங்கிரசு கேடிகளுக்கும் மோடிக்கும் வேறுபாடே இல்லை எனக் கூறிவிட முடியுமா என்ற கேள்வி எழலாம்.

பன்னாட்டு ஏகபோக முதலாளி களுக்கும், இந்தியத் தரகு முதலாளி களுக்கும் விரைந்து சேவை செய்வது என்ற நோக்கில் அதிகாரம் முழுவதையும் பிரதமர் அலுவலகத்தில் குவித்துக் கொண்டிருப்பது எட்டு சதவீத பொருளாதார வளர்ச்சியை நோக்கிநகருவதற்காக அதிகாரமிக்க அமைச்சர்கள் குழுக்களை யும் திட்ட கமிசனையும் அடுத்தடுத்து கலைத்தது, ஜப்பான் முதலீடுகளை விரைந்து அனுமதிக்க தனிச்சாளரம் திறப்பது, மூலதனத்தின் கட்டுப்பாடற்ற கொள்ளைக்காகச் சுற்றுப்புறச் சூழல் சட்டங்களையும் தொழிலாளர் நலச் சட்டங்களையும் திருத்த முனைந்திருப்பது என்றவாறு வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன.

ஆனால், இந்த வேறுபாடுகள் விலை வாசி உயர்வாலும் விவசாய நசிவாலும் வேலையில்லாத் திண்டாட்டத்தாலும் புழுங்கிக்கொண்டிருக்கும் இந்திய மக்களின் வாழ்க்கையில் எந்தவிதமான நல்ல காலத்தையும் கொண்டு வந்துவிடாது.

# பொதுபல சேனாவுக்கு அதிகாரம் அனுசரணையா?

தொடர் - 27



### மதவாதக் குழுக்களின் நடவடிக்கைகள் இலங்கையைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது - தயான் ஜயதிலக்க

புலிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டமையானது, சர்வதேசத்தில் இலங்கைக்கு எதிரான பனிப்போர் முன்னோக்கிக் கொண்டு செல்லப்படுவதை காட்டுகிறது என கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை கொலை செய்தமையால் அவர் மீதிருந்த கௌரவம்மிக்க அன்பு, அவரது மனைவி அந்தந்த நாடுகளுக்கு சென்று பேசியமை மற்றும் அப்போதைய வெளிவிவகார செயலாளராக இருந்தவரின் திறமை ஆகிய காரணங்களினாலேயே அப்போது புலிகளுக்கு எதிராக தடை விதிக்கப்பட்டது.

மேலும் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட போதும் இந்தத் தடை காணப்பட்டது. எனினும் யுத்தம் நிறைவடைந்து ஐந்து வருடங்களின் பின்னர் இந்தத் தடை நீக்கப்பட்டமைக்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன.

குறிப்பாக, அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற ஆனால் அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்றவர்கள் என நம்பப்படும் மதவாதக்குழுக்களின் நடவடிக்கைகள் மற்றும் அளுத்கம, ரதுபஸ்வவ போன்ற சம்பவங்களால் இலங்கை பற்றிய பிரதிபலிப்புக்கள் சிதைக்கப்பட்டமையே காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

### முஸ்லிம் அடிப்படைவாதம் தலைதூக்குகின்றது - பொதுபலசேனா

இலங்கைக்கு எதிராக அடிப்படை வாத முஸ்லிம் பயங்கரவாதம் தலைதூக்கியுள்ள நிலையில் புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியமையானது நாட்டுக்குள் பயங்கரமான சூழ்நிலை உருவாகும். எனவே, அரசாங்கம் படையினரையும் உளவுப் பிரிவினரையும் உஷார்படுத்த வேண்டுமென பொதுபலசேனா வலியுறுத்தியுள்ளது.

கொழும்பு கிருலப்பனையிலுள்ள பொதுபலசேனா அலுவலகத்தில் 2014.10.18 அன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போது கலகொடத்தே ஞானசாரர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரர், இந்நிலை ஏற்பட ராயப்பு ஜோசப்பே காரணமாகும். எனவே, அவரை கைது செய்யவேண்டுமென்றும் கூறினார்.

அல்கொய்தா முஸ்லிம் பயங்கர வாதிகளுடன் தொடர்புடைய இலங்கையர் மலேசியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டுள்ளார்.

மறுபுறம் பாகிஸ்தான் ஊடாக முஸ்லிம் பயங்கரவாதிகள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ஊடுருவும் வாய்ப்புக்கள் உள்ளதாக இந்திய உளவுப் பிரிவினர் தகவல் வழங்கியுள்ளனர்.

அத்தோடு எமது நாட்டுக்கு எதிராக முஸ்லிம் அடிப்படைவாத பயங்கரவாதம் நாளுக்கு நாள் தலைதூக்கி வருகின்றது.

புலிகளுக்கும் முஸ்லிம் பயங்கரவாதிகளுக்கும் தொடர்பு உள்ளது. இவ்வாறானதொரு நிலையில் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் 8 வருடங்களுக்கு பின்னர் தடையை நீக்கியுள்ளது.


இது புலிகள் மீண்டும் எழுச்சிபெறவும் ஆயுதங்கள் நிதி சேகரிப்பதற்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும்.

ஆயுதரீதியாக புலிகள் அழிக்கப்பட்டாலும் அரசியல் ரீதியாக சர்வதேசரீதியாக புலம்பெயர் புலி ஆதரவாளர்களின் நடவடிக்கைகளை தோல்வியடையச் செய்ய அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

வெளிநாடுகளிலுள்ள எமது தூதுவர்களும் சிறப்புரிமைகளை அனுபவிக்கின்றனரே தவிர, இவ்வாறான செயற்பாடுகளை தடுக்க முனைவதில்லை. வெளிவிவகார அமைச்சு தனது கடமைகளை செய்வதில்லை.

இவையனைத்தும் புலிகளின் தடையை நீக்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்திற்கு சாதகமாக அமைந்தது.

எனவே அரசாங்கம் இனியும் அசமந்தப்



போக்கை கைவிட்டு வெளிநாட்டுத் தூதுவர்களை இயக்கவேண்டும்.

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

### வெளிவிவகார அமைச்சை செயற்பட வைக்கவேண்டும்

ஏனென்றால், நாடு மீண்டும் இன்று பயங்கரவாத அச்சுறுத்தலுக்கும் ஆபத்துக்கும் உள்ளாகியுள்ளது. அதனால் முப்படையினரையும் உளவுப் பிரிவினரையும் உஷார் நிலையில் வைக்கவேண்டும்.

இங்கு இராணுவம் தமிழர்களை கொலை செய்ததாக ராயப்பு ஜோசப் தலைமையில் சில ஆயர்கள் ஐ.நா.வுக்கும் வெளிநாடுகளுக்கும் கடிதம் எழுதினார்கள்.

புலிகளின் தடையை நீக்க துணை போனவர் ராயப்பு ஜோசப். ஆனால், அரசாங்கம் அவருக்கு பயந்து போயுள்ளது, அதுதான் ஏனென்று தெரியவில்லை.

சர்வதேசத்திற்கு எதிராக விரலை நீட்டுவதற்கு முன்பதாக உள்ளூரில் உள்ள விஷப்பாம்புகளை அடையாளம் காணவேண்டும்.

நாட்டுக்கு எதிராக செயற்படும் ராயப்பு ஜோசப்பை உடனடியாக கைது செய்ய வேண்டும்.

நாங்கள் கத்தோலிக்கர்களுக்கு எதிரானவர்கள் அல்ல. யுத்த காலத்தில் நாட்டுக்கு பல கத்தோலிக்க இளைஞர்கள் படையில் இணைந்து உயிர் தியாகம் செய்தனர்.

ஆனால், ராயப்பு ஜோசப் போன்ற சிறு குழுக்கள்தான் நாட்டுக்கு எதிராக செயற்படுகின்றன என்றும் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

### ரத்ன தேரர் பித்துப்பிடித்த வேலை செய்யவேண்டாம் - பொதுபலசேனா

தூய்மையான நாளை அமைப்பின் தலைவரான ரத்ன தேரர் தனது தூய்மையைப் பாதுகாத்துக் கொண்டு பித்துப் பிடித்த வேலைசெய்யாமல் ஒதுங்கியிருந்தால் நல்லது என்றுதான் நாம் அவருக்கும் அவரோடு திரிபவர்களுக்கும் தெரிவிக்கின்றோம் என பொதுபலசேனாவின் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே தேரர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள் தனக்குப் பின்னால் கோர்ட் ஆடை அணிந்துகொண்டிருப்பவர்கள் யார் என்பதைப் பற்றி சிந்திக்காமல் செயலில் இறங்கியுள்ளனர்.

இவர்களின் பின்னால் உள்ளவர்கள் பல்வேறு நோக்கங்களின் அடிப்படையில் செயற்படுகின்றார்கள். தயவுசெய்து தனது தூய்மையைப் பாதுகாத்துக் கொண்டு ஒதுங்கியிருக்குமாறு நாம் ரத்ன தேரரிடம் கேட்டுக்கொள்கின்றோம் எனவும் ஞானசாரர் மேலும் கூறியுள்ளார்.

### சேதமாக்கப்பட்ட பள்ளிவாசல் மீண்டும் தொழுகைக்கு...

அளுத்கம, தர்ஹாநகர் வன்முறையின் போது சேதமாக்கப்பட்ட தர்ஹாநகர், மரிக்கார் வீதி வீட்டுத் திட்ட மஸ்ஜிதுன் நூர் பள்ளிவாசல் புனரமைக்கப்பட்டு 2014.10.17ம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு பின்னேரத் தொழுகையுடன் திறந்துவைக்கப்பட்டது.

இவ்வைபவத்தில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரட்ன பிரதம அதிதியாகவும் மேற்கு இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஒபேமெதவல மற்றும் கந்த விகாரை, நாகந்த பேகொட, அம்பகஹ ஹந்திய, மாலெவன்கொட, காலவில ஆகிய விகாரைகளின் விகாராதிபதிகளும் கலந்துகொண்டனர்.

அத்தோடு புனர்வாழ்வு அதிகார சபை, அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா சபை, தேசிய சூறா சபை, உள்ளிட்ட பல நிறுவனங்களின் முக்கியஸ்தர்களும் ஊர் பிரமுகர்களும் இவ்வைபவத்தில் பங்குபற்றினர்.

### இராவண பலயவினால் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் முற்றுகை

இராவணா பலய என்ற அடிப்படை வாத சிங்கள பௌத்த அமைப்பு 2014.10.14 அன்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தை சுற்றி வளைத்ததன் காரணமாக அங்கு பதற்ற நிலைமை ஏற்பட்டது. வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுச்செல்வோரை பாதுகாக்குமாறு இராவண பலய அமைப்பு கோரியுள்ளது.

கொஸ்வத்த பத்தரமுல்ல பகுதியில் அமைந்துள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தை அன்று முற்பகல் இராவண பலய அமைப்பு முற்றுகையிட்டது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவருடன் பேச்சு வார்த்தை நடத்தவிரும்புவதாக இராவண பலய அமைப்பின் பொதுச் செயலாளர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

இதன்போது வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக அதிகாரிகளும் ராவண பலய அமைப்பின் பௌத்த பிக்குகளை திட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### பௌத்த - இந்து மாதம் பிரகடனம்

எதிர்வரும் தீபாவளி தினம் முதல் ஒரு மாத காலப்பகுதிக்கு பௌத்த இந்து மாதம் என பிரகடனப்படுத்தி பல்வேறுப்பட்ட வழிபாடுகளில் ஈடுபடுமாறு கடும்போக்கு பொதுபலசேனா அமைப்பும் அந்த அமைப்புடன் சேர்ந்து இயங்கும் இந்து சம்மேளனம் என்ற அமைப்பும் கேட்டுள்ளன.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அந்த அமைப்புகளின் பிரதிநிதிகள் இதனை தெரிவித்துள்ளனர்.

இந்துமத தலைவர்கள் பௌத்த விகாரைகளுக்கு சென்றும், பௌத்த மத தலைவர்கள் இந்துக் கோவில்களுக்குச் சென்றும் வழிபாடுகளில் ஈடுபடுவதே இதன் நோக்கம் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

### பயங்கரவாதம் அல்ல, இனவாதமே இலங்கையைப் பின்தள்ளியது - அமைச்சர் ராஜித

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி உள்ளிட்ட அனைத்தையும் அழித்து நாட்டை பின்னோக்கித் தள்ளியது பயங்கரவாதம் அல்ல, இனவாதமே என்று அமைச்சர் ராஜித சேனாரத்தின சாடியுள்ளார். பேருவளை மக்கொனயில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை சுதந்திரமடைந்த போது அபிவிருத்தியில் ஜப்பானுக்கு அடுத்த நிலையில் நாம் இருந்தோம்.

அவர்கள் 89 டொலர்கள் தனிநபர் வருமானத்தைக் கொண்டிருக்க நாம் 88 டொலர்கள் தனிநபர் வருமானத்தைக் கொண்டிருந்தோம்.

ஆனால், இன்று ஜப்பானியர்கள் 34 ஆயிரம் டொலர்கள் தனிநபர் வருமானத்தைக் கொண்டுள்ளனர். நாம் இன்னும் 2 ஆயிரம் டொலர்களைத் தாண்டவில்லை.

இவ்வாறான பொருளாதாரப் பின்னடைவுக்கு இந்நாட்டில் நிலவிய இனவாதம்தான் காரணம்.

சுதந்திரமடைந்தது தொடக்கம் இன்றுவரை, இனவாத செயற்பாடுகளின் காரணமாகவே நாட்டில் பாரிய அழிவுகள் நடைபெற்றன.

ஒரு காலத்தில் இந்நாட்டில் பயங்கரவாதம் தலைவிரித்தாடினாலும், 2009ம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதனை முறியடித்துவிட்டார்.

தற்போது இனவாதத்தின் மறுபக்கமான மதவாதம் தீவிரமாக பரவத் தொடங்கியுள்ளது.

இது உள்ளூர் மக்களிடையே மோதல்களுக்கும் வழிவகுக்கின்றது.

இவையெல்லாம் பௌத்தத்தின் பெயரால் நடைபெறுவதுதான் கவலைக்குரிய விடயம்.

பௌத்த மதத்தைப் பின்பற்றுகின்றவர்கள் ஒருபோதும் மதவாதிகளாக இருக்கமாட்டார்கள் என்றும் அமைச்சர் ராஜித தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.

(தொடரும்)



# கைகழுவும் நாள் எதற்காக?

**உலக** கைகழுவும் நாள் கடந்த 15 ஆம் திகதி சர்வதேச அளவில் கொண்டாடப்பட்டிருந்தது. சுகாதாரமற்ற குடிநீர், சுகாதாரச் சீர்கேடு, தூய்மையின்மை போன்றவைதான் நோய்களுக்கு அடிப்படை. இவற்றின்மூலமே பலவிதமான தொற்று நோய்கள் பரவுகின்றன, குறிப்பாகக் குழந்தைகளுக்கு.

உலகம் முழுவதும் தினமும் வாந்தி பேதி நோய்க்குள்ளாகி ஐந்து வயதுக்கு உட்பட்ட 1,400 குழந்தைகள் உயிரிழப்பதாக யுனிசெப் கூறுகிறது. ஆண்டில் 170 கோடி பேரைப் பாதிக்கும் இந்த நோய்க்கு, 6 இலட்சம் குழந்தைகள் பலியாகிவிடுகிறார்கள்.

தூய்மையின்மை காரணமாகவும், கை தூய்மை இல்லாமல் இருப்பதும் நோய்த் தொற்று ஏற்பட வசதியாக உள்ளது. அதனால் தூய்மையை கடைப்பிடித்தாலே வாந்தி, பேதியை ஏற்படுத்தும் நோய்த் தொற்றுகளில் இருந்து தப்பித்துவிடலாம். அதற்கு மிகவும் எளிய வழி வெளியில் சென்றுவந்த பிறகு, கழிப்பறையைப் பயன்படுத்திய பிறகு, தூய்மையற்ற நிலையில் கைகளைச் சோப்பு போட்டு நன்றாகக் கழுவுவதுதான்.

பல குழந்தைகள் நோய்த்தொற்றுக்கு ஆளாக மருத்துவ மனைகளும் காரணமாக உள்ளன. மருத்துவ மனையில் உள்ள குழந்தைகளையும் நோயாளிகளையும் கூட்டம் கூட்டமாகப் பார்க்கச் செல்லும் உறவினர்களும் இதற்கு ஒரு காரணம். மேலும் கழிவறை, குளியல் அறை, பொது இடங்களைப் பயன்படுத்தும்போதும் குழந்தைகள் நோய்த் தொற்றுக்கு ஆளாகிறார்கள்.

அதனால் இந்த இடங்களுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பும்போது, கண்டிப்பாகக் கை கழுவும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். கை கழுவுவதன் அவசியத்தை சிறுவயதிலேயே குழந்தைகளுக்குப் பெற்றோர்களும், ஆசிரியர்களும் விளக்கவேண்டும்.

குழந்தைகள் மட்டுமல்லாமல், பெரியவர்களும் கைகழுவும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். குறிப்பாகக் கர்ப்பிணிகள் சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் கை கழுவவேண்டும். குழந்தைகளுக்குப் பாலூட்டும் தாய்மார்கள் வெளியே சென்றுவிட்டு வீடு திரும்பும்போதும், பால் ஊட்டும்போதும், உணவு ஊட்டும்போதும், குழந்தைகளின் துணி, உடைகள், சிறுநீர், மலம்பட்ட துணிகளைக் கையாளும்போது கைகளைக் கண்டிப்பாகக் கழுவவேண்டும். அப்படிச் செய்தால் நோய் பாதிப்பின்றி, ஆரோக்கியமாக வாழலாம்.

கை கழுவுவதன் அவசியம் தொடர்பான விழிப்புணர்வைப் பொதுமக்களிடம் ஏற்படுத்தும்வகையில் உலகக் கைகழுவும் நாள் 2008-ம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. குழந்தைகள், பள்ளிக்கூடங்களில் படிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக இந்த நாள் ஏற்படுத்தப்பட்டது. "தூய்மையான கைகள் பாதுகாப்பான வாழ்க்கை" என்பதே இந்த நாள் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம்.

# வழுக்கையை தடுக்கலாமா?

**தலைமுடிப்** பராமரிப்புக்காகக் காலம் காலமாக நாம் பின்பற்றிவந்த இயற்கை முறைகளைக் கைவிட்டு, செயற்கை அழகு சாதனப் பொருட்களைப் பயன்படுத்த ஆரம்பித்த பிறகு, தலைமுடியின் ஆயுள் குறைந்துவிட்டது. முன்பு 60 வயதுக்கு மேல் விழுந்த வழுக்கை, இப்போது 30 வயதிலேயே விழ ஆரம்பித்துவிடுகிறது.

நமது தலையில் சராசரியாக ஒரு லட்சம் முடிகள் இருக்கின்றன. தினமும் சராசரியாக 100 முடிகள் உதிர்வது இயற்கை. முடி வளர்கிறது என்று சொன்னால், ஒரு செடி தொடர்ச்சியாக வளர்வதைப் போல் முடிவளர்கிறது என்று அர்த்தப் படுத்திக் கொள்ளக்கூடாது. முடியின் வளர்ச்சி 3 பருவங்களைக் கொண்டது. 'அனாஜென்' (Anagen) என்பது வளரும் பருவம்.



ஒரு முடியானது தினமும் சராசரியாக அரை மில்லி மீற்றர் நீளத்துக்கு வளர்கிறது. இந்த வளர்ச்சிப் பருவம் 3 முதல் 7 வாரங்கள் வரை நீடிக்கும். இதை தீர்மானிப்பது, பரம்பரையில் வரும் மரபணுக்கள்.

அடுத்தது 'காட்டாஜன்' என்று ஒரு பருவம். இதில் முடி இயற்கையாகவே உதிர ஆரம்பிக்கும். இந்தப் பருவம் 2 வாரங்களுக்கு நீடிக்கும். மூன்றாவது பருவம் 'டீலாஜன்'. இது முடி ஓய்வெடுக்கும் பருவம். இது சுமார் 2 முதல் 4 மாதங்கள்வரை நீடிக்கும். இந்தச் சுழற்சி முடிந்து, மீண்டும் வளர்ச்சிப் பருவத்துக்குத் திரும்பும். முடி உதிர்ந்த இடத்தில் புதிதாக வேறு முடி முளைக்கும்.

தலைமுடி ஒவ்வொன்றும் ஒவ்வொரு பருவத்தில் இருக்கும். பெரும்பாலான முடிகள் வளரும் பருவத்தில் இருந்தால், முடி தொடர்ந்து வளரும். உதிரும் பருவத்தில் அதிக முடிகள் இருந்தால், முடிகொட்டும் வழுக்கை விழும்.

நமக்கு வயதாவதை எப்படித் தடுக்க முடியாதோ, அப்படித்தான் வழுக்கையும். இது பெரும்பாலும் பரம்பரை காரணமாகவே வருகிறது. எனவே, இதைத் தடுக்கமுடியாது. ஆனால், சீக்கிரத்தில் வழுக்கை விழுவதைத் தடுக்கலாம் தள்ளிப்போடலாம்.

அதற்கு, தலைமுடிகளின் வேர்க்கால் எப்படி இருக்கிறது? அதற்கு உயிர் இருக்கிறதா? மறுபடியும் வளரச் செய்ய முடியுமா என்று முடியை ஸ்கேன் செய்து பார்த்து, உடனடியாகச் சிகிச்சை மேற்கொள்வதன்மூலம் வழுக்கையைத் தடுக்கலாம்.

வழுக்கை விழத் தொடங்கியதுமே சில ஹோர்மோன் மாத்திரைகளைச் சாப்பிட்டுவந்தால் மேன்மேலும் முடி கொட்டாது. ஆனால், மாத்திரை போடுவதை நிறுத்தியதும் முடி கொட்ட ஆரம்பித்துவிடும். எனவே, இது நிரந்தரத் தீர்வு ஆகாது. சிறுவயதில் இருந்தே தலை முடியைப் பராமரிப்பதில் கவனம் செலுத்தவேண்டும். எண்ணெய் தேய்த்துக் குளிப்பது முக்கியம். சருமத்தையும் முடியையும் வறண்டுபோகாமல் வைத்திருக்க, எண்ணெய் நிச்சயம் உதவும். சீயக்காய் குளியல் நல்லது. வெயிலில் அதிகமாக அலையக்கூடாது. கடினமான சீப்புகளைப் பயன்படுத்தக் கூடாது. பேன், பொடுகு, பூஞ்சை போன்றவை தொற்றாமல் தலையைச் சுத்தமாகப் பராமரிக்கவேண்டியது முக்கியம்.

அடர் பச்சைக் காய்கறிகள், கீரைகள், பேரீச்சை, கேரட், முட்டை, பருப்பு, பால், பால் பொருட்கள், முழுத்தானியங்கள், வாழைப்பழம், மீன் போன்ற உணவு வகைகளை அதிகமாகச் சாப்பிட்டால் முடிவளர்வதற்கான எல்லாச் சத்துகளும் கிடைக்கும்.

தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு நாளிதழ்
ரூ.10/= மட்டுமே

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"

வடபுலத்தான் எழுதும் நாட்டு நடப்பு குறிப்புகளும் விமர்சனங்களும்

வடபுலத்தான் எழுதுவது...

# பந்த பாசம்



வானமகள்

உண்மையிலே தோகை விரித்து களிநடனம் புரியுமாப் போல் வண்ண நிறங்களை வட்டவடிவமாக வீசி மேகமூட்டங்களை மெல்லியதாக அசையவிட்டு வேடிக்கை காட்டுவதை வீட்டுமுற்றத்தில் இருந்து ரசித்து கொண்டிருந்த ரஹீமா, ம்ஹூம். இனியும் இங்கிருக்க முடியாது. இப்போ... 'மஹ்ரிப் பாங்கு கேட்கும். கேட்ட கையோடு தொழுதுவிட்டு அனஸ் மகனாருக்கு படித்துக் கொடுக்கவேண்டும்.

அப்புறம் இரவுச்சமையல் செய்ய வேண்டும் என்று எண்ணியவாறு ஆடையில் ஒட்டியிருந்த மண்ணை தட்டிவிட்டபடி அருகே, விளையாடிக் கொண்டிருந்த அனசை அழைத்து நீங்க போய் கால், கை, முகத்தை கழுவிக் கொண்டு. பள்ளிவாசல் போய் தொழுதுவிட்டு வாங்க மகன். இன்று நிறைய வேலைகள் இருக்கு. உம்மாவுக்கு நீங்கள் படித்த பின்தானே செய்யவேணும் என்றாள்.

சரிம்மா, இந்தா சுருக்கா வாரேன். நீங்கள் உடுப்பு தொப்பிய எடுத்து வைங்கம்மா...! சரி மகன் என்றவள், அதற்கான ஆயத்தங்களை செய்து மகனை வழியனுப்பிவிட்டு தன் இறை-கடமையையும் இனிதாக முடித்து தொழுதுவிட்டு துஆவில் ஈடுபடலானாள். அவளை அறியாமலே, அவள் உள்ளம் நொந்த வேதனையின் வலியிலோ என்னவோ, கண்களில் நீர் முட்டிமோதி கரைபுரண்ட வெள்ளமாக ஓடிக் கொண்டிருந்தது...

"யாஅல்லாஹ், ஜீவராசிகள் அனைவருக்கும் உண்மைக்கும் நன்மைக்குமான எண்ணத்தை கொடுத்து நல்லபடி வாழ நல்லருள் செய்வாயாக! தூய்மையான உள்ளத்தை துளிர்க்கச் செய்வாயாக யாஅல்லாஹ்" என்று உள்ளம் உருகி பிரார்த்தித்து தனது கடமையை முடித்துக்கொண்டு கண்களை துடைத்துக்கொண்டே தொழுகை விரிப்பை இருக்குமிடத்தில் வைத்து விட்டு வெளியேறினாள் அறையைவிட்டு.

புத்தகமும் கொப்பியுமாக மேசையில் பரந்து கிடந்த தனது பாடசாலை உபகரணங்களை சீர்படுத்தி வைத்துக் கொண்டிருந்த மகனைக் கண்ட சந்தோசத்துடன், "வந்துவிட்டீங்களா மகன்" என்றவாறே அவனண்டை வந்தாள். ஆமாம்மா... இப்பதான் வந்தேன். நீங்க தொழுகையில இருந்ததால, நான் எண்ட நாளைய டைம் டேபிளை ஆயத்தப்படுத்திக் கொண்டேன் உம்மா. சரி மகன் நாளைக்கு ஹோம்வேர்க் செய்ய வேணும் என்றீங்களே, ஓடுங்க என்ன வென்று பார்ப்போம்.

ஆமாம்மா கணித பாடத்தில் தந்துள்ளது 'நான் செய்து முடிப்பேம்மா... ஆனா... தமிழ்ல தான் கட்டுரை ஒன்று எழுதிவரும்படி டீச்சர் கூறினாங்க. அதுதான் எழுதவேணும். நீங்களும் கொஞ்சம் உதவி செய்யுங்களேம்மா! ம்...ம்... என்ன தலைப்பு தந்தாங்க டீச்சர் சொல்லுங்க பார்ப்போம் என்றாள் ரஹீமா!

அதுவாம்மா நாம் எப்பவும் ஒருவருக்கொருவர் உதவி ஒத்தாசையாக இருக்கவேணும். எமக்கு ஒருவர் உதவிசெய்தால் அதை ஒருபோதும் மறக்கக்கூடாது என்று கூறிவிட்டு நீங்களும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சொல்லி "நன்றி" பற்றிய விரிவை எழுதும்படி பணித்துள்ளார் உம்மா! டீச்சர் கூறியது போல நீங்களும் கொஞ்சம் பொயின்ட் தாருங்களேன் என்றான் அனஸ்!

ரஹீமாவின் உள்ளத்தில் அந்த வார்த்தையை கேட்ட மாத்திரமே சுருக்கென்று ஓர் முள்குத்தி வலித்தது போன்றிருந்தது. கூடவே, இந்த வார்த்தைக்கு மதிப்பில்லாத மனிதாபிமானம் உண்மை மனிதத்தை தொலைத்துவிட்டு, உறவுகளை உதறித் தள்ளிவிட்டு பிரிவுகளை தக்க வைத்துக்கொள்கிறது என்று முணுமுணுத்தாள்.

என்னம்மா? நான் கேட்தற்கு ஒன்றுமே சொல்லாமல் உங்களுக்குள்ளே கதைக்கிறீங்க என்று மகன் கேட்ட கேள்வியில் விஷயத்துக்கு வந்த ரஹீமா.. ஆமா மகன் "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" நன்றி மறப்பது நன்றன்று என்ற அமுத வாக்குகள் இந்த நன்றிப் பிரவாகத்தை பிரஸ்தாபிக்க வந்த வழிகாட்டிகள்தான். ஆனால் இதனை கடைப்பிடித்து அதன் வழி யார் நடக்கிறார்கள்! இப்போது எங்கு பார்த்தாலும் சுயநலம்தானே மேலோங்கி ஆட்சிபுரிகின்றதனால ஏற்றிவிட்ட ஏணிப்படிகளை எட்டி உதைத்துவிட்டு சென்று கொண்டிருப்பவர்களே அதிகம். நன்றி என்ற வார்த்தைக்கு எங்கே மகன் மரியாதை இருக்கிறது!

ஆமாம்மா... நீங்க சொல்றத கேட்கத் தான் எனக்கு எல்லாம் இப்போ விளங்குதும்மா...!

நீங்கள் பெரியம்மாட நுஸ்கா றாத்தாவ எப்படி பார்த்து பார்த்து செய்து அவங்கட்ட படிப்பிக்க வசதி இல்லை என்றவுடன் எங்களோடு கொண்டுவந்து வைத்துக்கொண்டு படிக்கவெல்லாம் வச்சீங்க! படித்தேனா, முடித்தேனா என்று போனவ, போனவதான்! அவட திருமணத்துக்குக்கூட நம்மள அழைக்கலையே உம்மா! அவ எவ்வளவு செய்நன்றி மறந்தவம்மா.

ஏன் மக பழசயெல்லாம் கிளறுகிறீங்க. நடந்தத மறப்போம். நடக்கின்றதைப் பார்ப்போம். நடக்கவிருப்பது எல்லாம் நல்லபடி நடந்துவிட அல்லாஹ்வைப் பிரார்த்திப்போம்!

மகன் நீங்க இவற்றைப் பற்றி எல்லாம் சிந்திக்கக்கூடாது. ஏனென்றால் எங்களை படைத்த இறைவன் எங்கள் உள்ளத்தைத் தான் பார்க்கிறானே தவிர வேறெதையும் இல்ல மகன். அதனால நீங்க உங்க உள்ளத்தை நல்லபடியாக வைத்துக் கொள்ளவேண்டும். தீய எண்ணங்கள், செயல்களில் இருந்து விலகிக்கொள்ள வேண்டும். சரியா மகன்! என்றவுடன் சரியம்மா இனி நான் அதையெல்லாம் பற்றி பேசவும்மாட்டேன், நினைக்கவும் மாட்டேம்மா என்றபடி மீண்டும் தனது பாடவிதானத்தில் மனதைப் பதித்துக் கொண்டான்.

என்னவோ வளரும் பிள்ளைகளுக்கு நஞ்சு வார்த்தைகளையே வளர்க்கும் தாய்மார்கள் பட்டியலில் இருந்து விலகி நல்வழிகாட்டி நல்லொழுக்கத்துடன் தன் மகன் வாழவேண்டும் என்ற வேணாவில் அவள் அவ்வார்த்தைகளுக்கு தடை விதித்தாளேயொழிய தன் மன ஆதங்கத்தையும் தன்னோடையே தடுத்துக் கொண்டாள்!

தான் செய்த ஒரேயொரு தவறு தன் குடும்பம் நல்லபடியாக வாழ்வதைப் போல தன் ஏனைய சகோதர சகோதரிகளும் சிறப்பாக ஒற்றுமையாக என்ற கயிற்றைப் பற்றிப் பிடித்தவர்களாக வளமாக வாழவேண்டும் என்பதற்காக இயன்றளவு உதவிசெய்ததுதான். இதுவே தனக்கு உபத்திரமாக முடியும், மனவேதனைகளை சுமக்கும் என்று அவள் கனவில்கூட நினைக்கவில்லை.

தன்னைவிட்டு ஒருவர் ஒருவராக பிரிந்து நின்றபோதுதான் தன் தனிமைப் படுத்தலின் வலி தாளாது சொல்லவும் முடியாது, மெல்லவும் முடியாது பாக்கு வெட்டியில் அகப்பட்ட பாக்கைப்போன்று பரிதவித்தாள். செய்யாத குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டாள். கூறாத வார்த்தைகளை மெய்யாக்கி குறைகூறப்பட்டாள். செய்வதறியாது தத்தளித்தபோது அன்புக் கணவரினதும் ஆசை மகனினதும் ஆறுதலினால் ஆசுவாசப்படுத்தப்பட்டாள். "யாரும் எதையும் பேசட்டும், எனக்கு நானே நீதிபதி" என்று பொறுமையுடன் இருந்துவிட்டாள்.

உம்மா.. உம்மா... என்று சிபானி மாமி வந்திருக்காங்க. பக்கத்துவீட்டு சாராட உம்மா உங்கள வரட்டாம் என்ற மகனது அழைப்பை கேட்ட ரஹீமா கடந்த நினைவுகள் கழிந்தவளாக நாளைய பெருநாளுக்காக தைக்கக் கொடுத்த உடுப்புகளோடு தான் சிபானி வந்திருப்பா என்று எண்ணியவாறு அவ்விடம் நகர்ந்தாள்...

"ரஹீமா...! நீங்க தைக்கத் தந்த உடுப்புகள் எல்லாம் இதிலே இருக்கு. சரி பார்த்துக் கொள்ளுங்க" என்று பேச்சை இழுத்துக்கொண்டு போனாள்.

என்ன சிபானி... ஏதோ... பேச நினைப்பதுபோல இருக்கு பரவாயில்லை... என்ன கூறப்போறீங்க கூறுங்க... என்று வினவினாள். இல்ல... சிபானி உங்க இளைய சகோதரி அதுதான் நுஸ்காட உம்மா. எனக்கு டெலிபோன் எடுத்தா... ஆ... யாரு நுஹா தங்கையா போன் எடுத்தா என்று அடக்கிவைத்த பாசம் பொங்கியொழ அவசரமாகக் கேட்டாள்.

ஆமா ரஹீமா, உங்க எல்லாச் சகோதர சகோதரிகள் குடும்பமும், பிள்ளைகள் குடும்பமும் இந்த ஹஜ் பெருநாளை உங்க வீட்டிற்கு வந்து, உங்க குடும்பத்தோட சந்தோசமாக கொண்டாடப் போறாங்களாம். உங்க சம்மதம் கேட்டு வரச் சொன்னாங்க என்றாள்.

ரஹீமாவுக்கு அந்த வார்த்தைகள் கேட்கக் கேட்க தெவிட்டாத இன்பம் தரும் தேனாக இனித்தது. "பாச இருள் சூழ்ந்த தன் வாழ்விலும் நிலாவொளி பிரகாசிக்கிறது" என்றே உள்ள உணர்வுகளை மறைத்தவளாக! அல்ஹம்து லில்லாஹ் ரஹீமா! எனது பிரார்த்தனைகளை இறைவன் இவ்வளவு சீக்கிரம் நிறைவேற்றுவான் என்று நான் கனவிலும் எண்ணவில்லை... அவன் நாடினால் அனைத்தும் ஒரு நொடிக்குள் நடந்து விடும். தவறுக்கும் மறதிக்கும் இடையில் படைக்கப்பட்டுவிட்ட மனிதர்கள் தமது தப்புணர்ந்து திருந்தும்போது நாம் அதை ஏற்கத்தானே வேணும் என்றுகூறி மகிழ்வோடு சிரித்தாள்.

அப்ரார் ஏ.அஸீஸ், யாழ்ப்பாணம்

சிபானி...! உடனே நீங்க அவங்க எல்லோரையும், நானும் எனது குடும்பமும் வரவேற்கக் காத்திருப்பதாகக் கூறுங்கள் என்று கூறவே, சிபானியும் விடைபெற்றுக் கொண்டாள். ரஹீமா தாத்தா, ரஹீமா தங்கச்சி, பெரியம்மா, சின்னம்மா, மாமி, மாமா என்ற உறவொலிகள் நாலா பக்கமும் ஒலிக்க கூட்டுக்குடும்ப மகிழ்வு திளைக்க ஹஜ்பெருநாள் தக்பீர் முழக்கம் அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்! லாஇலாஹ இல்லல்லாஹு அல்லாஹு அக்பர்! என்ற தக்பீர் (தக்பீர்) முழக்கம் காதைப் பிளக்க அனைவரும் குளித்து முடித்து புத்தாடை புனைந்து புனிதப் பெருநாளாம் இனிய பெருநாளை எதிர் நோக்கி தொழுகையை நிறை வேற்றுவதற்காக ஒற்றுமையான ஒன்று கூடலுடன் புறப்படுகின்றனர். வேற்றுமைகளை களைந்த ஒற்றுமையுடன் வாழ பிரிவில்லா பரிவுகொள்ள அழைக்கின்றது அல்லாஹ்வின் அழைப்பு.

**"தியாகித்த தித்திக்கும் பெருநாள் திளைக்கின்றது"**



"ஏண்டி ராதிகா! நீ மட்டும் தீபாவ்ளிக்குப் புது பட்டுப் புடைவை கட்டிக்கிட்டு வெளியே வர்றியே... உன் கணவர் எங்கே?"

"இந்தப் பட்டுப் புடைவையை வாங்கினதுக்கு ஒரு துண்டு இலவசமா கொடுத்தான்.

அதைக் கட்டிட்டு வெளியேவர அவர் வெட்கப்படுறார்!"

"அவர் இப்படி உலகம் தெரியாத ஆளா இருக்காரே!"

"ஏன்...?"

"எலக்ட்ரிக் பட்டாசு வெடிச்சா ஷாக் அடிக்குமா"னு கேட்கிறாரே!"




கோவை நந்தன்

# கடலோடி... எபோலா...

அறிவியல் வளர்ச்சியின் உச்சியில் பிரபஞ்சத்திலுள்ள அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து கொண்டிருக்கும் மனித இனத்தை அப்பப்போ!! அனைத்திற்கும் அப்பாற்பட்ட ஏதோ ஒன்று ஆட்டி, அழித்துக்கொண்டுதான் இருக்கிறது. இயற்கையின் சீற்றங்களை விட இன, மத, தேசிய மனித முரண்பாடுகள் ஏற்படுத்தும் அழிவுகளைவிட ஏனைய அனைத்து காரணிகளாலும் ஏற்படுத்தப்படும் அழிவுகளைவிட காலம் காலமாக அப்பப்போ மனித குலத்தை மிரட்டிக்கொண்டும் அழித்துக்கொண்டும் இருப்பது நோய்க்கிருமிகள் எனப்படும் அழிவு நாசினிகள்தான்.

இந்தவகையில் இன்று உலகை அச்சுறுத்திக் கொண்டிருப்பது எபோலா என்னும் நுண்ணுயிரி. இதன் தாக்கத்தால் இன்றைய திகதிவரை லைபீரியா, சியராலியோன், நைஜீரியா, இகினியா உட்பட்ட பல மேற்கு ஆபிரிக்க நாடுகளில் 3400 பேர்வரை பலியாகியும் 7,200 பேர் பாதிக்கப்பட்டும் உள்ளனர்.

இந்த கொடிய நோய் ஏற்படுத்தும் அழிவுகள் பலமடங்கு அதிகரிக்கலாம் என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. கடந்த நூற்றாண்டுகளில் பிளேக், கொலரா, அம்மை போன்ற நோய்களால் பல கிராமங்கள் பூண்டோடு அழிந்த பல சரித்திரங்களை கண்ட நாம், சூரியமண்டல கிரகங்களுக்கே விண்கலன்களை அனுப்பி ஆய்வுகள் மேற்கொண்டு வரும் இந்த வேளையிலும்கூட மீண்டும் அதேபோன்ற அழிவுகளை சந்திக்கிறோம். தடுத்து நிறுத்தமுடியாமல் திணறுகிறோம் என்றால் இந்த ஆய்வுகளும் மனித சமூகத்தின் அறிவியல் வளர்ச்சியும் எதைத்தான் சாதிக்கப் போகிறது...?

கடந்த டிசம்பர் மாதம் மேற்கு ஆபிரிக்க நாடான கினியில் முதல் முதலாகக் கண்டறியப்பட்டதாகச் சொல்லப்படும் எபோலா நுண்ணுயிரி நோய், கினியின் அண்டை நாடுகளான லைபீரியா, நைஜீரியா, சியாரிலியோன் ஆகிய நாடுகளுக்கும் பரவி இன்று ஸ்பெயின் நாட்டுக்குள்ளும் புகுந்து முழு ஐரோப்பியர்களையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

மத்திய கிழக்கு, ஆசிய நாடுகளும் எதிரியை எதிர்கொள்ளத் தயாராகி வருகின்றன. உலக சுகாதார நிறுவனமும் இந்த நுண்ணுயிரியின் பரவலை அசாதாரண அவசர நிலையாக பிரகடனப்படுத்தி சர்வதேச நடவடிக்கைகளை முடுக்கிவிடப் பணித்திருக்கிறது. லைபீரியாவில் அவசர நிலைச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. சியாரிலியோனில் எபோலாவால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் சிகிச்சைக்குத் தனியிடம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் பொது இடங்களில் மக்கள்கூடுவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

எபோலா நோய் தொற்றுள்ள ஒரு மனிதனின் விந்தணுவில் சுமார் 70 நாட்கள்வரை இந்த வைரஸ் உயிருடன் இருக்க சாத்தியமுள்ளதால் எபோலா நோயில் இருந்து குணமடைந்துவரும் ஒருவர் குறைந்தது 90 நாட்களுக்காவது உடலுறவு மேற்கொள்வதை தவிர்த்துக் கொள்ளவேண்டும் என மருத்துவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

உயிராபத்து விளைவிக்கக்கூடிய இந்த நோய்க்கிருமியையும், இது தொற்றியுள்ள முதலாவது நபரையும் தெரிந்துகொண்டு மாதம் பத்தாகியும் இதுவ்ரை இந்தத் தொற்றுநோய்க்கு எந்தவிதத் தடுப்பு மருந்தோ, மாற்று மருந்தோ கண்டுபிடிக்கப்படவில்லை என்பதுதான் வேதனை. அதிக சுகாதார வசதிகள் இல்லாத பல ஆபிரிக்க நாடுகளில் இந்த நுண்ணுயிரி தனது வீரியத்தை வெளிப்படுத்தி இருப்பதால், இதனை முறையாக கட்டுப்படுத்துவதோ இதற்கான நிரந்தர தீர்வை கண்டுபிடிப்பதோ கடினம் என்கிறார்கள் மருத்துவ ஆய்வாளர்கள்.

மனிதனின் உமிழ்நீர், இரத்தம், இருமல், தும்மல், விந்து, மலம், சிறுநீர் போன்றவற்றினூடாக பரவும் தன்மை உடையதென தெரிவிக்கப்பட்ட இந்த நுண்ணுயிரி தாய்ப்பால் மூலமும் பரவும் என்பதும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. பல வழிகளில் பரவும், வீரியம்கொண்ட இந்த எபோலா கிருமிகளின் தொற்றுள்ள நோயாளிகள் தனியிடத்தில் பராமரிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டும்கூட, அவர்களுக்கு சிகிச்சையளித்த அறுபதுக்கும் மேற்பட்ட மருத்துவப் பணியாளர்களுக்கு இந்த நோய்த்தொற்று ஏற்பட்டு உயிரிழந்திருக்கிறார்கள்.

ஆபிரிக்காவிற்கு வெளியே முதன் முதல் எபோலா நோய் தொற்று ஏற்பட்டதாகக் கூறப்படும் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த மருத்துவ தாதி ஒருவர் மெட்ரிட் நகரின் கார்லோஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்த நிலையில் ஐரோப்பிய நாடுகளுக்கும் எபோலா நோய் பரவுவது தவிர்க்கமுடியாதது என உலக சுகாதார அமைப்பு எதிர்வுகூறி உள்ளது. இந்த அமைப்பு வெளியிட்ட மதிப்பீடு ஒன்றில் எபோலா நோய் உலகின் 3 கண்டங்களில் பரவி இருக்கலாம் என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த மாதம் ஒக்ரோபர் இறுதிக்குள் எபோலா வைரஸ் பிரான்ஸ் நாட்டை அடைய 75 சதவீத வாய்ப்பு உள்ளதாகவும், இங்கிலாந்தை எட்ட 50 சதவீத வாய்ப்பு உள்ளதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்து உள்ளனர். பிரான்ஸ் தலைநகர் பரிசிலிருந்து ஸ்பெயினின் மெட்ரிட் விமான நிலையத்தை சென்றடைந்த பயணிகள் விமானம் ஒன்று ஓடுபாதையில் வைத்தே தனிமைப்படுத்தப்பட்டு அதில் இருந்த பயணிகளிற்கு எபோலா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

அன்றைய ஐரோப்பிய, பிரித்தானிய கடலோடிகள் ஆபிரிக்காவும் ஆசியாவும் சுரண்டி அழிக்கப்பட காரணிகளாக இருந்ததுபோல இன்று இப்படியான விஷ வைரசுகள் கண்டம்விட்டு கண்டம் பாய்கின்றனவோ என எண்ணத் தோன்றுகிறது.

20 ஆண்டுகளின் முன்னர் அறியப்பட்ட இன்றும் உலகை உலுக்கிக் கொண்டிருக்கும் எயிட்ஸ் நோயின் தொற்றுக்கிருமிகளும் முதன் முதலில் ஆபிரிக்கக் கண்டத்தின் குரங்குகள் மூலமே உருவாகியது என தெரிவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

எது எப்படியோ ஓர் ஊரில் கொள்ளை நோய் இருப்பதாக நீங்கள் செவியுற்றால் அங்கு நீங்கள் செல்லாதீர்கள். நீங்கள் ஓர் ஊரில் இருக்கும்போது அங்கு கொள்ளைநோய் ஏற்பட்டால் அந்த ஊரிலிருந்து வெளியேறாதீர்கள் என்கின்ற நபிகள் நாயகம் அவர்களின் கூற்றை பின்பற்றினால் ஓரளவாவது நாம் எம்மை மட்டுமல்ல, ஏனையவர்களையும் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

# முடிவில்லாப் பிரிவுகளும் இன்றைய வாழ்வின் முரண்பாடுகளும்

**'நாகரிக வாழ்வியல்'** நாலு திசையெங்கும் நாட்டியமாடினாலும் நாமின்னும் நாலு சுவரிற்குள்தான் வாழ்ந்து வருகின்றோம். போட்டிகள், பொறாமைகள், விரோதங்கள், குரோதங்கள், வன்முறைகள், வாழ்வெட்டுக்கள் மலிந்த மானிட வர்க்கங்களாவே நாள்தோறும் நாம் மறுபிறவியெடுக்கின்றோம். முடிவில்லாப் பிரிவுகளையும், தீர்வில்லா முரண்பாடுகளையும் சுமந்துவாழ்கின்றோம். இந்த பூமி எதற்காக பரந்து விரிந்து கிடக்கின்றது...? நாலு மனிதர்களை சந்தோசப்படுத்தி நாமும் சந்தோசமாக வாழ்வதற்காகவே.




ஆனால் நாமோ வன்முறைதான் வாழ்க்கையென்று வாழேந்தி நிற்கின்றோம்.

**ஆஸ்திக்கும் அந்தஸ்துக்கும் ஆயிரம் அர்த்தம் இருந்தாலும் நிஜமான அன்புக்கு ஒரேயொரு அர்த்தமிருந்தால் அதுவே எம் வாழ்வில் வெற்றியைத் தேடித்தரும் என்பார்கள்.**

இன்று எத்தனையோ விவாகரத்துக்கள் நாளுக்கு நாள் நீதிமன்றம் வருகின்றன. அத்தனைக்கும் அடிப்படைக் காரணம் பிரச்சினைகள் அல்ல, முரண்பாடுகளேயாகும். முரண்பாடு என்பது வேறு. பிரச்சினை என்பது வேறு. இருபக்கங்களிலும் சரியான நியாயங்கள் இருந்தபோதும் கருத்து வேறுபாடு காரணமாக உருவாவது முரண்பாடாகும். மாறாக ஒரு பக்கத்தில் மாத்திரம் சரியான நியாயம் இருக்கும் போது உருப்பெறுவது பிரச்சினை ஆகும். முரண்பாடுகள் முற்றிய நிலையில் பிரச்சினைகளாக உருப்பெறலாம். ஆனால் இன்றைய சமூகப்பிரச்சினைகள் பலவற்றிற்கு அடிப்படைக் காரணம் முரண்பாடுகளேயாகும். அதனைத் தீர்ப்பது சற்றுக்கடினம். ஆனால் பிரச்சினைகளைத் தீர்ப்பது சுலபம். இன்றைய சமூகக்கட்டமைப்பில் பல்வேறு துருவங்களில் முரண்பாடுகள் முற்றிவருகின்றன. குடும்பத்தில் ஏற்படும் முரண்பாடுகளால் விவாகரத்துக்கள் மலிகின்றன, நிர்வாகங்களில் ஏற்படும் முரண்பாடுகளால் வெளியீடுகள் பாதிக்கப்படுகின்றன. அரசியலில் ஏற்படும் முரண்பாடுகளால் அப்பாவிப் பொதுமக்களிற்கு பயன்பட வேண்டிய நிதிகள் பயன்பாடற்றுத் திரும்புகின்றன. பெற்றோர்க்கும் பிள்ளைகளிற்கும் இடையிலான முரண்பாட்டால் முதியோர் இல்லங்களில் வாழ வைத்த தெய்வங்கள் வாடிக்கிடக்கின்றன. ஆகவே முரண்பாடுகள் தொடர்பாக தனித்தனியாக நோக்க வேண்டிய கட்டாய தேவை இன்று அதிகரித்துள்ளது. அந்தவகையில் வாரமொரு வாழ்வியல் என்கின்ற இத்தொடர் ஊடாக பல்வேறு விடயங்களை பகுத்தாராய்வோம்.

முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளும் அறிவும் ஈடுபாடும் எம்மவர்கள் மத்தியில் குறைந்து செல்வதே முடிவில்லாப் பிரிவுகளிற்கு அடிப்படையாக அமைகின்றது. மனித உறவுகளின் முக்கியத்துவம், ஒன்றிணைந்த வாழ்வின் தேவைகள் என்பவற்றை தற்கால சமூகம் புரிந்து கொள்வதில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

**1. விட்டுக்கொடுப்பு என்பதை எமது தற்கால சமூகம் தோல்வியாகக் கருதுகின்றோம்.**

**2.பிறரின் தேவைகளைக் கருத்தில் எடுக்காது (needs) எமது நிலையில் இருந்து மாத்திரம் சிந்தித்து தொடர்பாடல்களை மேற்கொள்கின்றோம்.**

**3.மற்றவர் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாது தொடர்பாடல்களை மேற்கொள்கின்றோம்.**

**4.வன்முறையால் எதனையும் சாதித்துவிடலாம் என்கின்ற வக்கிர மனப்பாங்கை வளர்த்துவருகின்றோம்.**

மனிதவள அபிவிருத்திக்கும் உளநிலை செம்மையாக்கத்திற்கும் பல திட்டங்களை நாம் முன்னெடுக்க வேண்டும். வளர்முக நாடுகள் இதில் கூடிய கவனம் எடுக்கின்றார்கள். ஆனால் நாமே சிறிதளவுகூட இதை சிந்திப்பதில்லை. இழப்புக்களின் உச்சத்தைக் கண்டு வெந்து நொந்துபோன சமூக ஆளணிகள் நாங்கள். எமக்குத்தான் வழிகாட்டலும் ஆலோசனையும் அதிகம் தேவை.

(17ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## மட்டக்களப்பில் ...

மேலும் இப்பகுதிகளை ஏனைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அத்துமீறிப் பிடித்து விவசாயம்செய்து வருவது மட்டுமல்லாமல், ஒரு திட்டமிட்ட குடியேற்றத்தையும் செய்வதற்கும், மாவட்ட எல்லையிலுள்ள காணிகளை ஏனைய மாவட்டத்துடன் சேர்ப்பதற்கும் முயற்சி எடுக்கப்படுகின்றனவா என்னும் சந்தேகம் உருவாகி வருகின்றது.

ஆயினும் ஒரு வர்த்தமானிப் பிரகடனத்தைச் செய்யும்போது உரிய அதிகாரமுள்ள அரச அதிபர், பிரதேச செயலாளர், அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், அமைப்புக்களுடன் கலந்தாலோசிக்காமல் இவ்வாறு முறைகேடான முறையில் இத்தகைய பிரகடனங்களை மேற்கொள்வது உள்நோக்கமடையதாகவே கருதத் தோன்றுகின்றது என்பது குற்றச்சாட்டாக இருக்கிறது.

எனவே, எல்லைப்பகுதியில் மக்கள் பாவனையிலுள்ள அரச காணிகளை வனவளப் பிரதேசமாக எல்லையிடுதல் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். தற்போதைய மாவட்ட எல்லைகளை ஆரம்ப கால எல்லைகளோடு ஒப்பீட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும். அத்துமீறி விவசாயம் செய்யும் எனைய மாவட்டத்தை சேர்ந் குடியேற்ற வாசிகளை தடுத்து நிறுத்துதல் வேண்டும். 2013-7-8, 2013-7-26 திகதியிடப்பட்ட இரண்டு வர்த்தமானிப் பிரகடனத்தையும் மீள்திருத்தம் செய்தல்வேண்டும் கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரைக் காணிகளை வர்த்தமானிப் பிரகடனம் செய்தல் வேண்டும். உள்ளிட்டு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் குறித்த வர்த்தமானிப் பிரகடனத்தினை தற்போதைய நிலைமைகளுக்கேற்ப, மக்களதும், பிரதேச, மாவட்ட அரச திணைக்களத் தரப்பினரதும் எனப் பலருடைய ஆலோசனைகளுக்கமைவாக தற்போதைய நிலைமைகளைப் பொறுத்து வெளியிடுவது சிறப்பானதாக இருக்கும்.



பைத்தியம் என்றார்கள் அவனை
பரிகாசம் செய்தார்கள் அவனை
வைத்தியம் செய்ய ஒருவரை
அழைத்து வந்தார்கள்.

"உன் பெயர் என்ன?"
உரத்துக் கேட்டார் வைத்தியர்.
"அமுதா?" என்றான் அவன்.
"பெண் பெயராக இருக்கிறதே
உன் பெயர் உதயன் அல்லவா?"

மீண்டும் அவன் அழுத்திச்
சொன்னான், என் பெயர் அமுதா,
என் பெயர் அமுதா!"
வைத்தியருக்குப் புரிந்துவிட்டது.
"உன் காதலி எங்கே இருக்கிறாள்?"

"இதோ இங்கேதான்
இருக்கிறாள்." "ஓஹோ நீ எங்கே
இருக்கிறாய்?" "நான் எப்போதோ
தொலைந்து போனேன்?"
எப்படித் தொலைந்தாய்?"
"அந்தப் புதிருக்குத்தான் நானும்
விடை தேடிக் கொண்டிருக்கிறேன்"
வைத்தியர் சற்றே யோசித்தார்.

விடையைத் தேடுவது இருக்கட்டும்
முதலில் சிறிது உணவு
உண்ணலாமா? எனக்கு எதற்கு
உணவு? உயிர் வாழ உணவு
வேண்டாமா?, வேண்டாம்
உணவாகவும் என் சுவாசமாகவும்
அவள்தான் இருக்கிறாள்!"

"உன் காதலியை கண்டுபிடிக்கலாம்
முதலில் நீ உன்னைக் கண்டுபிடி!"
என்னைக் கண்டுபிடித்தால்
நான் இறந்து போவேன்
கறந்த பால் முலைக்கேறாது
தொலைந்த மனம் திரும்ப வராது!"

"காதல் அத்தனை புனிதமானதா?"
'புனிதம் மட்டுமல்ல. விடையே
கண்டுபிடிக்க முடியாத கணிதம் அது!"

"கனவு காணீகிறாயா அப்பனே!"
"கண்களை மூடினால்தானே கனவு வரும்
கண்களே அவளாயிருக்க
கனவு எப்படி வரும்?"

"வசீகரமாகப் பேச எங்கே கற்றுக்
கொண்டாய்? நான் பேசுவது
அவள் உதடுகளால்தானே!

"நீ உறங்கி எத்தனை நாள்?
நினைவுகளை வைத்திருக்க மட்டுமே
என் இதயம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.
நாட்களை எண்ணிவைத்திருக்க
இங்கே ஏது இடம்?"

"அவள் நினைவாக என்னைத்
வைத்திருக்கிறாய்? பரிசுகள் தந்தாளா
பத்திரப்படுத்திக் கொள்ள அவளையே
தந்துவிட்டுப் போய்விட்டாள்
வேறென்ன பரிசு வேண்டும்?"

"அமுதாவை அழைத்துவரவா?
அமுதா இங்குதான் இருக்கிறாள்
என்னைத்தான் அழைத்து
வரவேண்டும்!" பைத்தியம் என்கிறார்களே
ஊரார் உன்னை!
பாவம் காதலிக்கத் தெரியாதவர்கள்,
காதலிக்க முடியவில்லையே
என்று வருந்தும் கையாலாகாதவர்கள்!
"காதலுக்கு எதிராக கொடிபிடித்தால்
கண்ணியவான் எனப் பெயரெடுக்கலாம்
என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள்!"
"காதல் இல்லாமல் வாழமுடியாதா?"
சுவாசிக்காமல் எப்படி வாழமுடியும்!"

"அமுதா என்ன அத்தனை அழகியா?
ஆயிரம் அழகிகள் கொண்டுவரவா?
"உங்கள் நாசியால் என்னை
சுவாசிக்கச் சொல்கிறீர்களா?
உருவத்தில் அழகியர் பலர் வரலாம்



# நினைத்தால் - இனிக்கும்!

உள்ளத்தால் அழகி அவள் மட்டுமே!"

"உலகில் அவள் மட்டும்தான்
உயர்ந்தவள் என்றால்
உதைக்க வருவார் பிறபெண்கள்!"
வைத்தியர் எச்சரித்தார்.

"எனக்கு என் தாய் அழகு
முடமானாலும் அவள்தான் பெரிது
உனக்கு உன்தாய் அழகு
எதற்கு இங்கே பொறாமை வருகிறது?"

"தாயும் காதலியும் ஒன்றாக முடியுமா?"
"முடியும்! இதயமுள்ள காதலி
கிடைத்தால்!" "இதயமில்லாத
காதலிகளும் இருக்கிறார்களா
அப்பனே!" இருக்கிறார்கள்.
அதனால்தானே காதலர்கள்
பலர் கண்ணீர்விடுகிறார்கள்!"

"அம்பிகாபதியைப் பற்றி
என்ன நினைக்கிறாய்?"
"புலமை இருந்தளவுக்கு
திறமை இல்லை அவனிடம்"
"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"திறமை இருந்திருந்தால்
அமராவதியைக் கடத்திக் கொண்டு
போய் கல்யாணம் செய்திருப்பான்
கழுமுன்பாக காவு கொடுத்திருப்பானா?"

"தந்தையின் கட்டளையை
மீறமுடியவில்லை!"
"தந்தையைக் கேட்டா காதலை
விதைபோட்டு வளர்த்தான்!"
"அது வாலிப வேகம்!"
"அந்த வேகத்தோடு
இல்லாமல் போய்விட்டதே விவேகம்!"
இல்லையப்பா காதல் என்பதே
வயசுக் கோளாறுதானே.
இல்லை காதல்தான் மனித வரலாறு!

"எப்படிச் சொல்கிறாய்?"
வைத்தியர் புருவம் நெரித்தார்.
குரங்காய் இருந்தவன் உழைப்பைக்
காதலித்தான், மனிதனாகினான்.
பூமியின் செழிப்பைக் கண்டவன்
அதனைக் காதலித்தான்
புதிய தேசமாக்கினான்

பெண்ணைக் கண்டவன்
அவளைக் காதலித்தான்
வாழ்வை வசமாக்கினான்.

"பெண் என்பதே ஒரு புதிர்தானே?"
ஆணுக்குப் பெண் புதிர்
பெண்ணுக்கு ஆண்புதிர்
புதிர் எப்போது விடுபடுவது
புதிரை யார்தான் விடுவிப்பது
விடுவிக்கக்கூடாது
விடுவித்தீர்கள் என்றால்
வாழ்க்கை வசீகரமாக இருக்காது

"உனக்கு வாழ்க்கை வசீகரமாக
இருக்கிறதா? ஆம் நான்
அமுதாவாக மாறிய பின்னால்!"

"உன்னிடம் இருப்பது காதலா?
காமமா?" பூவை நேசிப்பது
காதல் - அந்த பூவுதிரும் இதமாக
தேனெடுக்க நினைப்பதே காமம்!
காதல் இல்லாத காமம் இனிக்காது

புரட்டிப் படித்த நூலை மூடிவைத்தாள்
தேவி "காதல் கதையா?" என்று
காதோரம் கேட்டபடி - அவள்
கன்னத்தில் முத்திரையிட்டான் மாறன்.

"காதலைப் பற்றிய கதை" என்றாள்
அவள் காதைத் தந்தபடி
"நீ படித்துக் கொண்டிருந்தாய்
இப்போது நான் படிக்கவேண்டாமா?
புரட்டவிடு, நூலை - படிக்கவிடு"
என்றான் மயக்கமான குரலில்.

"கள்ளுண்டதுபோல் கண்களில்
என்ன இத்தனை மயக்கம்?"
என்றாள் அவள்
விஷமத்தை ரசித்து.

"கள்ளுண்டால்தான் போதைவரும்
களிப்போடு ஆசைகொண்டால்
உன்னை நினைத்தாலும் போதைவரும்
நேரில் கண்டாலும் போதைவரும்.
உண்ணாமலே களிப்புவரும்.
கள்ளிலும் பெரியது காமம்"
என்றான் கள்ளன் மாறன்.

**"உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு"** அதிகாரம்:129 குறள்:1281




சிந்தியா!

**வட மாகாண மக்களை தன் பக்கம் இழுக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் கொடையாளியாக ஜனாதிபதி மகிந்த மாறியுள்ளதாக முதலமைச்சர் விக்கினேஸ்வரன் கூறுகிறாரே.?**

**ச.அமுதன், கிளிநொச்சி.**

ஜனாதிபதி கொடையாளியாகிவிட்டார். முதலமைச்சர் அதைத் தடுக்கும் தடையாளியாகிவிட்டார். தனது சட்ட அறிவாலும், திறமையாலும் தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி கொடுப்பதையும், தமிழ் மக்கள் அதை மகிழ்ச்சியோடு வாங்குவதையும் தடுக்கமுடியாத தனது இயலாமையையும் மறைப்பதற்காக "ஜனாதிபதி கொடுப்பதை வாங்கிக் கொண்டு தேர்தலில் அவருக்கு எதிராக வாக்களித்து தோற்கடித்துவிடுங்கள்" கூச்சமில்லாமல் ஒரு நகைச்சுவை கூறியிருக்கின்றார்.

அதைப் பார்க்கின்றபோது, 2002ஆம் ஆண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணமாகவும், பொருளாகவும், வேலை வாய்ப்பாகவும் அள்ளிக் கொடுத்தபோது அதை தமது ஆயுத பலத்தால் தடுத்து நிறுத்தமுடியாத புலிகள், தமிழ் மக்களிடம் "அமைச்சர் டக்ளஸ் கொடுப்பதை வாங்கிக்கொள்ளுங்கள். தேர்தலில் அவருக்கு வாக்களிக்காதீர்கள்" என்று கூறியதுதான் ஞாபகம் வருகின்றது.

ஐஐஐஐஐஐஐஐஐஐஐஐஐ

**சிந்தியா! மோடியின் இலங்கைக் கான பயணம் தடைப்பட்டதற்கான காரணம் என்ன?**

**எவ்.எவ்.அஜ்மல், காலி.**

இந்தியப் பிரதமர் மோடி இலங்கைக்கு வருகை தருவார் என்று கூறப்பட்டது. ஆனால் திகதி இன்னும் உறுதிப்படுத்தப் படவில்லையே. அது ஒரு பக்கமிருக்கட்டும். உங்களுடைய அரசியல் ஆர்வத்தைப் பார்த்தால் புல்லரிப்பாக இருக்கின்றது.

மோடியின் பயண நிகழ்ச்சி நிரலையெல்லாம் அவதானிக்கத் தொடங்கியுள்ளீர்களே. ஆர்வம் ஓவராகாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

ஐஐஐஐஐஐஐஐஐஐஐஐஐ

**ஐரோப்பிய ஒன்றியம் ஆசிய நாடுகளுக்கு புலிகள் மீதான தடை நீக்கியுள்ளதே சிந்தியா!**

**ப.சிவநேசன், அம்பாறை.**

அது பெரிய நகைச்சுவை. கடந்த ஐந்து ஆண்டுகளில் புலிகள் யாரையும் கொலை செய்யவில்லையாம். ஒரு குண்டு வெடிப்பையும் நிகழ்த்தவில்லையாம். அதை ஆராய்ந்துதானாம் இந்த முடிவுக்கு, இந்தத் தீர்வுக்கு அவர்கள் வந்தார்களாம். பாவம் புலிகள் துப்பாக்கிகளை தூர வீசிவிட்டு பஜனை பாடிக்கொண்டு இருக்கின்றார்கள் என்றவிதமாக அந்தச் செய்தி கூறுகிறது.

"யாருமில்லாத இடத்தில யாருக்கடா டீ ஊத்திற, உன்னுடைய கடமை உணர்ச்சிக்கு ஒரு அளவே இல்லையாடா" என்று விவேக் கேட்பதுதான் ஞாபகம் வருகின்றது.

ஐஐஐஐஐஐஐஐஐஐஐஐஐ

**சிந்தியா! ஜெயலலிதா பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளது உலகத் தமிழ் மக்களுக்கு கொண்டாட்டமே...?**

**எம்.சாமிலி, சுண்டுக்குளி.**

ஜெயலலிதா மோசடி செய்தார், அவர் குற்றவாளி என்று இந்தியச் சட்டம் வெளிப்படையாக கூறியுள்ளது. ஜெயலலிதாவும் அதை ஏற்றுக்கொண்டு சிறைக்குச் சென்று தற்போது நிபந்தனைப் பிணையில் வெளியே வந்திருக்கின்றார்.

அதற்கு மு...னா..பு...னா... வாத்தி முட்டாள் புண்ணாக்கு என்று யாரும் தப்பாக கூறக்கூடாது. அவர் முன்னாள் புலி வாத்தி என்றுதான் சொல்லவேண்டும். அவர் உலக தமிழர்கள் சார்பில் ஜெயாவிற்கு கடிதம் எழுதியிருக்கின்றார் என்று தமிழ் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

அவருக்கு கூட்டமைப்பு சார்பிலேயே கடிதம் எழுத அருகதை இல்லை. உலகத் தமிழர்கள் சார்பில் கடிதம் எழுதியுள்ளாராம். வெப்சைட் வாத்தியார் ஜெயாவை தாஜா பண்ண அவசரப்படுவது எதற்கு என்று பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

ஐஐஐஐஐஐஐஐஐஐஐஐஐ

**என்ன சிந்தியா! பாப்பரசரின் விஜயம் தடைப்படும்போல் தெரிகிறதே?**

**அ.மதன், மடு.**

ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல் முடிந்தவுடன் பாப்பரசர் இலங்கை வருவார் என்று தற்போதுவரை செய்திகள் உறுதிப்படுத்தியுள்ளதே. ஒருவர் மோடியின் பயணம் தொடர்பாக கேட்கிறார். நீங்கள் பாப்பரசரின் பயணம் தொடர்பாக கேட்கின்றீர்கள். ஆச்சரியமாக இருக்கின்றது.

ஐஐஐஐஐஐஐஐஐஐஐஐஐ

**சிந்தியா! எங்களுக்குள் அமைதி இருக்கவேண்டுமெனில் எம்மைச் சூழ்ந்துள்ளவர்களும் அமைதியாக இருக்கவேண்டுமென ஞானிகள் கூறுகிறார்களே...?**

**ம.ஜெனிற்றா, வவுனியா.**

அதுதான் உண்மை. தனிமையில் அமைதியைத் தேடினால் அது தூரமாகிக் கொண்டே போகும். நமது சுற்றத்திலும், சுற்றி இருப்பவர்கள் மத்தியிலும் அமைதியை ஏற்படுத்தினால் நாம் தேடும் அமைதி தானாகவே வந்துவிடும்.

ஐஐஐஐஐஐஐஐஐஐஐஐஐ

**சிந்தியா! இப்பொழுதெல்லாம் அநியாயம் நியாயத்தை வெல்கிறதே...?**

**தா.நிட்ர்சியா, கொழும்பு -06**

இறுதியில் நியாயம் வெல்லும். பொறுத்திருங்கள்.

ஐஐஐஐஐஐஐஐஐஐஐஐஐ

**அண்மையில் இடம்பெற்ற அரசியல் ஜோக் ஒன்று கூறுங்கள் சிந்தியா?**

ஏந்த மேடையில் எப்போது மயங்கி விழுவாரோ என்று சுற்றி இருப்பவர்கள் அச்சத்தோடு பார்த்துக் கொண்டிருக்கும் மாவை, தனது உயிரைப் பணயும் வைத்து போராடப்போவதாக கூறியதையும், பிரபாகரனின் தாயாருக்கு கொள்ளி வைத்ததால் பிரபாகரனுக்கு மச்சான் என்று வாக்குப்பிச்சை எடுத்து மாகாண சபைக்கு வந்த சிவாஜி, இன அழிப்பு என்று மாகாண சபை ஏற்காவிட்டால் தனது பதவியை துறக்கவும் தயார் என்று கூறியதையும், அரசியலில் தான் கத்துக்குட்டி என்று முதலமைச்சரானவர், தன்னை வைக்கோலை காவல் காக்கும் நாய் என்று கூறியதையும் கேட்கும்போது சிரிக்காமல் என்ன செய்வதாம்.

ஐஐஐஐஐஐஐஐஐஐஐஐஐ

**சிந்தியா! கோபப்படாத மனிதர்கள் இருக்கிறார்களா?**

**எம்.நுஸ்ரா, புத்தளம்.**

நான் அறிந்தவரையில் கோபப்படாத மனிதர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் கோபத்தை அடக்கியாளத் தெரிந்த எத்தனையோ மனிதர்களை என் வாழ்க்கைப் பயணத்தில் கடந்து சென்று கொண்டிருக்கிறேன்.

# காதிலை பூ கந்தசாமி

"நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை!"

**களம் பலகண்ட முன்னணிப் படை யணிகளில் ஒன்றான அறப்போர் படையணியின் சிறப்புத்தளபதி பிரிகேடியர் மாவை அம்மானின் தலைமையில் களமுனை ஒன்று மிக விரைவில் திறக்கப்பட இருப்பது யாவரும் அறிந்ததே. குறித்த போருக்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று இரகசிய இடம் ஒன்றில் பிரிகேடியர் மாவை அம்மானின் தலைமையில் இடம்பெற்றது. கள முனைத் தளபதிகள் அனைவரும் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் மாவை அம்மானின் உரை பங்குபற்றிய தளபதி களில் ஒருவரின் கையடக்கத் தொலை பேசியில் ஒலிப்பதிவாகி பல கரங்கள் மாறி எம் கரம் சேர்ந்திருக்கின்றது.**

**அது இங்கே முழுமையாகப் பிரசுரிக்கப்படுகின்றது. ஒலிவடிவில் கிடைத்த உரையை எழுத்துவடிவ மாக்கியவர் எமது ஆஸ்தான செய்தி யாளர் காதிலை பூ கந்தசாமி.**

**இதோ அந்த உரை.**

எல்லோருக்கும் வணக்கம். நாங்கள் இன்று ஒரு முக்கியமான விடயம் தொடர்பிலே ஆராய்வதற்கு இங்கே கூடியிருக்கின்றோம். அது என்ன என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். ஐரோப்பிய நாட்டிலும் கிழக்கு மாநிலத்திலும் கூறியது போன்று மிகப் பாரியளவில் அறப்போர் ஒன்றை நடாத்தவேண்டிய அவசியம் என்று உணரப்படும் என்ற நிலையிலேதான் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

ஆனால் எமது இந்த தந்திரோபாய நகர்வை புரிந்துகொள்ளாத எதிர்க்கட்சி கள் எமது இந்தப் போரைப் பற்றி எள்ளிநகையாடுவதை ஊடகங்களின் வாயிலாக அறியக்கூடியதாக இருக்கின்றது.

ஆனால், எம்மைப் பொறுத்தவரையில் இறுதிய காலகட்டத்தில் இவ்வாறான போர் ஒன்று நாம் நடாத்த தவறு வோமாக இருந்தால் எதிர்வரும் மாதங்களில் பாரிய பின்னடைவுகளைச் சந்திக்கவேண்டி ஏற்படும். இப்பொழுது முன்னர் போன்று நாங்கள் கூறுவதை எல்லோரும் கேட்பதற்கு மக்கள் தயாராக இல்லை. அரசியலிலே உள்ள சூட்சுமங்களைக் கிரகிக்கும் ஆற்றல் மிக்கவர்களாக மாறியிருக்கின்றார்கள். எங்களுடைய அண்மைக்கால செயற்பாடுகள் மக்களை மிகவும் பாதித்திருக்கின்றது. அண்மையில் நடந்துமுடிந்த தேர்தலில் சாணக்கியன் என்று முகவரியிட்டு மக்கள் முன் நிறுத்திய ஒருவர் இன்று சாபக்கேடு என்று மக்கள் நினைக்கும் அளவிற்கு செயற்படுக்கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

உதாரணத்துக்குச் சொல்லுவோமானால், அண்மையில் வடக்கிற்கு விஜயம் செய்த நாட்டின் தலைவர் அவர்கள் எமது செயற்பாடுகளை வைக்கோல் பட்டறை நாய்க்கு ஒப்பானது என்று விமர்சித்திருந்தார்.

அதற்குப் பதிலளித்த நம்மவர் வைக் கோல் பட்டறையை எரித்ததால்தான் ஐ.நாவில் பிரச்சினை வருகின்றது என்று ஏதோ எல்லாம் உளறியிருக்கின்றார். அப்படியானால் நாம் வைக்கோல் பட்டறை நாய்க்கு ஒப்பானது என்று விமர்சிக்கப்பட்டதை சரி என ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதுதானே அர்த்தம்.

இப்படி இவர் மட்டுமல்ல! ஒவ்வொரு வரும் போடுகின்ற ஆட்டங்கள் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்ற அவப்பெயரை நீக்கவேண்டிய தேவை ஒன்று பொறுப்பு வாய்ந்த எனக்கு உள்ளது. அந்தவகையில்தான் இந்த போராட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. இதனூடாக இரண்டு இலக்குகளை எட்ட முடியும் என நம்புகின்றேன்.

முதலாவது, நாங்கள் (கூட்டமைப்பினர்) இன்றும் மரத்தமிழர்களாகத்தான் இருக்கின்றேன். சொரி... சொரி... மறத் தமிழர்களாக இருக்கிறோம் என்ற நம்பிக்கையை "மக்களுக்கு ஏற்படுத்துவது.

இரண்டாவது, இலங்கை அரச இயந்திரம் இன்றும் எங்களுடைய சாத்வீகமான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. எங்கள் கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடு வதற்கான சூழல் இல்லை. அரச இயந்திரங்கள் ஊடாக இப்பொழுதும் அடக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றோம் என்ற பிரமையை உண்டு பண்ணி அதனூடாக மக்களுக்கு அரசின்மீதான வெறுப்பை ஏற்படுத்துவது.

இந்த இரண்டு இலக்குகளும் கணிச மான வெற்றியை அடையுமானால் எதிர்வரும் தேர்தல் காலங்கள் பகட்டான சாகுபடிக் காலங்களாக இருக்கும்.

எமது அறப்போராட்டத்தின் நகர்வுகள் மேற்சொன்ன இலக்குகளை அடையத் தவறுமாக இருந்தால் எங்களுடைய எதிர்காலமே கேள்விக்குறியாகும் என்பதை நாம் ஒவ்வொருவரும் மனதில்வைத்து போராட்டங்களில் உணர்வுபூர்வமாக உணர்ந்துகொள்ள வேண்டும்.

அவை அரச இயந்திரங்களை ஆத்திரப்பட வைக்கும் வகையிலும் போராட்டத்துக்கு எதிராக அவர்கள் சட்ட நடவடிக்கைகளில் இறங்கும் கையிலும் திட்டமிடல் அமையுமாயின் எமது இலக்குநோக்கிய பயணம் இலகுபடுத்தப்படவேண்டும் என்பதை ஒவ்வொரு தளபதிகளும் மனதில் வைத்து செயற்படவேண்டும்.

**வீழ்வது தமிழனாக இருந்தாலும் வாழப்போவது கூட்டமைப்பின் தமிழர்களாக இருக்கட்டும்.**

(கையை உயர்த்தி முழங்குகிறார்)

**"யாவும் கலப்படமற்ற கற்பனை"**

# முதன் முதலில் பறந்தவர்கள்

**வரலாறு படைத்த வல்லுநனர்கள்**



வில்பர் விமானத்தில் ஏறி குப்புறப் படுத்துக்கொண்டு அதைக் கிளப்பினார். தோல்வி. மோட்டார் சத்தமிட்டதே தவிர பிளேயர் நகரவே இல்லை. ஆனாலும் சகோதரர்கள் இடிந்து போய்விடவில்லை. இத்தனை வருஷங்களில் இப்படி எத்தனையோ தோல்விகளைக் கண்டவர் களாயிற்றே. கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு ஒரு வாரம் முன்பு, டிசம்பர் பதினேழாம் திகதி மறுபடியும் நாள் குறிக்கப்பட்டது. யந்திரம் இயங்காததற்கான காரணங்களை அறிந்து, அதைச் சரி செய்திருந்தார்கள். அந்த ஏழு பேரும் பிளேயரை அதன் ஷெட்டிலிருந்து நகர்த்தி வந்து வெளியில் நிறுத்தினார்கள். மறுபடி நாணயம் சுண்டப்பட்டது. இந்தத் தடவை ஆர்வில்லுக்கு அடித்தது யோகம்.

வானம் மூட்டம் போட்டிருந்தது. ஊதல் காற்று உடலை நடுங்க வைத்துக் கொண்டிருந்தது. ரைட் சகோதரர்களைத் தவிர மற்ற ஐந்து பேரும் கைகளைத் தேய்த்துக் கொண்டும் கால்களைத் தரையில் மாற்றி மாற்றி உதைத்து நர்த்தனமாடியும் உடலில் கதகதப்புக்கு வழி செய்துகொண்டிருந்தார்கள். ஆனால் அத்தனை குளிரி லும் விமானத்தை ஓட்டப்போகும் ஆர்வில் ஒரு சாதாரண ஓவர் கோட்டுக்கூட அணிந்திருக்கவில்லை. ஏன்? அதனால் விமானத்தில் எடை கூடிவிடுமே என்றுதான்.

(தொடரும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(23.10.2014 தொடக்கம் 29.10.2014 வரை)

## மேடம்

கண்களில் கவனமுடன் இருக்க வும். பொருளாதாரத்தில் இருந்துவந்த நெருக்கடிகள் மாறி ஓரளவு முன்னேற்றம் காணப் படும். தேவையற்ற மனச்சஞ்சலம் தவிர்த்தல் நல்லதாகும். வீடு மற்றும் வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்காகப் புதிய கடன்களை வாங்க முயற்சிப்பீர்கள். உத்தியோகத்தில் வெகுகாலமாக எதிர்பார்த்து இருந்த பதவி உயர்வுகள் மற்றும் சம்பள உயர்வுகள் கிடைக்கக்கூடிய காலமாகும். உத்தியோகத் துறையினர்கள் மேலதிகாரிகளிடம் மிகுந்த கவனமுடன் பணியாற்றுதல் நல்லது. புதிய ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் வாங்குவதன் மூலம் பொருட்செலவுகள் உண்டாகலாம். உடல் நிலையில் உஷ்ண சம்பந்தமாகிய பிணிகள் வந்து போகலாம்.

## இடபம்

உத்தியோகத்தில் பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றம் ஏற்படலாம். கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். வீடுகளைத் திருத்திக் கட்டுவதற்கான முயற்சி களில் ஈடுபடுவீர்கள். உடம்பில் வாயு வாதம் போன்ற தொல்லைகள் வந்துநீங்கும். புதிய வீடு, வாகனங்கள் வாங்குவதற்காக வங்கிகள் மூலம் எதிர்பார்த்து இருந்த கடன்தொகைகள் கிடைக்கும். பயணங்களின்போது வாகனங்களில் எச்சரிக்கையுடன் சென்றுவருதல் உகந்ததாகும். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர எண்ணுவீர்கள். காணாமற்போன பொருட்கள் காவல்துறையினர்களால் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## மிதுனம்

கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். குடும்பத்தில் காரணமற்ற மனக்குழப்பங்களும் மற்றும் கடன் தொல்லைகளும் ஏற்படலாம். வங்கிகள்மூலம் எதிர் பார்த்து இருந்த கடன்தொகைகள் கிடைக்கும். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர வாய்ப்பு உள்ள காலமாகும். குடும்பத்தில் தடைப்பட்டு இருந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெறக்கூடிய காலமாகும். உற்றார், உறவினர்களின் வரவுகளால் மனமகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாகும். தீர்த்த யாத்திரைகள் சென்றுவர முயற்சிப்பீர்கள். பழைய கடன்கள் அடைத்துப் புதிய கடன் வாங்குவீர்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## கடகம்

உற்றார், உறவினர்களின் வரவால் மனமகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டா கும். சுப காரிய சம்பந்தமான முயற்சிகளில் ஈடுபட வாய்ப்பு உள்ளது. காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேரும். நாட்பட்ட தீராத வியாதிகள் தீரவேண்டி புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடுவதன்மூலம் பொருட்செலவுகள் உண்டாகலாம். அநாதைச் சிறுவர்கள் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான பணிகளில் ஈடுபட்டு நற்பெயர் எடுப்பீர்கள். பொது நலத் தொண்டுகளில் ஈடுபட்டு நற்பெயரும், மன நிம்மதியும் அடைவீர்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## சிங்கம்

வெகுநாட்களாகத் தடைப்பட்டு வந்த திருமண காரியங்கள் நிறைவேற வாய்ப்பு உள்ள காலமாகும். நாட்பட்ட வராத கடன்கொடுத்து இருந்த பணம் திரும்ப கைக்கு வந்துசேரும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத ஆதாயங்கள் உண்டாகும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் ஆதாயம் உண்டு. குலதெய்வ வழிபாடு செய்துவருவீர்கள். கணவன் - மனைவி உறவுகளில் சற்று எச்சரிக்கையுடன் முன்கோபத்தை தவிர்த்து இருப்பது நல்லதாகும். சூதாட்டங்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்கள் ஏமாற்றம் அடையாமல் இருக்கவும். நண்பர்களின் சுபகாரிய விசயங்களுக்காக நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள்.

## கன்னி

நண்பர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். புதிய ஆடை அணிகலன்களை வாங்குவதற்காகப் புதிய கடன்களை வாங்க முயற்சிப்பீர்கள். ஆதரவற்ற ஏழைகளுக்கு உதவுவதின் மூலம் மனநிம்மதியும் பொதுமக்களின் பாராட்டுக்களையும் பெறுவீர்கள். கணவன் - மனைவி உறவுகளில் சிற்சில கருத்து வேறுபாடுகள் வந்துவிலகும். குடும்பத்தில் தடைப்பட்டுவந்த சகோதர சகோதரிகளின் திருமண காரியங்கள் நிறைவேறும். லொட்டரி போன்ற விசயங்களின் மூலமாகத் திடீர் தனவரவு உண்டாகலாம். குலதெய்வ வழிபாடு செய்துவர முயற்சிப்பீர்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## துலாம்

வெளிநாட்டில் வசிப்பவர்கள் வெகு காலமாக விட்டுப்போன குலதெய்வ வழிபாடு செய்வதற்கும் வாய்ப்புகள் உள்ளது. கணவன் - மனைவியின் உறவுகள் சமாராகக் காணப்படும். வரவேண்டிய கடன்கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். காதல் சம்பந்தமாக நல்ல செய்தி வந்துசேரும். செய்யாத குற்றங்களுக்காகப் பழிச்சொல் ஏற்பட இருப்பதால் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்படுவது நல்லது. குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் சற்று குறை யும். தாய்நாடு சென்று திரும்புவதற்கும் வாய்ப்பு உள்ளது. பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## விருச்சிகம்

தாயின் உடல்நிலையில் இருந்துவந்த தொல்லைகள் குறைந்து காணப்படும். பழுதுபட்ட வீடு மற்றும் வாகனங்களை புதுப் பிப்பதன் மூலம் பொருட்செலவுகள் வந்து சேரும். உடம்பில் நரம்பு மற்றும் எலும்புகள் போன்ற உபாதைகள் வந்துபோகும். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களை கடன்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெற வாய்ப்பு உள்ளது. மாணவர்கள் கல்வியில் பரிசு மற்றம் பாராட்டுக்களை பெறுவார்கள் மற்றவர்களை நம்பிப் பணம், பொருட்கள் கடன்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## தனுசு

தேவையற்ற புதிய நண்பர்களின் சேர்க்கையால் மனநிம்மதி குறை-றயலாம். பொதுநலத் தொண்டுகளில் ஈடுபட்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். குழந்தைகளுக்காகத் திடீர் மருத்துவச் செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கல்வித் துறை ஆசிரியர்கள் இவற்றில் பணி புரிவோர்கள், மாணவர்கள் கல்வியில் சில தடைகள் வந்துவிலகும். ஒரு சிலருக்குப் புதிய வீடு மாற்றம் ஏற்படலாம். வெளிந-ாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் நல்ல தகவல்களை எதிர்பார்க்கலாம். தொலைதூரப் பயணங்கள்மூலம் எதிர்பார்த்து இருந்தவர்களை சந்தித்து அவர்களால் ஆதாயம் அடைவீர்கள். அரசியல்வாதிகளால் ஆதாயம் இல்லை. பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## மகரம்

கணவன் - மனைவி உறவு-களில் இருந்துவந்த மனக்கசப்புகள் தீர்ந்து ஒற்றுமை உண்டாகும். வங்கிகளில் இருந்து நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் கை வந்துசேரும். மற்றவர்களின் காரியங்களில் அநாவசியமாகத் தலையிட்டு மனநிம்மதியை இழக்காதீர்கள். விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் ஒன்றுசேர வாய்ப்பு உள்ள காலமாகும். அண்டை அயலார்களிடம் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லது. குலதெய்வ ஆலய வழிபாடு செய்து வரப்போட்ட எண்ணங்கள் நிறைவேறும் கால மாகும். புதிய கடன்வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## கும்பம்

குடும்பத்தில் தடைப்பட்ட திருமண காரியங்களில் நண்பர்களின் உதவியால் நடைபெறலாம். தேவையற்ற மனச்சஞ்சலம் தவிர்த்து ஆலயங்களுக்குச் சென்றுவருவது நல்லது. பிள்ளைகளால் பொருட்செலவுகளும் மனநிம்மதியும் குறைய இருப்பதால் மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் நல்லது. தந்தைக்கு ஏற்பட்டுவந்த மருத்துவச் செலவுகள் சற்றுக் குறைவதற்கு வாய்ப்பு உள்ளது நாட்பட்ட வரவேண்டிய பணம் கைக்கு வந்துசேரும். புதிய நண்பர்களின் வீண் பிரச்சினைகள் ஏற்படலாம். வீட்டில் கவனமுடன் இருந்தால் திருடுபோவ தைத் தவிர்க்கலாம். உற்றார், உறவினர்களால் ஆதாயம் இல்லை. காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லது.

## மீனம்

உடம்பில் வாயு மற்றும் வாத சம்பந்தமான பிணிகள் வந்துபோகலாம். பெண்களால் தென்கிழக்குத் திசையில் இருந்து எதிர்பாராத தனவரத்து உண்டாகும். நண்பர் களால் எதிர்பாராத பொருட்செலவுகளும் மன நிம்மதிக் குறைவும் ஏற்படலாம். தாயின் உடல் நிலை பாதிப்புக்களால் ஏற்பட்டுவந்த மருத்துவச் செலவுகள் சற்றுக்குறைய வாய்ப்பு உள்ளது. நீண்டகாலமாக வரவேண்டிய பணம் கை வந்துசேரும் காலமாகும். வெகுகாலமாகக் காணாமற்போன பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்ப கிடைக்கும். தந்தை - மகன் உறவில் சுமூகமான சூழல் உருவாகும். உற்றார் உறவினர்களால் ஆதாயம் இல்லை.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)








தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியிலிருந்து தேசிய மட்ட மெய்வல்லுனர் போட்டியில் J.அனித்தா கோலூன்றிப்பாய்தலில் முதலாம் இடத்தைப் பெற்று சாதனையை நிலைநாட்டியுள்ளார்.





## தங்க நடை

சீன நாட்டில் உள்ள ஒரு மாலில் சுமார் $32 மில்லியன் மதிப்புள்ள தங்கத்தினாலான நடைபாதையை அமைத்து சாதனை செய்துள்ளனர். இந்த பாதையின்மீது நடந்து செல்வதற்காக இந்த மாலிற்கு பொதுமக்கள் கூட்டம் கூட்டமாக வந்துசெல்கின்றனர்.

சீன நாட்டில் உள்ள Yichang என்ற பகுதியில் உள்ள மால் ஒன்றில் $32 மில்லியன் மதிப்புள்ள தங்கக்கட்டிகளைக் கொண்டு நடைபாதை அமைத்து அதன்மீது கடினவகை கண்ணாடியைப் போட்டுவைத்துள்ளனர்.

இந்த கண்ணாடியின்மீது நடந்துசென்றால் தங்கத்தின்மீது நடந்துசெல்வது போன்ற உணர்வு இருக்குமாம். மேலும் இந்த பாதையில் நடந்துசென்றால் நல்ல யோகம்வரும் என சீன மக்கள் நம்புகின்றனர்.

## முதல் சாதனை





உலக அழகி போட்டிக்கு அடுத்த படியாக வருடா வருடம் நடத்தப்படும் போட்டி உலக இளவரசி போட்டி. இந்த வருடத்திற்கான போட்டியில் 40 நாடுகளை சேர்ந்த அழகிகள் போட்டிக் களத்தில் உள்ளனர். இதில் கனடாவில் வசிக்கும் ஈழத்தை பூர்வீகமாகக் கொண்ட 'அபிஷேகா ல்லயோட்சன்' (Abissheka Lloydson) என்ற பெண்ணும் அடங்குவார். முதல் முறையாக ஒரு தமிழ் பெண் உலக அளவிலான பட்டத்தை வெல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

போட்டியில் எல்லா சுற்றுகளும் முடிந்துவிட்ட நிலையில், இறுதி சுற்றாக மக்களிடம் யாரை தேர்ந்தெடுப்பது என இணையம்மூலம் வாக்கு நடைபெற்று வருகின்றது.

இதில் தனக்கு வாக்களிக்கவேண்டும் என உலக தமிழர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளார் அபிஷேகா ல்லயோட்சன். இவர் ஏற்கனவே இளம் வயதினருக்கான மிஸ் கனடா பட்டத்தை வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



இப்பத்திரிகை 373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி என்டபிரைஸஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஒக்டோபர் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 06 வியாழக்கிழமை (23.10.2014) பக்கங்கள் IV ஓசை – 023



தீபாவளித் திருநாளை முன்னிட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆசி வேண்டி சிறப்பு வழிபாட்டு நிகழ்வுகள் நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்றதையும், அருகில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வாழ்த்து தெரிவித்து அருகில் நிற்பதையும் காணலாம்.

## க.பொ.த. சாதாரண தர பரீட்சை டிசம்பர் மாதம் 9 முதல் 18 வரை

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை, இவ்வருடம் டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடைபெறும் என்று பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம்.என். புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இம்முறை பரீட்சைக்கு 5 இலட்சத்து 77 ஆயிரத்து 84 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர் என்றும், பரீட்சை நேர அட்டவணையில் இனி எவ்வித மாற்றமும் ஏற்படுத்தப்படாது எனவும் அவர் மேலும் கூறினார்.

## 2015-பட்ஜெட் ஏற்பாடு பூர்த்தி நாடாளுமன்றில் நாளை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

2015 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை நிறைவு செய்யும் பணியில் நிதியமைச்சரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நேற்றுக்காலை அலரி மாளிகையில் ஈடுபட்டதாக, ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இப் பணிகளில் நிதியமைச்சின் செயலர் பி.பீ.ஜயசுந்தரவும் இணைந்து செயற்பட்டார். அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாளை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளார்.

# இரு குழுக்களாக உடையும் வடமாகாண சபை

(யாழ்ப்பாணம்)

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், வட மாகாண சபை உறுப்பினர்களுக்குமிடையே உட்கட்சிப் பூசல், கருத்து மோதல், வாதங்கள் வலுத்துள்ளதால் வடக்கு மாகாண சபை ஆளும் தரப்பு இரு குழுவாகப் பிரியும் நிலை தோன்றியுள்ளது.

· யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொழும்பு ஊடகவியலாளர் சந்திப்பில் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயமாக தெரியவருவதாவது,

அண்மைக்காலத்தில் வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிருப்திக் குழு கூட்டமைப்பு உறுப்பினர்கள் தமது

(IV) ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை அகதி இந்தியாவில் பலி

இந்தியாவின் ஓசூரில் மின்சாரம் தாக்கி, இலங்கை அகதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஓசூரை அடுத்த கெலவரப்பள்ளி அணை அருகே உள்ள, இலங்கை அகதிகள் முகாமில் வசித்து வரும் ஜோட்ச் (வயது-39) என்பவரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

பாகலூர் சாலையில் உள்ள, விஸ்வநாதபுரம் பகுதி விவசாய தோட்டத்தில், இயந்திரம் மூலம் புற்களை வெட்டிக் கொண்டிருந்தார். அப்போது, ஜோட்ச் மீது,

(IV) ஆம் பக்கம் பார்க்க

## மனித உரிமைகள் அமைப்பின் கோரிக்கை நிராகரிக்கப்படலாம்-விக்கி தெரிவிப்பு

### இதுவரை பிரதமர் மோடி முதல்வரை அழைக்கவில்லை



வடக்கு மாகாண முதலமைச்சரை இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனினும் இந்தியா செல்வது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நடைபெறவுள்ள சொற்பொழிவு ஒன்றிற்கு வருகை தருமாறு மனித உரிமை அமைப்பு ஒன்று கடந்த வாரம் அழைப்பு விடுத்துள்ளது.

எனினும், இந்தியா செல்வது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை என்று முதலமைச்சர்

(IV) ஆம் பக்கம் பார்க்க

## வைத்தியசாலையின் தரத்தை உயர்த்த பணிப்புரை விடுத்தார் அமைச்சர் டக்ளஸ்

### வாழ்வாதார விடயம் குறித்தும் கலந்துரையாடினார்

புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலையின் தரத்தை மேம்படுத்துவது மற்றும் குடிநீர் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது உள்ளிட்ட மக்களின் தேவைப்பாடுகள் தொடர்பில் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொது மக்களின் தேவைப்பாடுகள் தொடர்பிலான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மக்களின் தேவைப்பாடுகள் தொடர்பில் அமைச்சர் விசேட கவனம் செலுத்தியிருந்தார்.

இதில் புதுக்குடியிருப்பில் இருந்து விசுவமடு வரையிலான பகுதிகளில் அரச வங்கிகள் இல்லாத நிலையில் தாம் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்குவதாக மக்கள் அமைச்சரின் விசேட கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

(IV) ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் இராணுவத் தளபதி ரணிலை ஆதரிக்க முடிவு?

### அனோமா தாக்குப்பிடிக்க மாட்டாராம்

(கொழும்பு)

ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்க முடிவு செய்துள்ளார்.

முன்னதாக சரத் பொன்சேகா வின் குடியுரிமை பறிக்கப்பட்டு, வாக்குரிமை மறுக்கப்பட்டுள்ள விடயத்தை அனுதாப அலையாக மாற்றி, அனோமா பொன்சேகாவை களமிறக்க திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக அரசாங்கம் தீவிரமாக முன்னெடுத்து வரும் நிலையில் அனோமா பொன்சேகா தாக்குப் பிடிப்பது சாத்தியமில்லை என்பது சரத் பொன்சேகாவின் கட்சி முக்கியஸ்தர்

(IV) ஆம் பக்கம் பார்க்க

## இளவாலையில் மூதாட்டி சடலமாக நேற்று மீட்பு

### வெட்டுக் காயங்களும் காணப்பட்டன

(யாழ்ப்பாணம்)

வீட்டில் தனியாக இருந்த 75 வயது மூதாட்டி நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.

இளவாலை, பத்னாவத்தையைச் சேர்ந்த இராஜநாயகம் இராஜேஸ்வரி (வயது-75) என்ற மூதாட்டியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டில் தனியாக இருந்த மூதாட்டி சடலமாக இருப்பதாக

(IV) ஆம் பக்கம் பார்க்க

கிளிநொச்சி மாவட்டத்தில்

# விசேட நிதி ஒதுக்கீட்டு பணிகளை துரிதமாக செயற்படுத்த பணிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வறட்சி கால அனர்த்தத்தை தவிர்க்கும் 60 மில்லியன் ரூபா வேலைத்திட்டம் மற்றும் 100 மில்லியன் ரூபாவின் கீழான கிராமத்திற்கான திட்டம் மற்றும் பல முன்னோடித் திட்டங்களை துரிதமாக செயற்படுத்துமாறு ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் பணிப்புரை விடுத்துள்ளார்.

வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் குறித்து ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தலைமையில் கலந்துரையாடல் மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

நூறு மில்லியன் ரூபா மற்றும் 25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வாழ்வாதார மற்றும் உட்கட்டுமான பணிகளின் தற்போதைய முன்னேற்றம் குறித்து ஆராயப்பட்டதோடு, வறட்சி கால அனர்த்தங்களை தவிர்க்கும் வகையில் நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட 50 மில்லியன் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட 10 மில்லியன் ரூபா நிதிகளுக்கான பணிகள் குறித்தும் ஆராயப்பட்டன.

இக்கலந்துரையாடலின் போது எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் மேற்படி நிதி ஒதுக்கீட்டின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளை துரிதப்படுத்தி மேற்கொண்டு நிறைவுசெய்ய வேண்டும் எனவும் அதற்கான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் உரிய அதிகாரிகள் உள்ளிட்ட அனைவருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இக்கலந்துரையாடலின் போது கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், மாவட்ட திட்டப்பணிப்பாளர் மோகனபவன், உதவி திட்டப் பணிப்பாளர்களான கேதீஸ்வரன், கௌரிதாசன், கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், பூநகரி பிரதேச செயலர் சத்தியசீலன், கண்டாவளை பிரதேச செயலர் முகுந்தன், மற்றும் பல அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# இடமாற்றம் வழங்கப்படவேண்டும்; பாதிக்கப்பட்ட அலுவலர்கள் கோரிக்கை

தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உதவியாளர்கள் ஆகிய நாம் தொடர்ந்து 7 வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாக தீவக உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றியுள்ளோம். எமக்கு இடமாற்றம் வழங்க வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் மாகாண பொது நிர்வாக பிரதி பிரதம செயலாளர் முன்வரவேண்டும் என நீண்டகாலம் இடமாற்றமின்றி சேவையில் உள்ள அலுவலர்கள் கேட்டுள்ளனர்.

தீவகத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் பணியாற்றும் அபிவிருத்தி உதவியாளர்கள், தொழில் நுட்ப அலுவலர்கள் ஆகிய நாம் தொடர்ச்சியாக 7 வருடங்களுக்கு மேல் பணியாற்றிவிட்டோம். கடந்த வருடம் இடமாற்ற திட்டம் வந்தபோதும், இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே இவ்வருட இறுதியிலாவது வருடாந்த இடமாற்ற திட்டத்தை அமுல்படுத்துமாறு வடக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினை கேட்டுள்ளதாக பாதிக் கப்பட்டோர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடந்த வருடம் மாகாண பொதுநிர்வாக செயலகத்தினது இடமாற்ற உத்தரவு இதுவரை நடைமுறைக்கு வரவில்லையென வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செய்திகள் தெரிவிக்கின்றன.

# யாழ்.படைத்தலைமையகத்தின் தீபாவளி இசைமாலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் 'தீபாவளி இசை மாலை' நிகழ்ச்சி நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் சனிக்கிழமை சனிக்கிழமை மாலை 7 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இவ்இசை நிகழ்ச்சி இடம்பெறவுள்ளதாகவும், இதற்கு அனைவரையும் அழைப்பதாகவும் யாழ். படைத்தலைமையகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)



வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஆறாம் கட்டம், வேலணை பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஜே/14 கிராம சேவகர் பிரிவில் அண்மையில் இடம்பெற்றது. ஜே/14 வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.தவரூபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வேலணை பிரதேச சபையின் உப தவிசாளர் சி.கார்த்திகேசு மங்கள விளக்கேற்றுவதனையும், வேலணை பிரதேச சபை தவிசாளரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை பிரதேச அமைப்பாளருமான சி.சிவராசா (போல்) பயனாளி ஒருவருக்கு தென்னம் கன்று வழங்குவதனையும் காணலாம். (21)


சிறு விளம்பரம்

டயானா பிளாஸ்ரிக்

றீசைக்கிளி (மீள் சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108 பலாலி வீதி
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி சந்தி அருகாமை)
021 222 8680,
077 592 5088.
(C/3800)


# உயர் தேசிய டிப்ளோமாதாரிகளுக்கு நியமனம் கிடைத்தும் நிலையம் கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

உயர் தேசிய டிப்ளோமா திட்டத்தின் கீழ் நியமனம் பெற்ற பட்டதாரிகள் 6 பேர் இதுவரை எந்தவொரு நிலையத்திலும் கடமையை பொறுப்பேற்கவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

டிப்ளோமா பட்டதாரிகள் நியமனத் திட்டத்தின் கீழ் நியமனம் பெற்ற டிப்ளோமா பட்டதாரிகள் அரசாங்க அதிபரின் தற்காலிக நியமனக் கடிதத்தோடு தபால் அமைச்சில் இணைக்கப்பட்டனர்.

இவ்வாறு இணைக்கப்பட்ட உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகள் சம்பந்தப்பட்ட கொழும்பு தபால் அமைச்சுக்கு சென்றபோது அங்கு பயிலுநர் பட்டதாரிகளுக்கான இடமில்லையென தெரிவித்து கைவிரிக்கப்பட்டனர்.

இதனையடுத்து பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கொழும்பில் இருந்து மீண்ட பயிலுநர் யாழ்.அரச அதிபரிடம் முறையிட்ட போது மீளவும் ஓரிரு நாட்கள் யாழ்.செயலகத்தில் கையெழுத்திட்ட பின்னர் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

எனினும் இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்ட டிப்ளோமா பட்டதாரிகள் வவுனியா மாவட்ட செயலகத்திலும், இதுவரை கடமை நிலையம் வழங்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு உயர் தேசிய டிப்ளோமா திட்டத்தின் கீழ் நியமனம் பெற்ற பட்டதாரிகள் இதுவரை 6 பேருக்குமேல் பொருத்தமான இடமின்றி உள்ளதாக தெரியவருகிறது.

மேற்படி விடயம் தொடர்பாக உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகளின் பெற்றோர் யாழ்.அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# இலவச கருத்தரங்கும், சுயதொழில் கடனுதவியும்

கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் இரண்டாவது இலவச கருத்தரங்கு இன்று காலை 9 மணிக்கு கோப்பாய் கல்வியியற்கல்லூரிக்கு அருகாமையில் லயன். எஸ்.சிறிக்குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

விவசாயம், விலங்கு வேளாண்மை, மீன்பிடி, கோழி வளர்ப்பு தொடர்பான விளக்கங்கள் இக்கருத்தரங்கில் வழங்கப்படும்.

இக்கருத்தரங்கில் கலந்து கொள்கின்ற பயனாளிகளுக்கு சுயதொழில் உதவிக்கான கடன் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (08)


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

நியத்த ஜய
உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் - 301
திகதி - 2014.10.21
வர்ணம் - மஞ்சள்

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து

20 21 62 65 N

பரிசுத் தொகை ரூபா. 15,750,800/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 07 | 350,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 210 | 210,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 368 | 368,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9203 | 552,180/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 5164 | 206,560/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 120711 | 2,414,220/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17278 | 345,560/- |
| [illegible] | 15,750,800/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,446,520/- |


எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 15,987,500/-

2014.10.24ம் திகதி வெள்ளிகிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது நீல வர்ண டிக்கட்களாகும்
வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, [illegible]
[illegible], கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web. www.dlb.lk
(C/3536)

# மக்களை வறுமையில் வைத்திருக்க வியூகம் வகுக்கிறது கூட்டமைப்பு

## பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



(வடமராட்சி கிழக்கு)

மக்களின் நிறைவான இயல்பான வாழ்வியல் முன்னேற்றத்திற்கு வடக்கு மாகாணசபை எவ்வித திட்டங்களையும் இதுவரை கொண்டிருக்கவில்லை. அவர்கள் மக்களின் முன்னேற்றத்தில் தடைகளையும், இடையூறுகளையும் விளைவித்து மக்களை வறுமையின் பிடியில் வைத்துக்கொள்ள வியூகம் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள் என பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் ஜயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

மகிந்த சிந்தனையின் நிறைவான இல்லம், வளமான தேசம் எனும் நோக்குடன் வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் ஆறாம் கட்ட நிகழ்வு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் நடராசா திருலிங்கநாதன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை வடமராட்சி கிழக்கு, மருதங்கேணியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வீட்டுத்தோட்ட அபிவிருத்திக்காக, மனைப் பொருளாதார அலகுகளை வலுவூட்டும் நிகழ்வு நாடெங்கிலும் 14 ஆயிரத்து 22 கிராம அலுவலர் பிரிவுகளில் நடைபெறுகின்றது. வீட்டுத்தோட்ட அபிவிருத்தியின் மூலம் இரசாயன மற்றும் கிருமிநாசினி பயன்பாடற்ற தரமான மரக்கறி உற்பத்திகளை நாம் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

அத்துடன் எமது பொருளாதார தேவைப்பாட்டின் ஒரு சிறு பகுதியை இதன்மூலம் நிவர்த்தி செய்து கொள்ள முடிகின்றது. அரசாங்கம் வறுமையை ஒழித்து நிறைவான இல்ல வாழ்வை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்கு பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தி வருகினறது. கடற்றொழிலாளர்கள், பனை-தென்னை வளம் தொழில் சார்ந்தோர், சிறுதொழில்கள், கைத்றொழில்கள், விவசாயம் என பல்வேறு தொழில்புரிவோரின் வாழ்வியலை முன்னேற்ற முயன்று வருகிறது.

தையல் பயிற்சி பெற்ற பல யுவதிகள் தையல்தொழில் மூலமான வருவாயைப் பெருக்கிக் கொள்ள முயலும் பொழுது யுவதிகளை அரசபடைகள் அழைத்துச் செல்கின்றனர். படையில் சேர்க்கின்றனர் என விமர்சனம் செய்கின்றனர். வடக்கு மாகாணசபை ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவி அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவ ஏன் முன்வரவில்லை? எமது பகுதியில் யுவதிகள் தையல் பயிற்சிகளை முடித்துவிட்டு வேலை வாய்ப்பின்றி உள்ளார்கள். மாகாணசபை மக்களை வறுமையின் பிடியில் வைத்துக் கொள்வதால் தமது வறுமை அரசியலை தக்க வைத்துக் கொள்ள முடியும் என்பதை நன்கு தெரிந்து வைத்துச் செயற்படுகிறது.

மகிந்த சிந்தனையின் அடிப்படையில் மத்திய அரசாங்கம் பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களை தீட்டி நடைமுறைப் படுத்தி வருகின்றது. நகரப் பகுதிகள் போன்று அல்லாமல் எமது பகுதி வீட்டுத்தோட்டம் அமைக்கக் கூடிய இடவசதிகள் கொண்டுள்ளன. எனவே வீட்டுத்தோட்ட அபிவிருத்தியின் மூலம் எமது தேவைகளைப் பூர்த்தி செய்து நிறைவான இல்ல வாழ்வை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

# வேல்ட் மிஷன் கவுன்சில் நேற்று யாழில் முக்கிய சந்திப்பு



(யாழ்ப்பாணம்)


ஸ்கொட்லாந்தின் 'வேல்ட் மிஷன் கவுன்சிலின்' கிறிஸ்தவ சமய முக்கியஸ்தர்கள் குழுவொன்று நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு இந்து சமயத் தலைவர்களைச் சந்தித்துள்ளது.

நேற்றுக்காலை 11.00 மணியளவில் யாழ்.நல்லை ஆதீனத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது. இதில் தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள நிலைமை குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஸ்கொட்லாந்தின் தேவாலய சபையின் தலைவர் சன்டி சென்டென் தலைமையில் மூவர் அடங்கிய குழுவினருடன் நல்லை ஆதீன முதல்வர், ஸ்ரீ சின்மயா மிஷன் சுவாமி சைதன்யசுவாமிகள், இந்து சமய அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். சுமார் ஒரு மணிநேரம் இச்சந்திப்புக் கலந்துரையாடல் இடம்பெற்றது. (இ, 25)

# மூளை வளர்ச்சி பெரிதும் குன்றிய சிறுவர்களுக்கு உதவ முன் வாருங்கள்

## தம்பலகமம் பிரதேச செயலர் அவசர கோரிக்கை



தம்பலகமம் தி.சாரதா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் இரு இரட்டைச் சிறுவர்களின் சிகிச்சைக்கு அன்புள்ளங்கள் மனமுவந்து உதவுங்கள்.

தரம் இரண்டில் கல்வி கற்கும் இச்சிறுவர்கள் 'ஆட்டீசம்' எனும் மூளை வளர்ச்சி குன்றிய நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு மிக அவதியுறுகின்றனர்.

இச்சிறுவர்களுக்கு முன்வந்து உதவுவதன் ஊடாக மேற்படி நோயில் இருந்து காப்பாற்றலாம் என தம்பலகமம் பிரதேச செயலர் ஜெ.சிறிபதி உறுதிப்படுத்தி உதவுமாறு கோரியுள்ளார்.

மேற்படி தம்பலகமம் தி.சாரதி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களான சி.தரணி (வயது-7), சி.தருண் (வயது-7) ஆகிய இரட்டைச் சிறுவர்களின் 'ஆட்டீசம்' நோய்ப் பாதிப்பில் இருந்து காப்பாற்ற உதவுங்கள் எனும் தலைப்பில் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நடுப்பிரப்பந்திடல், தம்பலகமம் கிராமத்தில் வசிக்கும் குணரெட்ணம் தீபன் மற்றும் நாகப்பிள்ளை சிவனேசன் குடும்பத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்க,

இரட்டைச் சிறுவர்களான சி.தரணி மற்றும் சி.தருண் ஆகிய இரு சிறுவர்களும் சாதாரண குழந்தைகளைப் போல் அல்லாது பேச்சுத்திறன் குறைவாகவும், சொல்வதைப் புரிந்து கொள்ளும் தன்மையற்ற 'ஆட்டீசம்' எனும் மூளை வளர்ச்சி குன்றிய நோயினால் மிக அவதியுறுவதாக வைத்திய நிபுணர்களின் சான்றிதழ்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளனர்.

இந்நோய்க்கான மருத்துவ வசதி இல்ங்கையில் இல்லை. இந்தியாவில் மேற்படி நோய்க்கு சென்னை அண்ணாசாலையில் அமைந்துள்ள டீ.ஓ.ஏ.எஸ்.ரி. மருத்துவமனையில் சிகிச்சைக்காக இருவரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான செலவாக இந்திய ரூபாயில் 16 இலட்சம் தேவை என மதிப்பிடப்பட்டு உடன் கோரப்பட்டுள்ளது.

இப்பாரிய நோயில் இருந்து இவ்விரு இரட்டைச் சிறுவர்களைக் காப்பாற்ற இலங்கையில் உள்ள அன்புள்ளங்கள், நலன்விரும்பிகள், உறவுகள், வர்த்தகப் பெருமக்கள், வெளிநாட்டில் உள்ள புலம்பெயர் தமிழ் உறவுகளிடமிருந்து நிதி உதவிகள் உடன் கோரப்படுகின்றன.

எனவே உதவி செய்யும் பரோபகாரிகள் தம்பலகமம் இலங்கை வங்கிக் கிளையில் உள்ள (சி.கௌசல்யாதேவி) 7026609 என்னும் வங்கிக் கணக்கிற்கு நிதிகளை வழங்கி உதவுமாறு பிரதேச செயலர் ஜெ.சிறிபதி கேட்டுள்ளார்.

# புற்தரை மைதானத்தை பார்வையிட்டார் இலங்கை கிரிக்கெட் சபை உபதலைவர்



யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள புற்தரையிலான கிரிக்கெட் விளையாட்டு மைதானத்தை நேற்றுப் பகல் இலங்கை கிரிக்கெட் சபையின் உபதலைவர் லயன்.மொகான் டி சில்வா மற்றும் மாவட்டங்கள் மாகாணங்களின் இணைப்பாளர் சித்தார்த் பெர்னாண்டோ ஆகியோர் நேரில் வந்து பார்வையிட்டனர்.

யாழ்மாவட்டத்தில் முதல் தடவையாக புற்தரையிலான கிரிக்கெட் மைதானம் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இலங்கை கிரிக்கெட் அமைப்பின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட புற்தரையிலான மைதானம் எதிர்வரும் 29ஆம் திகதி சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்படும். அன்று ஒரு கிரிக்கெட் போட்டியும் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூயின் உப அதிபர் மற்றும் கல்லூரி கிரிக்கெட் பயிற்றுநர் நிசாந்தன், மாவட்ட இலங்கை கிரிக்கெட்டின் பயிற்றுநர் லக்சிதா, யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் சந்திரநாதன் ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் கிரிக்கெட் வளர்க்கப்பட வேண்டும். அதன் மூலம் யாழ்.மாவட்ட வீரர்களும் தேசிய அணியில் இடம்பெறவேண்டும் என்பதற்காகவே யாழ்ப்பாணத்திலும் புற்தரையிலான கிரிக்கெட் ஆடுகளம் அமைக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட்டின் உபதலைவர் மொகான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் அமைக்கப்படும் புற்தரையிலான கிரிக்கெட் ஆடுகளத்திற்கு இலங்கை கிரிக்கெட் அமைப்பினால் 25 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இது போன்று யாழ்ப்பாணம் மாவட்ட கிரிக்கெட் அமைப்பிற்கும், கழகங்களின் வளர்ச்சிக்காக 15 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இந்த புற்தரையிலான கிரிக்கெட் ஆடுகளத்தை அமைக்க யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர் நிசாந்தன் மற்றும் யாழ்.மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் லக்சிதா தமது பங்களிப்புக்களை முழுமையாகச் செய்துள்ளார்கள். இதன்மூலம் எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து சிறந்த கிரிக்கெட் வீரர்கள் உருவாக்கப்பட வேண்டும். இனம் காணப்பட வேண்டும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். தேசிய மட்டத்தில் அவர்களுடைய பங்களிப்புகளும் இடம்பெற வேண்டும் என்றார்.

# 'மனத்தெளிவு' நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகத்தின் உளசமூக பிரிவினால் நடாத்தப்படும் உளவளநாள் நிகழ்வும், 'மனத்தெளிவு' நூல் வெளியீட்டு நிகழ்வும் இன்று முற்பகல் 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் விசாலாட்சி சிவகுருநாதர் மண்டபத்தில் யாழ்.வலய முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சத்தியசாய் பாபா மனித மேம்பாட்டுக்கல்வி நிறுவனத்தின் பொறுப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.கணேசமூர்த்தியும், யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் நிறுவனத் தலைவி வைத்திய கலாநிதி திருமதி ஜே.கணேசமூர்த்தியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மனத்தெளிவு நூலினை யாழ்ப்பாணவலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் வெளியிட்டு வைப்பதுடன் அதன் வெளியீட்டுரையினையும் நிகழ்த்தவுள்ளார்.

நூலின் ஆய்வுரையினை உளமருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.சிவயோகனும், ஏற்புரையினை திருமதி ஜெ.புத்திரசிகாமணியும் நிகழ்த்தவுள்ளனர்.

இதேவேளை, மேற்படி நிகழ்விற்கு ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியரும், 10 மாணவர்களும் பங்கெடுத்தல் அவசியம் எனவும், நிகழ்வில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் நூலின் பிரதி இலவசமாக வழங்கப்படும் எனவும், பொறுப்பாசிரியர் சமூகமளிக்க முடியாதவிடத்து அதற்கான பதில் ஆசிரியர் கட்டாயம் சமூகமளிக்க வேண்டும் எனவும் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (03)

# விரைவில் 200 பேர் பரீட்சை மூலம் தெரிவாவர்

வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆட்பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் வகையில் புதிதாக 200 வெற்றிடங்களை நிரப்புவதற்கு போட்டிப்பரீட்சை நடாத்தப்பட்டுள்ளதாக வனவிலங்கு வளப் பாதுகாப்பு அமைச்சர் விஜய முனி சொய்சா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பதிரண எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்வளவு காலமும் சுமார் 60-70 வரையானவர்கள் யானை தாக்குதலால் கொல்லப்பட்டுள்ளனர். அதனைவிட வருடாவருடம் 250 யானைகள் வேறுபல காரணங்களால் இறக்கின்றன.

இவையனைத்தினையும் குறைக்கும் வகையில் எங்களால் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றுள் வன அதிகாரிகளின் எண்ணிக்கையினை அதிகரிப்பதும் ஒரு செயற்பாடாகும்.

அதிகமாக யானைகள் காட்டை விட்டு வெளியே வருவதன் பிரதான நோக்கம் தமக்குரிய உணவினைப் பெறுவதற்கேயாகும். இதனால் காட்டிலுள்ள தாவரங்கள் அழிக்கப்படாமல் பேணப்படுவதன் மூலமும் யானைகள் காட்டினை விட்டு வெளிவருவதனை தடுக்க முடியும்.

இவ்வாறான வேலைகள் வனஅதிகாரிகள் மூலமே அதிகமாக செயற்படுத்தப்படுகின்றன என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், வன விலங்கு பாதுகாப்பு திணைக்களத்திற்கு விரைவில் 200 வெற்றிடங்கள் நிரப்புவதற்கு போட்டிப்பரீட்சை நடத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# கனடா உள்ளூராட்சி தேர்தல்

# 30 இற்கும் மேற்பட்ட தமிழர் போட்டி

எதிர்வரும் திங்கட்கிழமை கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தின் உள்ளூராட்சிக் கட்டமைப்புக்களிற்கான தேர்தல் இடம்பெறவுள்ளது.

இத்தேர்தலில் ரொறன்ரோவிலும் அதனையண்டிய பகுதிகளிலும் 30 இக்கும் மேற்பட்ட தமிழர்கள் போட்டியிடுகின்றனர்.

இந்தத் தொகுதிகளில் வாழும் தமிழ் வாக்காளர்கள் வேட்பாளர்களாகப் போட்டியிடுவதால் தமிழர்களிற்கு தங்களின் வாக்கு சென்றடைய வேண்டுமென்று விரும்பினால் வேட்பாளரின் வாக்குறுதிகள், அந்த வேட்பாளரின் தனிநபர் ஆளுமை மற்றும் வெற்றி பெறுவதற்குரிய வாய்ப்பு போன்ற காரணிகளை அலசி ஆராய்ந்து தங்களின் வாக்குக்களை இடலாம் என கனடாவிலுள்ள ஆய்வாளர் சுரேஸ் தர்மா தெரிவித்தார்.

இத்தேர்தல் குறித்து தெரிவிக்கையில்,

உள்ளூராட்சியமைப்புக் கட்டமைப்பில் தேர்தலிற்குப் போட்டியிடுபவர்கள் எந்தக் கட்சி சார்பாகவும் போட்டியிடுபவர்களாக இல்லாது தங்களை முன்னிலைப்படுத்தியே இந்தத் தேர்தலில் போட்டியிடுவார்கள். எனவே தனிநபர் சார்ந்த பிரசாரங்களும் பிரசார யுக்திகளுமே முன்னிலைப்படுத்தப்படும்.

ஒரு வாக்காளர் தனது பிரதேசத்திற்கான உள்ளூராட்சிக் கட்டமைப்பில் உள்ள கல்விச் சபை உறுப்பினர், நகரசபை உறுப்பினர், மாநகர முதல்வர் ஆகியோரைத் தேர்வு செய்வதற்கும், சில பிரதேசங்களில் வசிப்பவர்கள் தங்களின் மாநகர எல்லைக்குட்ட மேற்படி மூன்று பிரதிநிதிகளிற்கும் மேலாக பிராந்திய உறுப்பினர் ஒருவரையும் தெரிவு செய்யலாம்.

# வாகனத்துடன் மோதுண்டு இளைஞர் ஸ்தலத்தில் பலி

பருத்தித்துறை, மருதடி முருகன் ஆலயப் பகுதியில் தரித்து நின்றிருந்த மின்சார சபையின் கன்ரர் ரக வாகனம் மீது மோட்டார் சைக்கிளொன்று மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 9.45 மணிக்கு இடம்பெற்ற இந்த விபத்தில் பருத்தித்துறையைச் சேர்ந்த தவராசா கண்ணதாசன் (வயது - 21) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# "கத்தி"யை வாழை, தோரணம் கட்டி வரவேற்ற யாழ்.இளைஞர்கள்



(யாழ்ப்பாணம்)

தீபாவளி தினமான நேற்று திரையிடப்பட்ட 'கத்தி' திரைப்படத்தினை காண இளைஞர் கூட்டம் திரண்டது. நேற்று அதிகாலை முதல் யாழ்.செல்வா திரையரங்க வாயிலில் முகாமிட்ட இரசிகர்கள் கூட்டம் இரவு நேர காட்சி வரை அலைமோதியவண்ணமே இருந்தது.

வாழை, தோரணம் கட்டி மிகச்சிறப்பாக இப்படம் நேற்று வெளியிடப்பட்டது. திரையரங்க வாயிலில் பொலிஸாரும் கடமைக்காக நிறுத்தப்பட்டிருந்தனர். வைத்தியசாலைக்கு முன்பாக பெரும் எடுப்பில் விஜய் இரசிகர்கள் ஆரவாரமாக வெடி கொழுத்தி கத்தி திரைப்படத்தினை வரவேற்றனர்.

# சுனாமி ஒத்திகை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் உள்ள வல்வெட்டித்துறை வடமேற்கு ஜே/388 வல்வெட்டித்துறை தென்மேற்கு ஜே/391 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கி இன்று பிற்பகல் 3 மணிக்கு தேசிய சுனாமி ஒத்திகை இடம்பெறும்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வேண்டுகோளிற்கிணங்க தேசிய ரீதியாக சுனாமி ஒத்திகையே இவ்வாறு நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறும், இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத்தேவையில்லை என யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் அறிவித்துள்ளார்.

# சுற்றாடல் - வன சர்வதேச மாநாடு

(கொழும்பு)

சுற்றாடல் அமைச்சின் அனுசரணையுடன் நடத்தப்படும் சுற்றாடல் மற்றும் வன விஞ்ஞானம் தொடர்பான சர்வதேச மாநாடு எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக சுற்றாடல் மற்றும் வன விஞ்ஞான பிரிவினால் நடத்தப்படும் இச்சர்வதேச மாநாடு சுற்றாடல் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் சீகிரிய அலியா ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

சுற்றாடல் அமைச்சின் கீழியங்கும் பல்வேறு நிறுவனங்களுக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை பெற்றுகொடுப்பதே இம்மாநாட்டின் நோக்கமாகும்.

## முன்னாள்...

களின் கருத்தாக உள்ளது. இதனையடுத்து ரணில் விக்ரமசிங்கவுக்கு ஜனாதிபதி தேர்தலில் ஆதரவளிப்பதற்கும், அவரது வெற்றிக்காக பாடுபட வும் சரத் பொன்சேகா தீர்மானித்துள்ளார்.

இதற்கான அறிவிப்பு இன்னும் ஓரிரு நாட்களில் வெளியாகும்.

## மனித உரிமைகள்...

ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். இதேவேளை, அண்மையில் தலைவர் சம்பந்தன் தலைமை யிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் குழு இந்தியா சென்றதுடன், பல்வேறு தரப்பினரையும் சந்தித்து இருந்ததுடன் பிரதமர் மோடியையும் சந்தித்து இருந்தனர்.

இதன்போது வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனைச் சந்திக்க மோடி விருப்பம் தெரிவித்திருந்தார். எனினும் சம்பந்தன் தலைமையிலான குழுவினர் முதலமைச்சரை இந்தியா அழைத்துச் செல்லவில்லை என் பது குறிப்பிடத்தக்கது.

## இளவாலையில்...

அயலவர்கள் இளவாலை பொலிஸ் நிலையத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். இதன் பிரகாரம் வீட்டிற்கு சென்ற இளவாலை பொலிஸார் மூதாட்டியின் சடலத்தினை பார்வையிட்ட போது சடலத்தில் வெட்டுக் காயம் இருந்ததை தொடர்ந்து மூதாட்டி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் இருப்பதாக இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கொலை நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றி ருக்கலாம் என்றும் இளவாலை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். மல்லாகம் நீதிமன்ற நீதிபதி சடலத்தினை பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கவுள்ளதாகவும், கொலைச் சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வருகின்றதாகவும் இளவாலை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (25)

## இலங்கை...

எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கியது. உயிருக்கு போராடிக் கொண்டிருந்த ஜோட்சை மீட்டு தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பின்னர், மேலதிக சிகிச்சைக்காக, பெங்களூர் கொண்டு செல்லும் வழியில் ஜோட்ச் மரணமடைந்தார்.

## வைத்தியசாலையின்...

இவ்விடயத்தில் கவனம் செலுத்திய அமைச்சர் துறை சார்ந்தோருடன் கலந்துரையாடி உரிய தீர்வினை விரைவில் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படு மெனத் தெரிவித்தார். இதேநேரம் ஆனந்தபுரம், இரணைப்பாலை, சிவநகர் கிராமத்தின் ஒருபகுதி உள்ளிட்ட பகுதிகளில் குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் தாம் இடர்பாடுகளை எதிர்நோக்குவதாக மக்களால் தெரிவிக்கப்பட்டது.

குடிநீரைப் பெற்றுத் தருவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படு மென்றும், படைத்தரப்பினரின் வசமுள்ள பொதுமக்களின் காணிகளைப் மீளப்பெறுதல், வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடான மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளல், சமுர்த்தி நிவார ணம், குளங்களின் புனரமைப்பு, வீடுகளின் புனரமைப்புக்கான நிதியுதவி, புதுக்குடியிருப்பு சந்தை மீள்புனரமைப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலையில் மாதமொன்றுக்கு 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் சிகிச்சைப் பெற்று வரும் நிலையில் அதன் தரத்தை மேலும் மேம்படுத்துவது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டது. இதனிடையே ஏனைய பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் அமைச்சர் துறைசார்ந் தோருடன் கலந்துரையாடி கேட்டறிந்து கொண்ட அதேவேளை, உடனடியாக தீர்வு காணப்பட வேண்டிய விடயங்களை துரிதமாக முன்னெடுக்குமாறும் துறைசார்ந்தோருக்கு பணிப்புரை விடுத்தார்.

இதன்போது புதுக் குடியிருப்பு பிரதேச செயலர் பிரதாபன், அமைச்சரின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஜெயராஜ் (கிருபன்) ஆகியோர் உடனிருந்தனர்.

## இரு குழுக்களாக...

வாதங்கள் கருத்து நிலைகளுக்கு வடமாகாண சபை பேரவை மேல் நிலையாளர்கள் வேண்டுமென்று பிரேரணைகள், வாதங்களை இருட்டடிப்புச் செய்வதாகவும், முதலமைச்சரையும், ஏனைய சபை உறுப்பினர்களையும் திருப்திப்படுத்தும் சபை உறுப்பினர்களது பிரேரணைகள் எந்த வித தடைகளும் அற்ற நிலையில் முன்னிலைப்படுத்தி முன்வைப்பதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. மேலும் முன்னாள் ஆயுதம் தரித்த கூட்டமைப்பின் அதிருப்திக்குழு சபை உறுப்பினர்கள், ஆயுதம் தரியாத கூட்டமைப்பு சபை உறுப்பினர்கள் என்ற மேல்நிலை வாதம் வடமாகாண சபையில் ஓங்கியுள்ளது.

இதனால் இரு அதிருப்தியாளர் குழுவும் போட்டி போட்டுக்கொண்டு ஊடகங்களில் கருத்து மோதல்களில் ஈடுபடுவது உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. மேலும் வடமாகாண சபை அதிருப்திக் குழு மேல் ஓங்கிய நிலையில் இதற்குச் சார்பானதும், எதிரானதுமான கருத்தியல் வாதங்களைக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேலும் பிரச்சினையை வலுவாக்கக் கூடிய நிலையில் ஊடகங்களுக்கு கருத்துக்கள் முன்வைப்பதும், பின்னர் எதிர்க்கருத்துக்களும் முன்வைப்பது என்பது கடந்த இரு வாரங்களாக உச்ச நிலையை அடைந்துள்ளது.

எனினும், வடக்கு மாகாண முதலமைச்சர் தொடர்ந்தும் முன்னாள் ஆயுதம் தரித்த கூட்டமைப்பு வடமாகாண சபை உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு இடமளியாத நிலையும், பிரேரணைகள், வாதங்களுக்கு இடம்கொடுக்காத நிலையும் வலுத்து வருகிறது.

இதனால் முன்னாள் ஆயுதம் தரித்த வடக்கு மாகாண சபை ஆளும் கட்சி உறுப்பினர்கள், ஆயுதம் தரியாத வடமாகாண சபை ஆளும் கட்சி உறுப்பினர்கள் என்ற இரு குழுவாக வடமாகாண சபை விரைவில் உடைந்து கூட்டமைப்பின் வடமாகாண சபை இரு கூறுகளாகலாம் எனக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கொழும்பு ஊடகவியலாளர்கள் மத்தியில் தெரிவித்ததாக தெரிய வருகிறது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஒக்ரோபர் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.